# பெண்ணே போற்றி ....

மருதமுனை



8113

எஸ். நஸீறுதீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894-8113
நஸீறு

# பெண்ணே போற்றி...!

சிறுகதைத் தொகுதி

எஸ். நஸீறுதீன்

வெளியீடு
மறுமலர்ச்சி சமூக மேம்பாட்டமைப்பு
அக்கரைப்பற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு: பெண்ணே போற்றி...!
(சிறுகதைத் தொகுதி)

ஆசிரியர்: எஸ்.நஸீறுதீன்
"றிபாயா மன்ஸில்"
முஅத்தினார் வீதி,
அக்கரைப்பற்று-02.

வெளியீடு: மறுமலர்ச்சி சமூக
மேம்பாட்டமைப்பு
அக்கரைப்பற்று.

முதற்பதிப்பு: 1999-09-05

பதிப்புரிமை: பதிப்பாசிரியர்.
Dr.எஸ்.நஜிமுதீன்,
வைத்தியசாலை வீதி,
சாய்ந்தமருது.

அட்டைப்படம் வடிவமைப்பு: ஜே.ஹாஸிம்

பக்கங்கள்: நூற்றியிரண்டு (102)

பிரதிகள்: ஐந்நூறு.

விலை: எண்பது ரூபா
(80/=)

அச்சுப் பதிப்பு: டெக்னோ வீஸஸ்
அக்கரைப்பற்று. (T.P.067-78069)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...

01. போதுமடி நீ எனக்கு.

02. இனியெ(ல்)லாம் மனமே....

03. பாம்பின் கால்.

04. சந்தோசத் தோல்வி.

05. உங்கட ஆட்கள்.

06. சரிகாணல்.

07. சும்மா இருத்தலே சுகம்.

08. அன்பின் வழியது.

மருதமுனை பொது நூலகம்
நகர சபை
மருதமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வாப்பா மர்ஹூம் யாசீன்லெப்பை ஆலிம்
சிஹாப்தீன் அவர்களுக்கும்
தாயார் மரியம் நாச்சி சிஹாப்தீன்
அவர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சாய்ந்தமருது கலை இலக்கிய வட்டம் சார்பாக எழுத்தாளர் எஸ். நஸீறுதீன் அவர்களின் 'நல்லதோர் வீணை செய்தே' சிறுகதைத்தொகுதி வெளியீட்டின் பின்னர் மீண்டும் ஒரு பரீட்சையில் இறங்கியுள்ளோம். அப்போது முகங்கள் தெரியாத நிலையில் எமது முதலீடு பெரிதாய் இருந்தது. அளவான முதலீட்டுடன் அழகான அமைப்பாக இரண்டாவது பதிப்பைக் கொணருகிறோம்.

முறுவலிக்கும் முகங்கள் முன்னர் கூட முட்டாக இருந்ததில்லை. எனினும் சலைக்காமல் எம்மையும் தொலைக்காமல் எமது இலக்கியப் பசிக்குத் தீனியிட நினைக்கிறோம்.

விளையும் பயிரின் பயன் சமூகத்திற்குரியது. எனவே பயிருக்கு முளையாயில்லாவிடினும் துணையாயிருக்கிறோம் இதன் விளைச்சல் வெற்றிபெற யாசிக்கிறோம்.

இந்த எழுத்தாளரினைப்பற்றி சொல்வதற்கு என்னால் இயலவில்லை. எனினும் அவரது கதைகளைப்பற்றி நிறைய எழுதமுடியும். இங்கு என் பணி அதுவுமல்ல. ஒன்றைமட்டும் சொல்லலாம்; அவரது கதைகளினூடு அவரை இனங்காண முயலுங்கள். யார் சாயலும் பூசாமல் கதைகளை பக்கம் சாராமல் படியுங்கள். உங்கள் மதிப்பீடுகளை எங்களுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகத்துக்காய் முகவுரை தந்துதவிய கல்வியியலாளர் அல்ஹாஜ் SHM. ஜெமீல், மறுமலர்ச்சி சமூக மேம்பாட்டமைப்பினர், மற்றும் ஏனையோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

நன்றிகள்.
Dr. S. நஜிமுதீன்.
M.B.B.S (Sri Lanka)
DFM. (Sri Lanka)
'தாருன்னஜ்ம்', சாய்ந்தமருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.H.M. JAMEEL
B.A.(Sp):Dip in Edu.M.A.

1999.01.05

அன்புள்ள நஸீறுதீனுக்கு,
அஸ்ஸலாமு அலைக்கும்

3.1.1999 ஆம் திகதிய தினக் குரலில் உங்களது 'பாம்பின் கால்' சிறுகதையை வாசித்தேன். அதற்கு முன்னரும் இடையிடையே சில கதைகளை வாசித்தேன். அவை யாவும் நன்றாயிருக்கின்றன. எனது பாராட்டுகள்.

நீங்கள் தெரிவு செய்யும் கருவும் கதைப்போக்கும் சொல்லும் முறையும் சிறப்பாயுள்ளன. வருங்காலத்தில் மேலும் சிறப்படையுமென எதிர்பாக்கிறேன்.

அவ்வாறு சிறப்படைவதற்கான ஒரு வழி அதிகமதிகம் பிறமொழிக் கதைகளை வாசிப்பதாகும்.

ஒரு குறிப்பு : பிராந்தியப் பேச்சு வழக்கை இயன்றவரை குறைத்துக்கொண்டால் நாட்டின் ஏனைய பகுதி வாசகர்களிடையேயும் இலகுவாகப் பிரபல்லியம் பெறும்.

அன்புடன்
ந. மதுமதி, திருநெல்வேலி
17.09.95.

சரிகாணல் சிறுகதை மிகச்சிறப்பாக அமைந்து, உணர்வை வடித்திருந்தது. விடயங்களை, உணர்வுகளை எழுத்தில் வெளிப்படுத்தியிருந்த திறன் கு.ப.ரா, புதுமைப்பித்தன் போன்ற சிறுகதை ஆசிரியர்களை நினைவு படுத்தின. இந்தச் சரிகாணலுக்கு என் போன்ற பலபேர் ஆட்பட்டிருப்பர் என்பது திண்ணம்.

அன்புடன்
ந. மதுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'ILAKKIYA MANI'*
*KALABHUSHANA*
*A. Iqbal*
*Dharga Town,*
*03.01.99*

அன்பின் நஸீறுதீன் அவர்களுக்கு,

1

கடிதம் கண்டேன்; மகிழ்ச்சி. சமயம் எனும்போது - அது இஸ்லாம் என்றால் மனித குலத்திற்குரிய மதமது. அந்த மதந்தான் இங்கில்லையே! அதன் யாப்பு அல்லாஹ், ரஸூல் எனும் வஹி மட்டும்தான். ஒரு தலைமை, கட்டுப்பாடு, மானிடதர்மம் எல்லாம் அதில் உண்டு. இவர்கள் ஹறவ்ளில்-நஜீஸில் வுழுஹ் செய்கிறார்கள். வஹியின் கட்டளைக்கு மாறாக யாவும் செய்கிறார்கள். இவர்கள் மதம் பற்றிப் பேசமுடியாது. சமூகம் பற்றிப் பேசலாம். 'போதுமடி நீ எனக்கு' சமூகத்தில் உள்ள யதார்த்தம். இதை அப்பட்டமாக எடுத்துச் சொன்னால் என்ன? அது கணவன் இல்லாத ஒரு குடும்பத்தில் உள்ள நடவடிக்கை. கணவன் உள்ளபோதே இரண்டாம் கதாநாயகன் உள்ள கதையை அப்பட்டமாக எழுதினால் இவர்கள் கீரிட்டுக் கத்துவார்கள். இவர்கள் பற்றிக்கவலை கொள்ள வேண்டாம். நான் எழுதாமல் இருக்க முடியாததற்காக எழுதுகிறேன். நீங்கள் வரித்துள்ள கொள்கையை வைத்து எழுதித்தள்ளுங்கள்.

01.08.1998

2

'இனியெ(ல்)லாம் மனமே' இன்று காலை இரு தடவைகள் படித்தேன் அதன் Technique - உத்தி பிரமாதம். தனி மனித உழைச்சல்கள் எனத்தள்ளிவிட முடியாது. இவ்வுழைச்சலுள்ளோர் தனித்தனியே நின்றாலும் ஒரு கூட்டுத்தான். சமூகத்தில் மிதந்து நிற்கும் இச்செயற்பாட்டினைச் சமூகம் தாழ்த்தி அடியில் படிய வைக்க நினைக்கின்றது. எனவே இவ்விதக் கதைகள் பல கோணங்களில் எழுதப்பட வேண்டும். அந்த நிதானம் உங்களிடம் உண்டு. நிறைய எழுதுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகுமானவைகளை அடக்கிய ஒரு சமூகத்தை ஆக்கிய பின்தான் ஆகாதவைகளைக் கண்டிக்கமுடியும். அதற்குத் தண்டனையும் கொடுக்க முடியும். முற்றிலும் ஆகாதவைகளை அடக்கிய சமூகம் ஆகுமானதுபற்றி கதைப்பதே வியப்பு. இந்த அடிப்படையில் ஒரு மனிதன் நியாயமான அளவு அவனது வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கவேண்டும். அவ்வித வாழ்க்கை அமையவேண்டும். இந்த அமைவு ஏற்படாமல் ஏதேதோ மழுப்பி நிற்கும் சமூகம்மத்தியில் உங்கள் சிறுகதைகள் எதிர்ப்புகளை ஏற்படுத்தும். அப்படி நடந்தால்தான் வெற்றி உண்டு. நிறைய எழுதுங்கள். நல்வாழ்வுக்குப் பிரார்த்திக்கிறேன். எல்லோரும் வாழப் பிரார்த்திப்போம்.

இங்ஙனம்,
ஏ.இக்பால்

திவ்ய பிரகாஷ்,
17.09.95.

10.09.95 இல் வெளிவந்த 'சரிகாணல்' சிறுகதையை ஆழ்மனம் வரை உள்வாங்கினேன். உங்களுக்கு எனது அன்பை வெளிப்போந்துகிறேன். சிறுகதையில் பூரண விழுமியங்களும் வந்து விழுந்துள்ளன. இறுதியில் வரும் 'சிலருக்கு சரிகாணல் என்பது சிந்தனை மூலம் அல்லது சிறு இழப்புகளின் மூலம் கிடைக்கலாம்' என்ற வாக்கியத்தில் வாழ்க்கையின் தத்துவமே பொதிந்துள்ளது என்பதே என் நிலைப்பாடு. வளமான எழுத்துலகம் ஆசிரியருக்கு கைகூடும் என்பது என் நம்பிக்கை.

என்றென்றும் அன்புடன்
திவ்ய பிரகாஷ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Miss. ISSATH RIHANA.
SAINTHAMARUTHU 16
1997.10.26.

சுகப்பிரார்த்தனைகளுடன்,
மனதை உசுப்பிவிடாத எந்தப்படைப்பும் உயிர்வாழாது என்பார்கள். உங்களது கதைகள் மனதை மட்டுமன்றி உயிரையே சிந்திக்க வைக்கின்றன. சரிகாணல் என்ற கதையின் ஒவ்வொரு வார்த்தையும் தத்துவ விசாரணைகளும் ஆழமானது; சிந்திக்க வைப்பவை.

பாத்திரங்கள் தாம் படைக்கப்பட்ட நோக்கத்ததை சரிவர நிறைவேற்றி உள்ளன. மேலும் இதுபோன்ற சிறந்த கதைகளை எதிர்பார்க்கிறேன். இப்படிக்கு பிரிய வாசகி.

* * *

தாரகை தௌபீக்,
பிஸ்கால் வீதி,
அக்கரைப்பற்று-02.
சமகாலச் சிறுகதைகளின் போக்கோடு ஒத்துப்போகும் தன்மை போதுமடி நீ எனக்கு சிறுகதையில் காணப்படுகிறது. மாமனார் என்ற பாத்திரத்தின் மூலம் அரசியல் வாதி ஒருவரின் போலித்தனமான வேடங்களை ஓரளவிற்கேனும் சித்தரிப்பதில் கதாசிரியர் வெற்றி கண்டுள்ளார். ஆனாலும் விதி மரபுச் சிறுகதைக்குரிய தொனிப்பொருளே கதை முழுவதும் இழையோடிப் போயிருப்பது அவ்வளவு பொருத்தமானதாகத் தோன்றவில்லை. ஒரு விதவையின் நல்வாழ்வுக்கும், நன்னடத்தைக்கும் தனது எழுத்துக்களால் ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டிய இலக்கிய சிருஸ்டிகர்த்தா அன்ரியை வெறும் பாலியல் விரகதாப உணர்வுகளைத் தூண்டும் பாத்திரமாகப் படைத்துள்ளமை சமூக முன்னேற்றத்திற்கும் ஒழுக்க விழுமியத்திற்கும் சவாலாக அமைந்துள்ளமைபோல் எண்ணத்தோன்றுகின்றது. என்றாலும் ஒரு இளைஞனின் சலனமும் நகர்ப்புற வாழ்க்கையின் பகட்டுத் தன்மையும் இக்கதையில் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

1997 ஆம் ஆண்டில் 'நல்லதோர் வீணை செய்தே' எனும் சிறப்பான கதைத்தொகுதியை வெளியிட்ட இளம் கதைஞர் எஸ்.நஸீறுதீன் அவர்கள் தமது இரண்டாவது தொகுதியான 'பெண்ணே போற்றி...' என்பதனை இப்போது வெளியிடத் துணிந்துள்ளமை பாராட்டுக்குரியதே.

எழுத்தும் வாசிப்பும் அருகிக்கொண்டு செல்லும் ஒரு கால கட்டத்தில், அத்துறைகள் என்றும் பயனுடையனவே என்றும்; அவற்றின் மூலம் இலக்கியம் வளர்த்தல் வேண்டும் எனும் பண்பாட்டினை வரித்துக்கொண்டு சிறுகதைத் துறையில் தனது இலக்கியப் பணியை நஸீறுதீன் ஆற்றிவருகிறார்.

இந்நூலாசிரியர் எனது மாணவன் என்பதிற் பெருமைப்படுகிறேன். பாடசாலைப் பருவத்திலேயே கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியவர். அந்நிலையிலிருந்து பரிணாம வளர்ச்சிபெற்று வளர்ந்தோனாகி, கற்றவனாகி, ஆரவார உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் அவர், தன்னிலை நின்று அவ்வுலகத்தையும், அதன் மக்களையும், அவர்களது வாழ்வு முறைகளையும் அமைதியாகப் பார்க்கக்கூடிய பக்குவத்தைப் பெற்றிருக்கிறார். பாரம்பரியமாகப் புத்தி ஜீவிகளைக் கொண்ட ஒரு குடும்பத்தின் அங்கத்தினர் என்பதும் ஒரு காரணமாயிருக்கலாம்.

'பெண்ணே போற்றி....' எனும் இத்தொகுதி எட்டு சிறுகதைகளைக் கொண்டது. 'பாம்பின் கால்' எனும் கதையை ஒரு ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் வாசித்தபொழுது, கதைசொல்லும் பாங்கினால் கவரப்பட்டு, உடனடியாகவே நஸீறுதீனுக்குப் பாராட்டுக் கடிதமொன்று அனுப்பியது ஞாபகத்திற்கு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது சிறுகதையான 'போதுமடி நீ எனக்கு' சமுதாயத்தில் வெளிச்சம்போட்டுக் காட்டப்படும் பக்கம் ஒன்று மட்டுமல்லாது, இருட்டிலே ஒளிந்திருக்கும் மறு பக்கமொன்றுண்டு என்பதைக் காட்டுகின்றது. அக்கதையில் வரும் நிகழ்வுகள், "மோகம், மூச்சு, பரமானந்தம், சத்திய நிகழ்வு எல்லாவற்றையும் விட இந்த இளம் பெண்ணின் மனக்காயங்களும் அதனால் அவள் பெறப்போகும் படிப்பினைகளும், குடும்ப உறவு முறைகளும் இந்தச் சமூக அமைப்பில் அத்தியாவசியமானவையென அறிந்து கொண்டேன்." என்பதையே கதையின் அடிநாதமாகக் கொண்டுள்ளன.

தத்துவத்தேடலின் ஓர் அம்சத்தை விளக்குகிறது இரண்டாவது கதையான 'இனியெலாம் மனமே'. பாகற்காய் கசக்குமெனக்கருதி அதைக்கடித்துச்சாப்பிட விரும்புவதில்லை. ஆனால் குழந்தைப் பருவத்திலிருந்தே விரும்பும் ஒரு உருசியாக உண்ணப்பழகிவிட்டால் அதுவும் ஒரு விருப்ப உணவாக மாறிவிடுமல்லவா? வாழ்க்கையும் அவ்வாறே!

இக்கதையில் மட்டுமல்ல, எல்லாக் கதைகளிலும் கதாசிரியர் கைக்கொள்ளும் உதாரணங்கள் பொருத்தமான நவீனத்துவமுடையன வாயுள்ளன. உதாரணத்துக் கொன்று: "பஸ்ஸில் ஏகப்பட்ட சன நெரிசலாயிருந்தது. நின்றுகொள்ள கைக்குப் பிடிமானமே தேவைப் படவில்லை......... முன், பின் என இருபுறமும் ஏகப்பட்ட ஆட்கள் அவனது சமநிலையைத் தாங்கிக் கொண்டார்கள். பஸ் நாறிற்று. காலையில் பூசிய பவுடர், தெளித்த சென்ற், போட்ட வேசமெல்லாமே கலைந்து இந்த நேரம் (மாலை நேரம்) மனிதர்களின் சுயநாற்றம்தான் என்னமாய் வெளிக்கிடுகிறது."

எனக்குப் பிடித்த கதைகளுள் ஒன்று மூன்றாவதான 'பாம்பின் கால்'; அதற்காக, ஏனையவை பிடிக்காதவை என அர்த்தம் கொண்டுவிடலாகாது. நகரப்புறங்களிலே புறச் செய்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் அன்பு, மோகம், பாசம் என்பவற்றைவிடப் பலமான அடித்தளத்தைக் கொண்ட பாசப்பிணைப்புகளைச் கிராமக் குடும்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவித ஆவாரமுமின்றி மௌனமாகத் தம்மிடத்தே கொண்டுள்ளன எனும் வலுவான நிலையினை வெளிப்படுத்துகிறது இக்கதை. வெளியில் சென்று வரும் வாப்பா வீட்டினுள் நுழையும் பொழுது ஒரு மகனினதோ, மகளினதோ பெயரை உரத்துக் கூப்பிட்டுக்கொண்டே வருவது காலாதிகாலமான மரபாகும். ஆனால் அவ்வாறு கூப்பிட்டாலும் முன்னேவந்து வரவேற்பது மனைவிதான். “அவர் (மகள்) நிஷாவைக் கூப்பிட்ட போதிலும் ஒரு முறைகூட நிஷா அவர் முன்பிரசன்னமானதில்லை. உம்மாதான் கதவைத் திறந்தபடி முகம் நிறைந்த சிரிப்புடன் அவரை உள்வாங்குவது வழக்கம். அதில்தான் அவருக்கு ஏகப்பட்ட சந்தோஷம் இருந்தது; உம்மாவுக்கும் கூட. அப்போது உம்மாவின் முகம் மலர்ந்து கண்ணும் சிரித்தபடி நிற்பதைக் காணக் கண்கோடி வேண்டும்”.

அடுத்த கதையான ‘சந்தோஷத் தோல்வி’ நட்பின் ஆழத்தையும் பிடிப்பையும் விளக்குகிறது. வாழ்க்கையில் வெற்றிச் சம்பவங்கள் மட்டுமல்ல; சில வேளைகளில் தோல்வியும் மகிழ்ச்சியைத் தரும்.

மிகவும் யதார்த்தமான சூழ்நிலையைக் காட்டுவது ‘உங்கட ஆட்கள்’ கிழக்கு மாகாணத் தமிழரும், முஸ்லிம்களும் பன்னூற்றாண்டுகளாகச் சகோதர பாசத்துடன் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தவர்கள். அயலையூர் கிராமங்களில் எவ்வித பிசிறு பிணக்கின்றி வாழ்ந்தோர். எனினும் 1980களில் வெளியாரினாற் தூண்டி விடப்பட்ட வன்முறைகளினால் அல்லல்பட்டனர். அத்தகைய துன்பியலூடாகவும் அவர்களது உறவுகள் செத்து விடவில்லை எனக் காட்டுகின்றன இக்கதையின் சம்பவங்கள்.

‘சரிகாணல்’, ‘சும்மா இருத்தலே சுகம்’ ஆகியவை குடும்ப வாழ்க்கையின் ஆசாபாச பந்தங்களையும், பற்றுக்களையும், பிரிவுக்கோடுகளையும் காட்டுவனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிக்கதையான 'அன்பின் வழியது', அறிஞன் ஹொட்சன் சொன்னதன்படிதனிமனிதஆளுமைக்கும் கடமைக்கூறுக்குமிடையேயான மனப்போராட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

பொதுவாக, சிறுகதையாசிரியர்கள் தமது கதை முடிவில் 'யாவும் கற்பனை' என முத்திரையிடுவார்கள். தன்னைப்பற்றிக் கிண்டல் செய்து எழுதப்பட்ட விமர்சனக் குறிப்பே இதுவெனக் கூறிக்கொண்டு எவராவது போர்ப்பிரகடனம் செய்யாதிருப்பதற்கான கவசமே இதுவாகும். ஏனெனில் ஒவ்வொரு கதையினதும், கவிதையினதும் கரு உருவாக்கம் யதார்த்த சூழ்நிலையிலிருந்தே உருவாகின்றது. அதனைக் கூட்டியும், குறைத்தும், திருத்தியும், புதுக்கியும், இல்லன கூறி உள்ளன விரித்து எழுதும் பொழுது கதையும் கவிதையும் வடிவம் பெறுகின்றன. ந்தவகையில் நஸீறுதீனின் கதைகளின் கருக்களும் எங்கோ, எப்போதோ நடந்ததாக மட்டுமல்லாது எம்மையும் அதனுடன் இணைக்கின்றது. அத்துடன் தன்னிலையிலிருந்து சம்பவங்களைக் கூறித் தம்மையே அவர் ஒவ்வொரு சம்பவத்துடன் இணைத்துக் கொள்கிறார்; வாசகர்களையும் அத்துடன் ஒன்ற வைக்கிறார். அதனால் வெற்றியடைகிறார்.

நஸீறுதீன் அவர்களின் சிருஷ்டி இலக்கியப்பணி வளரவும், மெருகேறவும் அல்லாஹ் துணை செய்வானாக!

அல்ஹாஜ் எஸ்.எச்.எம்.ஜெமீல்
ஆலோசகர்
கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு
05.07.1999

மருதமுனை பொது நூலகம் கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

உலகத்தில் தற்போதைக்கு பத்துப் பேரளவிலேயே உண்மையில் சிறுகதை படைக்கிறார்கள் என ஒரு புத்தகத்தில் படித்த ஞாபகம். இங்குள்ளவை சிறுகதைகள்தானா, அதன் வரையறைக்குள் வருகின்றனவா என்பதையெல்லாம் ஆராய்வுக்குரியவர்களுக்கு விட்டுவிடுகிறேன்.

எனது முதல் சிறுகதைத் தொகுப்பான 'நல்லதோர் வீணைசெய்தே...!' யைப் போலல்லாது இதற்காகவாவது ஒரு பேராசிரியரிடம் இருந்து முன்னுரை பெற்றுப் போடலாமே எனப் பலரும் சொன்னார்கள். என்னால் அதற்கு உடன்பட இப்போதும் முடியவில்லை. பொதுவாக இலக்கியம் செய்பவர்கள், அதை விரும்புபவர்கள் பேதம் கடந்த மனதால் குழந்தைகள் என்றொரு அபிப்பிராயம் இருக்கிறது. ஆனால் இங்கு உண்மை அப்படியில்லை என்பது புரியும்போது மனது அழும். பேராளி மா-ஓ சேதுங் சரியாகவே சொல்லி வைத்திருக்கிறார். பயங்கரவாதம் செய்பவர்களைவிட படித்தவர்கள் மௌனமாக அதைப் பார்த்துக் கொண்டிருப்பதுதான் மிகப் பெரிய பயங்கரவாதம் என்று. நாம் நடைமுறையில் காண்பவற்றைவிட அசிங்கமான, அழுத்தமான பயங்கரங்களை இந்த இலக்கிய உலகில்தான் காணமுடியும் என்று படுகிறது.

நாம் இன்றைக்கு பெருமையாய் மார்தட்டிக்கொள்ள நிறைய விஷயங்கள் உண்டு. சந்திரனைப் பார்த்தாயிற்று உலகைச் சுருக்கி ஒரு வலையமைப்பில் ஆக்கியாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலியை விட வேகமாய் பயணம் போயாயிற்று. செவ்வாய்க்கும் தூது விட்டாயிற்று. ஆயினும் நமதருகான சகபெண்ணை அறிதலில் தோற்றே வந்திருப்பதாகத்தான் இன்னமும் பேசிக்கொண்டிருக்கிறோம். குணங்குடி மஸ்தான், பட்டினத்தார் பேர்னாட்ஷா, நேற்றைய கண்ணதாசன் போன்ற எல்லோரும் பெண்ணை பிழையாகவே சொல்லி இருக்க, நானென்ன போற்ற வெளிக்கிட்டிருக்கின்றேன் என்றொரு வினா வரும். இதில் ஒன்றைப் பாருங்கள். பெண்ணைப் பேசிய எல்லோரும் ஆண்களாகவே இருக்கிறார்கள்.

பெண்ணே போற்றி..! என்பதன் மூலம் நான் சொல்ல வருவதில் நிறையப்பேருக்கு உடன்பாடு கொள்ளல் கடினமாயிருக்கும்; கவலையில்லை. அதிலும் பெண்ணிலை வாதிகள் புரட்டிப் போடக்கூடும்; அஞ்சவில்லை. என்னால் பொய்யெழுத முடியவில்லை. விருப்பமுமில்லை. உலகின் மிக அழகான அற்புதமான விஷயமது. அதில் அசிங்கம் தெரியவில்லை. இன்னமும் பிடிபடாத நிலமையில் அது இருப்பதனால் உயர்வானது. வெறுமனே கரையில் நின்று கிழிஞ்சல்களைப் பொறுக்கியபடி முத்துக்கள் கிடைத்த இறுமாப்பில் மயங்கிய நாம், உண்மை உறைத்ததும் ஏமாற்றத்தில் புலம்பத் துவங்கி விடுகிறோம் என்று படுகிறது.

'போதுமடி நீ எனக்கு' எழுதியதும் நிறையப்பேரால் 'பேசப்பட்டேன்'. அதிலும் 'முஸ்லிமாய் இருந்துகொண்டா?' என்ற கேள்வியினால் நிறையக் காயம் பெற்றேன். உண்மைதான். வெறும் காதல் கதைக்கே கூட மாற்றினப் பெயர் சூடிக் காவியம் புரியும்போது, அவர்கள் பார்வையில் மிக இழுக்கானதாகத்தான் படுமிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை அவர்களுக்குச் சொல்லியாக வேண்டியுள்ளது. எண்ணங்கள், உணர்வுகள் எல்லோருக்குமே ஒன்றுதான். அத்துடன் மூளையின் கனஅளவு ஓமோன்களின் செல்வாக்குகளும் கூட. இதில் இன ரீதியில் ஏது பிரிவு?. அழகு, (அ)சுத்தம், (அ)நாகரீகம் எல்லாமே தனிநபர் பாடு. இவற்றுக்கு எந்த லேபலும் யாரும் போர்த்தத் தேவையில்லை. புரிபடாத சிக்கலினைப் புரியப் பார்ப்பதில், என் பார்வையில் படுவதைச் சொல்வதில் எனக்குத் திருப்தி கிடைத்திருக்கிறது.

கடைசியாக முகவுரை தந்துதவிய எனது மதிப்புக்கும் அன்புக்குமுரிய S.H.M. ஜெமீல் அவர்களுக்கு, எனது ஆத்மார்ந்த நன்றியைத் தெரிவிக்க வேண்டியவனாகிறேன். அத்துடன் எனது எழுத்தை, என்னை ஊக்கப்படுத்திய கவிஞர் A. இக்பால், அட்டைப் படம், எழுத்தமைப்பில் உதவிய J. ஹாஸிம், சக இலக்கிய நண்பர்கள் அனைவரையும் இவ்விடத்தில் நன்றியுடன் நினைவு கொள்கிறேன்.

அன்புடன்.
எஸ். நஸீறுதீன்.
றியாயா மஞ்சில்,
முஅத்தினார் வீதி,
அக்கரைப்பற்று.
19990823



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதுமடி நீ எனக்கு

ஒரு பெண்ணைத் திருப்திப்படுத்த வெளிக்கிடுவது எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது என்பது இப்போதுதான் எனக்கு முழுக்க வாய்ப்புரிந்தது. ஷாஜஹான் காலத்துக் கதைக்குச் சதையால் முலாம் போட்டு எடுத்த ரங்கீலா படத்தின் முன் வெறுப்புடன் எழுந்து போக வழியின்றி என்னை உட்காரவைத்திருப்பது என்ன? படம் பிடிக்கவில்லை என்றான பின்னும் எதற்காக உட்கார்ந்திருக்கிறேன்? அருகிலுள்ள சுல்பிகா கோபித்து விடுவாளோ என்ற எண்ணம் எனது நிஜத்தை எவ்வாறு மாற்ற முடியும்? படம் எப்போதடா முடியும் என்றிருந்தது எனக்கு. தியேட்டரை விட்டு வெளியில் வந்ததுமே சிகரட்டைக் கொழுத்தினேன்.

"எப்படிப் படம் நல்லம்தானே?"
"ஆஹா ஊர்மிலாவுக்கு என்னா மாரு, என்னா தொடை, தொப்புள்"
"ஏன் பிடிக்கவில்லையா?"

இதற்குப்பதில் சொல்வது இன்னும் அபத்தமானது என்று எனக்குப் பட்டது. மொழியே தெரியாத நிலையில் சம்பவக்கோர்வை தெரிய வருவதன் மூலம் என்ன சுகம், திருப்தி வந்து விடப்போகிறது? இவளது இந்தப் பைத்தியக்காரத்தனமான பிடித்தமெல்லாம் எனக்குக் கூட பிடிக்குமென எப்படி இவளால் நினைக்க முடிகிறது? எனது மௌனம் அவளை யோசிக்க வைத்திருக்க வேண்டும். அவளாகவே பேச்சை மாற்றினாள்.

"ஹரீஸ் எனக்குச் செமபசி. ஏதாவது சாப்பிடலாமா?"
"எனக்கும்தான்" என்றபடி அவளையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டேன்

சுல்பிகா எனது மாமாவுக்குத் தெரிந்த, நான் தற்போதைக்குத் தங்கியுள்ள வீட்டிற்குரிய மைமூனாவின் மகள். மாமா ஒரு பெரும் அரசியல்வாதி. அவரின் வேண்டுகோளைத் தட்ட முடியாதவனாக இன்றையப் பொழுதை இவளுடன் செலவிடவென்று வந்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு பெரிய கோழை நானல்லவா? எனது பிடித்தம் பொழுதைக் கூட இன்னொருவர் தீர்மானிக்கும்படிதான் வாழுதல் என்பது எவ்வளவு கேவலமான விஷயம். பெரிதாக இந்தமாதிரி நினைப்புள்ளதாயினும் மாமாவின் பேச்சுக்கு எப்பொழுதும் மறுபேச்சுப் பேசாதவனாகவே நான் இதுவரை இருந்து வந்துள்ளேன் என்பதுதான் உண்மை நிகழ்வாகும். அதைவிட மைமூனா அன்ரியின் அசத்தலான, அநியாயமான அழகின் முன்னால் எதுவித மறுப்புமே என்னால் வெளியிட முடிந்ததில்லை.

எனது மாமாவின் அரசியல் நடவடிக்கைகள், சந்தர்ப்பத்திற் கேற்ப நடந்து கொள்ளும் முறைகள் யாவுமே எனக்கு ஆச்சரியம் தந்தவை. ஆம் தந்து கொண்டிருப்பவையல்ல. தேர்தல் பிரச்சாரத்திற்கென ஒரு குக்கிராமத்துக்கு மாமாவுடன் நானும் செல்ல வேண்டியதாயிருந்தது. எவ்விடத்திற்கும் குறித்த நேரத்தைவிடப் பிந்தியே மாமா பிரசன்னமாவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். அன்றும் பிந்தியதாகவே வேனில் போய் இறங்கினார். ஒரு புறமாகச் சூழ்ந்து நின்றிருந்தனர் பெண்கள். மாமா அவர்களை நோக்கியவராக,

"குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் தாங்கம்மா!" என்றார். ஏற்கனவே மாமி 'கூஜா'வுள் வைத்துத் தந்த தண்ணீர் வேனினுள் இருப்பது எனக்குத் தெரியும். எனவே,

"அங்கிள் இங்க இருக்கு தண்ணீர்" என்றேன் நான் பட்டென்று. மாமா சடுதியாகத் திரும்பி என்னை முறைத்தார். பின் சட்டென சிரிப்புடனேயே முகம் திரும்பி அவர்களுடன் ஒருவராய் நின்று அளவளாவினார். இவை எதையுமே என்னால் மறக்க முடியவில்லை. அதைவிட விழா நிகழ்வுகளைப் பொறுத்து அவர் உடுப்புக்களைத் தேர்ந்தெடுக்கும் நேர்த்தி இருக்கிறதே அதுவே ஒரு ஆச்சரியமான விடயம்தான்.

எனது பல்கலைக் கழக வாழ்வு முடிந்து ஒரு தனியார் நிறுவனத்தின் பொறியியலாளராகக் கடமையேற்க கொழும்பு வந்ததும் நான் முதன் முதல் சந்தித்த நபர் மாமாதான்.

"நல்லது இத்துடன் உனது கற்றலை நிறுத்திவிடாது
ட்றோயிங்கை மேற்படிப்புக்காகத் தெரிவு செய். மேலேபடி.
எதிலும் அதியுயர் தகைமைவரை முயற்சி செய். இப்போதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம், அது இதுவென்று வாழ்க்கையைத் தொலைத்து விடாதே. உனது துறைக்கு வரும் காலத்தில் ஏகப்பட்ட கேள்வி இருக்கும்."

மாமாவின் மேற்படி பேச்சில் நான் ஆடிப்போனேன். ஓயெல் ஓடன் படிப்பை மூட்டை கட்டியவருக்கு வரைதலைப் பற்றி என்ன தெரியும்? ஆச்சரியமாயிருந்தது மூன்று மாதங்கள் வரை எனக்கு. வேறொருதினம் இன்னொருக்கு அவர்.

"இலங்கையைப் பொறுத்தவரை சர்ஜரிக்கென்று கண்ணைத் தெரிவு செய்தமைக்கு உன்னைப் பாராட்ட வேண்டும். நல்ல எதிர்காலமுள்ள துறையது. வேறெதிலும் கவனமின்றி திறமையுடன் முயற்சி செய்" என உபதேசம் செய்த போதுதான் இவரை அரசியலில் இருந்து ஓரங்கட்ட இனி எந்தக் கொம்பனாலும் முடியாது என்பது விளங்கிற்று எனக்கு. என்னை அவரைப்போல மாற்றவேண்டியோ, என்னவோ தெரியவில்லை மிக நாகரீகக் குடும்பமான மைமூனாவின் வீட்டில் என்னை தங்க வைத்தார்.

மைமூனா அன்ரியின் அதீதமான அழகுதான் அங்கு எனக்கு மிக ஆச்சரியமான விஷயமாக இருந்தது. வெகு கவனமாக அவ்வழகு செப்பனிடப்பட்டு ஒரு குழந்தைத் தனத்துடன் இருந்தது. பதினெட்டு வயதில் அவருக்கு ஒரு மகளுண்டு என்பதை எனக்கு நம்பக் கஷ்டமாயிருந்தது. இந்தக் குழந்தைக்கே ஒரு குழந்தையா? அவரின் முகம் நீள்வட்டமானது. தோள்வரை வெட்டி விடப்பட்ட சுருளையான முடி. பேசும் போதெல்லாம் நீண்ட கண்ணிரண்டும் கூடவாய்ச் சேர்ந்து சேதி சொல்லும். இருபுறமும் துருத்திய சதைப்பிடிப்பான கன்னமிரண்டு. அதன் இடது புறத்தே நடுவாய் ஒரு மச்சம். சிரிப்பின் போதெல்லாம், வலது புறம் குழி விழ, இடதுபுற மச்சம் மேலெழுந்து நிற்கும். அவரின் மேலுதடு ஒரு கீற்றாய் மெல்லியது. கீழுதடு சிவப்பாய்த்தடித்து விரிந்து கிடந்தது. அன்ரியின் கழுத்து நல்ல நீளம். பின்புறப்பகுதி நிமிர்த்தி வைத்த சைக்கிள் சீற்றை ஞாபகப்படுத்தும். அவரின் கவர்ச்சிகரமான நடைக்கு தசைப்பிடிப்புக் குறைந்த பின்புறமே காரணம் என எனக்குத் தோன்றுவதுண்டு. ஓ! இறைவன் அழகைத் தத்ரூபமாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியவன்தான். என்னால் அந்த அழகை மேலும் வர்ணிக்க முடியவில்லை. அப்படியொரு நீண்ட தேஜஸான உடல்வாகு அன்ரியினுடையது. ஆனால் இவ்வளவு அழகும் அவர் ஒரு விதவை என்றறிந்தபோதில் பழுத்த பலா வீணாகிறதே என்ற சோகம்தான் அவரைக் காணும் போதெல்லாம் ஏற்படுவதுண்டு. பின்னர் அல்ல.

அன்ரிக்கும் மாமாவுக்குமான தொடர்பு என்ன என்பதில் விடை கிடைத்ததும் மனது ஓரளவு ஆறுதலையே கொண்டது. வாப்பா போடியாராய் இருந்தமையால் போடியார்த்தனத்தில் பிறந்து வளர்ந்த உடம்பு அன்ரியை வளைத்துப் போட்டுள்ளது என்பதை நான் நாளா வட்டத்தில் அறிந்து கொண்டேன். அவருக்குக் காரியாலயத்தில் அந்தரங்கக் காரியதரிசி என்பதை காரியாலய மட்டத்துடன் எல்லைப் படுத்திக்கொள்ள விருப்பமில்லை. கொடுத்து வைத்த மாமா. அன்ரிக்கும் தனது அந்தஸ்துக்களைப் பேணவும், அந்த உடம்புவாகுக்கே உரிய தீனி தேடும் இயல்புக்கும் ஒரு புளியங்கொம்பு அகப்பட்டதில் பெரிதாக ஆட்சேபனை ஒன்றும் இருந்திருக்காது. இவ்வாறுதான் என்னால் அவர்களின் உறவை அனுமானம் செய்து கொள்ள முடிந்தது. அதை மேலும் மெருகூட்டுவதாகவே மாமா அன்ரியின் வீடு வரும்போதெல் லாம் என்னையும் சுல்பிகாவையும் தூரமாய் ஒதுக்கும் நிகழ்வுகள் நிறைவேறி வந்தன. எல்லாம் சரிதான். ஆனால் இவை அத்தனையும் சுல்பிகாவுக்குத் தெரியுமா என்பதில் எனக்கு ஓரளவு சந்தேகம் இருந்து கொண்டேயிருந்தது.

எனக்கு அன்ரியின் மீது அதீத அன்பு இருந்தது. காலையில் அவரே எனக்குத் தேநீர் கொண்டு வந்து தருவார். காலைச்சாப்பாட்டுக்காக மேசையில் நான் வரும்வரை காத்திருப்பார். வெளிக்கிடும்போது பகல் சாப்பாட்டைக் கையில் தந்துகொண்டே.....,

"நேரத்துடன் வந்துவிடு. தாமதிக்க வேண்டியிருந்தால் தயவு செய்து டெலிபோன் பண்ணு" என்பார். வேலை முடிந்து வந்ததும் உடுப்பு மாற்றிவர சிற்றுண்டியுடன் தயாராக இருப்பார். இரவுப் பொழுது தொலைக்காட்சி, பத்திரிகை, செஸ், சம்பாஷணை என்று பெரும்பாலும் அவருடனேயே கழிந்தது. சின்ன மாருதிக் காரில் சினிமாவோ, தோழியோ, சந்தையோ எதுவானாலும் எனது ஓய்வைக் கருத்திற் கொண்டதாகவே அவர் நேரங்களை அமைத்துக் கொண்டார். நாளும் அவரின் அன்பில்,அருகாமையில் அதிகம் விருப்பமுள்ளவனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தேன். அத்துடன் அவரின் இந்த அதீதமான அன்பின் நெருக்கம் அவரைப்பற்றிய ஆழமான யோசனையை என்னில் தோற்றுவிக்காமல் இல்லை.

அன்ரி ஒருவேளை மகளின் எதிர்காலத்தை முன்னிட்டு எனக்கு வலை விரிக்கிறாரா? என்னால் இதை நினைக்கவே கஷ்டமாயிருந்தது. எனது சிறிய உடல் நலக்குறைவின்போதும், அவர் படும் சிரமங்கள் அந்த நினைப்பையே தவிடு பொடியாக்கிற்று. அவ்வாறு ஒரு சுயநலம் அதில் எனக்குத் தெரியவில்லை. அவரை ஏதாவது சொல்லிச் சீண்டும் போதெல்லாம் 'சும்மா போடா' என்றபடி என் தலையை அவர் வருடுவதில் எனக்குச் சுயநலம் காண முடியவில்லை. அப்படியானால், தனக்கொரு மகனில்லாத வெற்றிடத்தை என் மூலம் நிவர்த்தி செய்துகொள்ள முயல்கிறாரா? இவ்வாறு இருக்கலாம் என்பதில் எனக்கு ஓரளவு உடன்பாடுகொள்ள முடிந்தது. ஆனால் மகனாகிக் கொள்வதில் ஓரளவு விருப்பக் குறைவு உள்ளதாகவே எனக்குத் தெரிந்தது. சில வேளை நானாகவே அன்ரி மீதான மனக்கசடுகளை வைத்திருக் கிறேனோ என்றும் இதனால் நினைக்க வேண்டியிருந்தது.

அன்ரியின் மீதான அன்பு எவ்வளவுக்கு என்னில் அதிகரித்ததோ, அதேயளவு தூரம் நான் சுல்பிகாவை விட்டும் தூரமாகத் துவங்கினேன். அவளின் நெருக்குதலும் தலையீடும் எனக்கு வேண்டத்தகாதவையாய்த் தோன்றத் துவங்கின. இருவரிடையே வெறும் சுண்டைக்காய்ப் பிரச்சினைகள் கூட பெரிய வாய்த்தர்க்கத்தில் போகுமாப்போல் பேச்சுக்கள் தடித்துப்போயின. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவளை மட்டந்தட்டிப் பேசுவதில் ஒரு குரூரமான நிறைவு கிடைப்பதையும் நான் உணர்ந்தேன். பின்னர் யோசித்துப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு என்ன நடந்து வருகிறது என்ற நினைப்பில் கவலையடைவேன். ஆனால் ஒரு முறை கூட நடந்த தவறைச் சொல்லி நான் அவளிடம் வருத்தம் தெரிவித்ததில்லை. இதனால் வாரக்கணக்கில் கூட இருவரும் பேசிக்கொள்ளாத நிலைகள் ஏற்பட்டதுண்டு. கடைசியில் அன்ரியின் முயற்சியால் இருவரும்



மருதமுனை பொது நூலகம்
கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானமாகிப் போவோம். அப்போதெல்லாம், 'அன்ரிக்காகத்தான் தெரியுமா? எனச் சொல்லிவிட்டுத்தான் அவளுடன் நான் இணக்க மாவதுண்டு. இதைச் சொல்ல ஒருபோதும் நான் மறந்ததில்லை அதற்காக வெட்கப்பட்டதுமில்லை.

அன்ரியினது அருகாமையின் போதெல்லாம் இப்போது என்னில் ஒரு பதட்டமான நிலை தோன்றத் துவங்கிற்று. எவ்வித மனக்குழப்பமுமின்றியே (எனது நினைப்பில்) அவர் என்னைத்தட்டிப்(தலையில் குட்டியுமிருக்கிறார்)பேசும்போதெல்லாம் நான் தடுமாறத் துவங்கினேன். அவரிடமிருந்து எப்போதும் ஒரு மெல்லிய மணம் வீசுவதுண்டு. மல்லிகையோ அல்லது ரோஜாவின் மணமோ அல்ல அது. ரோஜாவின் இதழைக் கிள்ளியவுடன் காயப்பட்ட இடத்திலிருந்து வெளிக்கிடும் மணத்தை அது ஒத்ததாயிருக்கும். சந்தண வாசனையைப் போலவும் இருக்கும். அவரது உடல் வியர்வையுடன் சேர்ந்ததான அந்த வாசம் என்னால் விரும்பப்படும் ஒன்றாகவே போயிற்று. 'எனது இறந்து போய்விட்ட தாயின் நெருக்கத்தேடுதலா இது? அன்ரியைக் காணாத நாட்களெல்லாம் வெறுமையாய் போகுமளவில் நான் பித்தானதன் காரணமென்ன? அவரின் மீதான அந்த நெருக்கமே என்னை அவரில் அடிமைப் படுத்துமளவு (அடிக்ற்) என்னைக் கொண்டுபோய் விடாதா? நான் அன்ரியிடம் எதை யாசிக்கிறேன்? என்னில் முன்னர் இல்லாதுபோன வெற்றிடம் அல்லது தேடல் இந்த அன்ரியால் நிரப்பப்படுகிறதா? மேலும் யோசிக்க எனக்குப் பயமாயிருந்தது. மனதில் குழப்பமே மிஞ்சும் போலிருந்தது.

அன்று மாமாவின் மறைமுக ஏற்பாடொன்றால் அன்ரியும் சுல்பிகாவும் ஹிக்கடுவைக்குச் சென்றிருந்தனர். நான் தனியனானேன். காரியாலயத்தில் எனக்கு எந்த வேலையுமே ஓடவில்லை. சுகமில்லை எனச் சொல்லிவிட்டு, கால்போன திசையில் நடந்தேன். கொழும்பு சூரிய ஒளியைக் கழற்றி வெள்ளையும் கலருமாக செயற்கையில் ஒளிரத் தொடங்கிற்று.கால் நீண்ட நடையால் கெஞ்சிற்று. சிகரட்டைக் கொழுத்தினேன். மனம் வெறுமையாய் இருந்தது. எனக்கு என்ன நடந்து விட்டது. வெற்றுமனம் யோசிக்கவும் பயந்தது. சிகரட்டை வீசிவிட்டு, பஸ்பிடித்து அறைக்கு வந்தேன். உடுப்பை மாற்றாமலேயே கட்டிலில் சாய்ந்தேன்.உடனேயே படுக்கையை விட்டு எழுந்த நான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்கிஷமாய்ப் பேணிவரும் பொருளை எடுக்கவென்று அலுமாரியைத் திறந்தேன். அதிர்ச்சியாயிருந்தது. அங்கு அப்பொருள் இல்லை. பதட்டமாகப் போயிற்றெனக்கு. வைத்த இடம் நல்ல நினைவில் இருக்கிறது; ஆயினும் கூட அறை முழுக்கத் தேடினேன். ம்ஹூம்... அகப்படவேயில்லை அது. யாரெடுத்தது. ஏன்? தெரிந்து போயிற்றோ? ஏகப்பட்ட கேள்விகள் மனசுள் வெளிக்கிட ஒன்றின்மேல் ஒன்றாக சிகரட்டுக்களைப் புகைத்தேன். மனம் ஒரு நிலைப்பட மாட்டேனென்று அடம்பிடித்தது. தூக்கம் தொலைந்து போயிற்று.

அன்ரியும் சுல்பிகாவும் வீடு வந்த பின்னர்கூட அன்றிரவு தூங்குவதாகப் பாசாங்கு செய்து முன்னே வரப் பயந்து கிடந்தேன். ஆனால் வீடு ஓய்ந்து போன பின்னரும் எனக்கு சிவராத்திரியாகவே இருந்தது. எல்லோரும் தூங்கியான பிறகும் என்னால் படுக்க முடியவில்லை. முன்வராண்டாவிற்கு எழுந்து வந்தேன். சிகரட்டை எடுத்துக் கொழுத்தினேன். அன்ரி லைற்றைப் போட்டபடி, கதவைத் திறந்து வெளியே வருவது தெரிந்தது. அன்ரியைக் கண்டதும் ஓரளவு அதிர்ந்தேன்

"உனக்கு என்ன பிரச்சினை? ஏன் இன்னும் தூங்காமல் இருக்கிறாய்?"

அன்ரியின் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. தலையை நிமிர்த்தி அவரைப் பார்க்கவும் துணிவு வரமாட்டேனென்றது. அன்ரிக்குத் தெரிந்து போயிற்றோ? என்ற சம்சயமும் இப்போது தோன்றிற்று.

"தயவுசெய்து! உனது தேவை என்ன? ஏன் பதில் பேசாமலிருக்கிறாய்? நீ தெளிவாய் இருக்கிறாயா?"

அன்ரியின் ஆங்கிலம் ஏற்கனவே விரைவானது. இப்போது அதைவிட விரைவாகவும், சற்றுத் தொனி உயர்வாகவும் இருந்ததால், நான் இன்னும் மௌனமானேன்.

"சின்னப்பையனே! உனது தேவை எதுவென்பதிலேயே உனக்குத் தெளிவில்லை. உனது கமெராவைத் தேடிப் போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுதான் இது கிடைத்தது. நீ இதைத்தானே தேடுகிறாய்.... இத்துடன் நீ ஓய்ந்துபோக முடியுமென்கிறாயா?"

அன்ரியின் கையில் அவரது ரவிக்கைத் துணியும், முகத்தில் ஏளனப்புன்னகையும் இருந்தது. எனக்கு ஆத்திரம் வெளிக்கிடத் துவங்கிற்று. அன்ரியின் பேச்சினால் எனது ஆண்மை கொச்சைப் படுத்தப்பட்டதாக உணர்ந்தேன். அதாவது, எனது மனஉளைச்சல், பதட்டம், பரிதவிப்பு எல்லாவற்றிற்குமே அன்ரியின் கேள்வி விடை யளித்ததாகப் புரிந்துகொண்டேன். அன்ரியின் மீது நான் மோகம் கொண்டிருக்கிறேன் என்பதை அவரின் கேள்வியினால் தெளிவாகத் தெரிந்துகொண்டேன்.இது சரியா? தவறா? என யோசிக்கும் நிலை எனக்கு ஏற்படவில்லை. மோகத்தைக் கொல்வதா அல்லது எனது மூச்சை நிறுத்துவதா என்ற தேவையும் எனக்கு ஏற்படவில்லை. மோகத்தை எப்படிக் கொல்வது? மோகித்துக் கொண்டே மோகம் பிழை, மோகம் பிழை என உச்சாடனம் செய்வதைவிட அதில் இறங்கி அதை வெல்வதன் மூலமாக அதனைக் கொல்லுதலே சிறந்ததென்று நம்பினேன்.

அன்ரியின் இதழ்க்கடையோரமான நெளிந்த கிண்டலும், மெல்லியதாக அணியப்பட்டிருந்த நைற்றியும் என்னை இன்னும் யோசிக்காமல் செய்வித்தவை. நான் அவர்மீது வெறிகொண்டேன். அன்ரியை அவசரமாகவும், ஆவலுடனும் அணுகினேன்.

எனது இந்த இழப்பு எனக்கு பாரிய நன்மைகளைத் தந்ததாகவே என்னால் இப்போதைக்கும் நினைக்க முடிகிறது. மோகத்தைக் கொல்வதா அல்லது மூச்சை நிறுத்துவதா என்பதில் மோகத்தைக் கொல்ல அன்ரி எனக்கு உதவி செய்ததாகவே அந்த நிகழ்வு அமைந்து போய்விட்டது. அங்கு அன்ரி இல்லை. நான், நான் என்ற என்னை இழந்திருந்தேன். அங்கு பெண் இல்லை. ஆணுமில்லை. எதுவுமே இல்லை. இது சரியா தவறா? என்ற யோசிப்பின்றி இருவருமாய் மயங்கிக் கிடந்தோம். இந்த அனுபவத்தை என்னால், என்னால் மட்டுமென்ன யாராலும் விளக்க முடியாதென்றே நம்புகிறேன். கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்பதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவேதான் இதுவும். ஒன்றுதல் என்பதை விளக்க வெளிக்கிடும் எவனுமே, அந்த நிலைக்குத் துரோகம் செய்தவனாகவே ஆகிறான். ஆதாம் சுவர்க்கத்தையேதுறக்கக் காரணமாய்ப்போன, ஏவாளை வருடக்கணக்காகத் தேட வைத்த தூண்டல் என்ன? ஒவ்வொரு போர்க்கள இரவிலும் நெப்போலியனின் தலையணையின் கீழாக ஜோஸபினின் உள்ளுடை கிடந்ததன் மர்மமென்ன? அந்த நிகழ்வு ஒன்றே எனது வாழ்க்கைக்குப் போதுமானதாயிருந்தது. அன்ரியின்மீது எனக்கு மேலதிக அன்பும், மரியாதையுமே இதனால் மேலெழுந்து நின்றது.

அடுத்தநாள் காரியாலயத்திலிருந்து வெளிக்கிட்டபோது வாயிலில் வைத்து சுல்பிகா என்னை எதிர்கொண்டாள். அவளது தவிப்புடன் கூடிய பதட்டநிலை நீண்ட நேரமாக காத்திருக்கிறாள் என்பதை எனக்குத் தெரிய வைத்தது. அவளின் மனக் குழப்பத்தை முகபாவம் வெளிக்காட்டிற்று. இங்கு ஏன்வந்தாள்? என்பதில் ஓரளவு விடையைத் தெரிந்தவனானேன். ஆயினும் அவளே பேசட்டுமென்று மௌனமாயிருந்தேன். அல்லது பேசத் தயக்கமாயிருந்தது எனக்கு.

"இரவு நானும் விழித்திருந்தேன்."

அவளின் இந்த ஒற்றை வசனமே எனக்கு சகலவற்றையும் விளக்கப் போதுமானதாயிருந்தது. எந்த வார்த்தையும் எனது வாயிலிருந்து வெளிவரவில்லை. நீண்ட நேரமாக இருவரும் பேசாமலேயே இருந்தோம்.

> "தயவு செய்து வீட்டைவிட்டு வெளியேறிவிடு. எனது தாயை இப்போதைக்கும் குழந்தையாகவே என்னால் பட்டிட முடிகிறது. குழந்தை மனது அவருக்கு. ஆனால் அதையே மூலதனமாகக் கொண்டு மாமாவும், மருமகனுமாக......ச்சே...வேண்டாம். நாம் எதுவும் பேசவேண்டாம். தயவு செய்து போய்விடு. எனக்கு இதுதெரியும் என்பதைக்கூட எனது தாய்க்குத் தெரியப்படுத்தா மலேயே போய்விடு."

சுல்பிகாவின் பேச்சில் நான் அதிர்ந்தேன். அவளைப் பற்றி நான் கொண்டிருந்த சந்தேகங்கள், அவநம்பிக்கைகள் யாவுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது தவிடுபொடியாயின. அவள் பக்க நியாயங்கள் என்னை உறுத்தத் தொடங்கின. இந்த மோகம், மூச்சு, பரமானந்தம், சத்திய நிகழ்வு எல்லாவற்றையும்விட, இந்த இளம் பெண்ணின் மனக்காயங்களும் அதனால் அவள் பெறப்போகும் படிப்பினைகளும், குடும்ப உறவு முறைகளும் இந்தச் சமூக அமைப்பில் அத்தியாவசியமானவையென அறிந்து கொண்டேன். இவள் சொல்வதன்படியே இந்நிகழ்வுக்கான சகல பாவங்களையும் நானே சுமப்பதாக முடிவு செய்தேன். அவள் சொன்ன யாவற்றையும் சரி என்பதைப்போல் மௌனமாயிருந்து கேட்டுக்கொண்டேன். இந்நிகழ்வு முடிந்து சரியாக இருவாரத்தின் பின்னர் ஜாவத்த வீதியில் உள்ள காரியாலயத்திற்குரிய வாடகை விடுதிக்கு வேறொரு காரணம் கூறி குடிபெயர்ந்தேன். ஆயினும் என்ன? அன்ரி மைமூனாவை எனது ஆயுள் உள்ளவரை மறத்தல் என்பது சாத்தியமில்லாத ஒன்று என்றே என்னால் இப்போதைக்கும் சத்தியமிட்டுச் சொல்ல முடிகிறது. ஏனெனில் எனக்கு இன்னொரு உலகத்தைத் தெரியப்படுத்தியது அவர் மட்டும்தான்.

ஈஸ்ரன் டைம்ஸ் 10.11.1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனியெ(ல்)லாம் மனமே....

காரியாலயம் மூடியாயிற்று. கடைசி ஆளாக அவன் வெளியேறினான். அறைக்குச் செல்ல மனம் விரும்பவில்லை. அங்கு போய்த்தான் பெரிதாக என்ன செய்து விடப்போகிறோம்? புத்தகம் வாசிக்கலாம்; அல்லது சீற்றை வெறித்தபடி படுத்துக் கிடப்பதைத் தவிர. எழுதவும் இப்போது மனசு ஒன்றவில்லை அவனுக்கு. சினிமா பிடிக்கவில்லை. பூங்கா பிடிக்கவில்லை. பிடித்தமாயிருந்த பயணமும் இங்கு (கொழும்பு) வந்த பின்னர் பிடியாது போயிற்று. அதுவும் ஐந்து மணிக்குப் பிரயாணமென்பது பெரிய நரக வேதனை. நேற்றைய அவனின் அனுபவம் இன்றைக்கும் குமட்டச் செய்கிறது.

எதுவித இலக்குமின்றி முஸம்மில் நடந்தான். எங்கு போவது? இங்கு அவனுக்குத் தெரிந்த நண்பனாய் அபூ மட்டுமே இருந்தான். ஆனால், அவனது மனைவிக்கு இவனது வருகை பிடித்தமானதாகத் தெரியவில்லை. அவளது சிரிப்பில் அது தெரிந்தது. அவள் தரும் தேநீரில் அது விளங்கியது. வெறுமனே சீனியும் சாயமும் சேர்ந்ததுதானா தேநீர்? மனித விருப்பமும் முழு ஈடுபாடும் சேரும் போதல்லவா அது சுவை பெறும்? அவளின் தேநீரில் சுவை தெரியவில்லை. ஆயினும் அவனால் அபூவைத் தவிர்க்க முடியவில்லை. நேற்று வருவதாகச் சொன்னவன் இன்னமும் வரவில்லை. அவனைச் சந்திப்பது ஓரளவு மனநிறைவைத் தரும் எனப்பட்டது. ஓட்டோ ஒன்றை நிறுத்தி அதிலேறிக்கொண்டான்.

அபூ இன்னமும் வீடு வரவில்லை. இதைச் சொன்னபோது அவன் மனைவி சற்றுச் சிரிப்புடன் சொன்னதாகக்கூட இவனுக்குப் பட்டது. மனம் ஊமையாயிற்று. அறையுள் அடைந்துகொள்வதே சரியென்று பட்டது. பஸ்ஸில் ஏகப்பட்ட சன நெரிசலாயிருந்தது. நின்றுகொள்ள கைக்குப் பிடிமானமே தேவைப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் சாரதியின் ஓட்டத்தை, சடுதியான நிறுத்துகையை நம்ப முடியாது. முஸம்பில் தொங்கினான்.முன்,பின் என இருபுறமும் ஏகப்பட்ட ஆட்கள். அவனது சம நிலையைத் தாங்கிக்கொண்டார்கள். பஸ் நாறிற்று.

காலையில் பூசிய பவுடர், தெளித்த சென்ற், போட்ட வேசமெல்லாமே கலைந்து இந்த நேரம் மனிதர்களின் சுய நாற்றம்தான் என்னமாய் வெளிக்கிடுகிறது. அவனுக்குத் தாங்க முடியவில்லை. மூச்சு விடாது எவ்வளவு நேரம் தப்பித்து நிற்க முடியும்? ஹேன வீதியில் இறங்க வேண்டியவன் கல்கிஸ்ஸ சந்தியிலேயே இறங்கிக் கொண்டான். உடம்பும் மனசும் காற்றுக்குத் தவித்தன. நின்று நிதானித்தான். காற்று உடலில் பட சற்று நேரம் நின்றான். தான் பஸ்ஸில் உள்வாங்கிய அனைத்தும் வெளிவர வேண்டி, காறி உமிழ்ந்தான். பின் சிகரட்டைக் கொழுத்தியபடி நடந்தான்.

ஹேன வீதி சுத்தமாயிருந்தது. வாகன இரைச்சல் குறைவு, மனிதர்களும் குறைவு. இரு புறமும் மரங்கள் வீதிக்கு குடை பிடித்து நிற்பதாகத் தோன்றிற்று. அவனுக்கு மனசு இலேசாயிற்று. வீதியின் வளைவில் திடீரென முளைத்தது அந்தக் குப்பை மேடு. அவனின் தினப்படி ஆச்சரியமது. ஒரு நாளிலேயே இவ்வளவு குப்பைகளையா இந்த வீடுகள் தோற்றுவிக்கும்? அவர்களிடம் இங்கு கொட்டிவிடாத குப்பைகள் தான் இதைவிடக் கூடவாயிருக்குமென்ற எண்ணம் வர சிரிப்பு வந்தது. நாயொன்று (நிச்சயமாக கேட்பாரற்ற நாதியற்றதாகவே இருக்கும்) குப்பையைக் கிளறிக் கொண்டிருந்தது. அதனது இடது கண்ணின் கீழாகக் காயம் தெரிந்தது. நாட்பட்ட காயம். சீழ் வடிந்து கொண்டிருந்தது. பாவமாயிருந்தது அவனுக்கு. அவன் அதன் அருகே வர தலையை உயர்த்தி அவனை உறுத்திப் பார்த்தது. அவனுக்கு உதறல் எடுத்தது. நாய் என்ன நினைத்ததோ தெரியவில்லை. 'சரி நீ போகலாம்' என்பதைப்போல் மீண்டும் தலையைக் குப்பையுள் நுழைத்துக் கொண்டது. நடையை விரைவாக்கிக் கொண்டான்.

உடுப்பை மாற்றாமலேயே கட்டிலில் சாய்ந்தான். கதவின் கீழாகக் கடிதம் போடப்பட்டிருக்கிறதா எனப்பார்த்தான். கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறையைப் பார்த்ததுமே மனசு குழம்பிற்று. சிகரட்டைக் கொழுத்தினான். ராத்தாவின் கையெழுத்தை அவன் அறிவான். தனது பதிலைக்கூட எதிர்பாராது வாரம் தவறாமல் கடிதம் போடும் அவரை நினைத்துக் கழிவிரக்கமாயிருந்தது. வீட்டிற்கு கடிதம்போட்டு மூன்று மாதமாயிற்றென்பது நினைவுவர வேதனையாயிருந்தது. பொய் யெழுத விருப்பமில்லை அவனுக்கு. 'நலம் நலமறிய ஆவல்' எனப் பொய்யாய்த்துவங்கி..... அதைவிட மௌனமாயிருப்பதே சிறந்த தாகப்பட்டது.

அன்புடன் தம்பிக்கு,

இங்கு யாவரும் நலம். உனது நலத்திற்காக வல்ல அல்லாஹ் வைப் பிரார்த்திக்கிறேன்.

உனக்கு யார் மீது, என்ன கோபம் என்பது புரியவில்லை. நீ விரும்பிய ஆசைப்பட்ட ஒன்றை உன்னைவிட வல்லமையுள்ளதுகொண்டு போயிற்றென்பது வாழ்வையே கோபிக்குமளவு உன்னை எப்படிக்கொண்டு போகுமென்பதை என்னால் உணர முடியவில்லை. நீ அவ்வளவு பவித்திரமுள்ளதாகப் பேணியிருந் ததற்கு, மறுபுறமும் அதே பவித்திரம், இணக்கப்பாடு இல்லாத போது எதனால் இவ்வளவு முக்கியத்துவம் நீ வழங்க வேண்டி வந்தது? அன்பு, நேசம் என்பதைவிடப் பதவியும் பகட்டுமே பெரிதாய்ப் போய்விட்ட அவளுக்கு, உனது வாழ்வையே சிதைக்கும்படியான போக்கு எப்படி நியாயம் கற்பிப்பதாகும்? தம்பி, தயவுசெய்து யோசி! இங்கு யாரும் யார் பொருட்டும் வாழ்ந்ததில்லை. உனக்கு உனது சூபிஸம் கூடவா இதைக் கற்றுத் தரவில்லை? எதற்காக இத்தனை வெறுப்பு? யார் மீது?

உம்மாவையாவது யோசி! இந்த வயதில் அவருக்கு இன்னும் கவலை வேண்டுமா? என்ன தேட்டை வேண்டி உனது இந்தத் தவம்? உனது எழுத்தைக் கூட இன்னமும் காணோம். உனது கோபத்தை -கைசேதப்பட்டதை(உனது நினைவின்படி) அதிலாவது கொட்டு. எந்த வழியிலாவது தணியச்செய். தயவுசெய்து மனதால் மட்டும் உக்கிவிடாதே! என்னால் தாங்க முடியாததாயிருக்கும் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றயது பெருநாளைக்கு சகோதரர்கள் நாலுபேருமே வர இருக்கிறார்கள். நீயும் கண்டிப்பாக வருவாய் என்று எதிர்பார்க்கிறேன். அனைவரும் அன்று உன்னைப்பற்றியே யோசிக்கும்படியான நிலைமையை உருவாக்க மாட்டாயென்ற நம்பிக்கையுடன் முடிக்கிறேன்.

ராத்தவால் மட்டும்தான் இப்படி எழுதமுடியும் என்று அவனுக்குப்பட்டது. அவராலேயேதான் இன்னமும் சில இனிமைகளை வாழ்க்கையில் தக்க வைத்துக்கொண்டிருக்கிறோமென்று நினைத்தான். யாரையுமே காயப்படுத்தாத மனசு அவருக்கு. எழுத்தால் மனதில் அழுத்தம் கூடிற்று அவனுக்கு. அவருக்காகவே தான் ஊர் போவது அவசியம் என முடிவு செய்தான்.

வயிற்றில் பசி கிளம்பிற்று. கிளாஸில் நீர் வார்த்துக் குடித்தான். சம்பளம் கிடைக்க இன்னும் ஆறு நாட்களாவது செல்லும். அதுவரை உள்ள பணம் தாங்குமா என்பதுவும் தெரியவில்லை. மற்றவர்களிடம் கடன் கேட்கவும் வெட்கமாயிருந்தது. மனம் வெறுமையாயிற்று. என்ன வாழ்க்கையிது? எந்தவிதப் பிடிப்புமின்றி - இலக்குமின்றி எதன் பொருட்டு வாழ்கிறோம்? திடீரென வெளியில் மோட்டார் சைக்கிளின் சத்தம் கேட்டது.

“முஸம்மில்... முஸம்மில்....”

அபூவின் குரல். அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லிக் கொண்டான். அவனுக்கும் அறையைவிட்டுக் கொஞ்ச நேரம் விலகியிருக்க எண்ணமிருந்தது. இவன் வந்தது நல்லதாகப் போயிற்றென்று பட்டது.

மோட்டார் சைக்கிளின் பின்னாலிருந்து கவலை ஏதுமின்றிப் பராக்குப் பார்த்தபடி பயணம் செய்வது முஸம்மிலுக்குச் சந்தோசம் தந்தது. அதுவும் தன் மனமொத்த நண்பனுடன் செல்வது பெரிய கொடுப்பினைக்குரியது. சைக்கிள் தெஹிவளையை நோக்கிப் போயிற்று.

இருட்டைத் தெரியாத நகரம். எல்லாவற்றையுமே வெளிச்சம் போட்டுக் காட்டும் நகரம். வெளிச்சம் இயற்கையா செயற்கையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெல்லாம் கவலை கொள்ளாத நகரம். உள்ள வெளிச்சத்தையும் அலங்காரம் பண்ணி அப்பட்டமாய் வெளிக்காட்டி நிற்கும் நகரம். 'உனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ நான் இப்படித்தான்' என வீம்புடன் நிற்கும் நகரம். அனுசரித்தலை அவிழ்த்து விட்டு ஆசையைப் போர்த்தியபடி ஆவலைக் கூட்டும் நகரம். எதிராய் அதே குப்பை மேடு அள்ளுப்படாது இன்னமும் கிடந்தது. நாயைத் தேடினான். காணவில்லை. யார் கண்டது? அதற்கும் ஒரு நண்பன் இருக்கக் கூடும். நக்கிய களைப்பில் எங்காவது ஒதுங்கிக் கிடக்கலாம். அல்லது எந்த எசமானனினது நாயிடமாவது திகதி வாங்கியிருக்கலாம். முஸம்மில் ஓரளவு சந்தோசமடைந்தான்.

7258

ஹோட்டலினுள், நாற்சந்தி தெரியும்படியாக ஓரிடம் தேர்ந்து இருவரும் உட்கார்ந்து கொண்டனர். ஆண்கள் வாகனங்களிலேயே உட்கார்ந்திருக்க பெண்களே சொப்பிங் செய்து கொண்டிருந்தார்கள். முஸம்மிலுக்கு ஆண்களை அப்பாவிகள் எனச் சொல்ல முடியவில்லை. ஒரு வகையில் கொடுத்து வைத்தவர்கள். 'நீயே எல்லாம் சமர்த்தாப் பார்த்துக்கோ' என ஒதுங்கிக்கொள்வதாகவே நினைக்கத் தோன்றிற்று.

முஸம்மிலின் சிந்தனை அபூ கிளாஸை நீட்டியதும் கலைந்தது. அழகிய கிளாஸ். அதனுள் பொன்னிற ஜின் நுரை தள்ள ஜொலித்தது. சதுரமான ஐஸ்கட்டிகள் பளீர் வெள்ளையில் அழகூட்டின. பார்க்கவே ஆசை கிளம்பிற்று. முஸம்மில் ஒரே மூச்சில் அரைக் கிளாஸை வயிற்றினுள் வார்த்தான். தொண்டை, வயிறு எல்லாமாகச் சேர்ந்து எரிந்தது. சிகரட்டைப் பற்றவைத்துக் கொண்டான். அபூ, பொரித்த இறைச்சியைக் கடித்தபடியே கேட்டான்.

"வெள்ளி, ஊர் போகிறாயா? நல்ல செய்தி. ஏன் திடீரென்று?"
"அப்படியொன்றுமில்லை. என்னைத் தொட்டு யாரும் கவலை கொள்ள வேண்டாமென்று பார்க்கிறேன். ராத்தா கடிதம் போட்டிருந்தார்; பெருநாளின்போதாவது வந்து போனால் என்ன என்று."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி, அதற்கும் உன்னைத் தொட்டுக் கவலை கொள்கிறார்கள் என்பதற்குமென்ன சம்பந்தம்?"

"நான் இன்னும் சபீதாவை நினைத்து கவலைப்பட்டு உருகுவதாகவும், வாழ்க்கையைத் தொலைத்து விடுவேனோ என்றும்...."

"நிறுத்து. உண்மையைச் சொல். அவரின் நினைப்புத் தவறென்கிறாயா? "

அவனால் அபூவுக்கு பதில் சொல்ல முடியவில்லை. மௌனமானான். சபீதாவுக்காகவே அவன் நிறைய இழப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டதை ஞாபகம் கொண்டான். 'பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புக்கு வாய்ப்பிருந்தும் அவளின் நினைவுக்காய்ப் பயந்து ஓடிவந்தமை, கொழும்பில் சௌகரிய வாழ்வுக்கு இடமிருந்தும் தனியாக ஒதுங்கி மாதாமாதம் அல்லல்படும் சம்பளத்துடனான குறுகிய அறை வாழ்க்கை, மன விருப்பமே அற்ற முகாமைத்துவப் பயிற்சியில் சேர்ந்துகொண்டமை, தானாக வரித்துக் கொண்ட வறுமையினால் இழந்து போய்விட்ட நண்பர் குழாம். இதெல்லாமே அவளுக்காகத்தானா? அதை ஏற்றுக்கொள்ள அவன் புத்தி மறுத்தது. அபூ இன்றைக்கு உண்மையைச் சொல் என்கிறான். நானாகவே விரும்பி இந்த வாழ்வை ஏற்றுக்கொண்டேன்.' என்றுதான் இதுவரை அவன் நம்பிக் கொண்டிருக்கிறான்.

"எனக்குத் தெரியவில்லை அபூ"

"உனக்கு உன்மீதே ஆத்திரம். உனது நான்கு சகோதரர்களின் சௌகரிய வாழ்வினால் உனக்கேற்பட்ட தாழ்வுச் சிக்கல் இது. உனக்கெதற்கு இந்த முப்பத்து மூன்று வயதில் ஆன்மீகத் தேடலும் ஒதுக்குப்புறமான வாழ்க்கையும். உனது சகோதரன் முஸாதீக்கைச் சந்தித்தேன். அவர்கள், சொல்வதைக் கேட்க மறுப்பதன்மூலம் நீ எதைஅடைய முடியுமென்கிறாய்?"

"அதற்குள் ஏறிவிட்டதுவா உனக்கு? பைத்தியம் போல் உளறும் நீதான் அதையும் கண்டு பிடித்திருக்கலாமே.?"

"நீ என்ன சொன்னாலும் சரி! இந்த லௌகீக விஷய மெல்லாம் பொய் - போலி எனக்காட்டுவதன் மூலம், நீ உனது ஈகோவைத் திருப்திப்படுத்த முனைகிறாய். அவ்வளவுதான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் சொல்கிறேன். பொத்திக் கொள் உனது வாயை"

அபூவுக்கு அவனது ஆத்திரம் ஓரளவு சந்தோசமே தந்தது. அவன் மூடி வைத்த பகுதியைத் தான் தொட்டுவிட்டமையால் விளைந்த ஆத்திரம் இது என்பதைக் கண்டு கொண்டான். முஸம்மிலின் உரத்த சத்தத்தால் ஹோட்டலே அவர்களை ஒரு முறை திரும்பிப் பார்த்தது. அபூவுக்கும் இப்போது சிகரட் பற்ற யோசனை வந்தது. பொதுவாக இந்தச் சந்தர்ப்பங்களில் அவன் சிகரட் பற்றுவதில்லை. முஸம்மிலிடமே நெருப்பை வாங்கி ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

"முஸம்மில், தயவு செய்து ஆத்திரம் கொள்ளாதே. எதையும் வெளிப்படையாகத் திறந்து பாரேன்."

முஸம்மில் மீளவும் தனது கிளாஸினுள் ஊற்றிக்கொண்டான். அவனுக்கு மனசு படபடப்பாயிற்று. 'என்ன சொல்கிறான் இவன். இதுதான் உண்மையா? இல்லையென்றால் எதற்காக இவ்வளவு ஆத்திரம் வருகிறது? என்னைக் கண்டுகொண்டு விட்டானே என்பதனால் ஆத்திரம் - வேக்காடு கொண்டேனா? என்ன பதில் சொல்வது இவனுக்கு? இவ்வளவு தயக்கம் கொள்கிறேன் என்றால் நான் உண்மையாயில்லையோ? ' முஸம்மில் அபூவை வெறித்தான்.

"முஸம்மில், ஜே.கே. சொல்வது போல நாம் அத்தனை பேரும் மூடர்களாக - குருடர்களாகவே வாழ்கிறோம். உண்மையான அழகு, பிடிமானம், விருப்பம் எதுவுமே எமக்கில்லை. சமூகம் விரும்பிய, கற்றுத் தந்தவையே எமக்குப் பிடிமானம், இலட்சியம்,அழகு எல்லாமும் ஆயிற்று. இது முழுக்கப் போலி என்று தெரிந்தும் அதிலேயே மூழ்கி அழிந்து போய்விடுவது எவ்வளவு முட்டாள் தனம் இல்லையா? "

"தயவுசெய்து குழப்பாமல் தெளிவாகப் பேசு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காதலில் தோற்றவன் இப்படித்தான் இருக்க வேணும் எனப்படித்தமையால், நீ அதே கோலம் கொண்டிருக்கிறாய் என்கிறேன். சபீதா வேணுமா, அல்லது பெண் இன்பம் உனக்கு வேண்டுமா எனக் கேட்டுப்பார். ரோஜா அழகு என எல்லோரும் சொன்னார்கள் என்பதற்காக ரோஜாவைத் தலைமேல் தூக்கியும், ஊமத்தம் பூவைச் சாக்கடையுள் தள்ளுவதும் என்ன நியாயம்? ஊமத்தம்பூவை எல்லோரும் 'என்ன வடிவு இது' எனக்கற்றுத் தந்திருப்பின், ரோஜாதானே சாக்கடைக்குச் செல்ல வேண்டியிருக்கும். தயவு செய்து, குடும்பம் சொல்வதன் படி திருமணம் செய்து, வாழ்க்கைக்குத் திரும்பு. வாழ்க்கையில் வாலிபம் ஒரு முறைதான். வீணாக்கி விடாதே நண்பனே."

அபூவின் குரல் அமைதியாயிற்று. முஸம்மிலும் பேச நாவின்றி உட்கார்ந்திருந்தான். தான் காயப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தன்னைக் கைவிடாத நண்பன், என்னை என்போக்கிலேயே விட்டு ஆழமான ரணமகற்ற வந்த நண்பன்; அபூவை நினைத்துப் பெருமையாயிருந்தது. மனம் முழுவதும் பாரத்தால் நிரம்பிற்று. தலையை மேசையில் சாய்த்துக் கொண்டான். அவனது தோளிரண்டும் குலுங்கிற்று. அபூவுக்கும் நண்பனை நினைக்கக் கவலையாயிற்று. அவன் அழுது ஓய்வதே இப்போதைக்கு நல்லதென்று நினைத்தான். அன்றிரவு அவனுடனேயே தானும் தங்க வேண்டியதாயிருக்குமென நினைத்துக் கொண்டான்.

வீட்டினுள் காலடி வைக்க தம்பி மாஹிரை எதிர் கொண்டான் முஸம்மில். புருணையிலிருந்து மெனக்கெட்டு வந்திருக்கிறான். ஆனால், பாகற்காயை அப்பிள் கணக்காகக் கடித்துச் சாப்பிடுவதுதான் ஆச்சரியமாயிருந்தது. இயற்கையாகவே நல்ல மருந்து என்பதற்காகவே வீட்டில் சமைக்க பாகற்காயை எடுப்பது வழக்கம். அதுவும் அதை அவித்து, அவித்த நீரைக் கொட்டிவிட்டு, நான்கு மடங்கு தேங்காய்ப்பூச் சேர்த்துச்சுண்டல் செய்வார்கள். மாஹிர் விருப்பப்பட்டு பச்சையாகவே உண்பதுகாண முஸம்மிலின் கண்கள் விரிந்து போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கசக்கல்லியா இது?"

"சே.... நல்ல ரேஸ்ட். கசப்பு என்றால் என்ன? நாக்கில் இனிப்பு, உறைப்பு மாதிரி அதுவும் ஏற்கனவே இருந்தது தானே! நமது மக்கள்தான் கூடாதென்று வெறுக்க வைத்து விட்டார்கள். புரூணேயில் விரும்பிச்சாப்பிடுவார்கள். தெரியுமா? 'அதுவும் ஒரு சுவைதானே, ஏன் ஒதுக்கு கிறார்கள்?' எனக் கேட்பதுண்டு."

"இனிப்புப் பிடிக்கிறமாதிரி.........."

"அப்படியல்ல சகோதரா,பழக்கம்தான் இனிப்பு நல்லதென்று சொல்லித்தந்திருக்கிறது."

"அப்படியானால், சிறிய குழந்தைக்கு ஏன் மருந்தை தேனுடன் சேர்த்து கொடுக்கிறோம்."

"தேன் சமைந்த உணவு. அத்துடன் மெழுகுத் தன்மையானது. சிறிய குடலுக்கு எந்தப் பாதிப்பையும் தராது. கசப்பான அப்படியொரு பொருளிருப்பின் அதனுடனும் கொடுக்கலாம். ஒன்றரை வயதில்தான் சுவையரும்புகளே வளரும்போது இனிப்பென்ன, கசப்பென்ன குழந்தைக்கு?"

முஸம்மில் மௌனமானான். தம்பி சொல்வதில் நியாயம் உள்ளதாகவே அவனுக்குப் பட்டது.

"என்னவோ போ.... உடன்படக் கஷ்டமாகவே இருக்கிறது."

"அதுதானே, நமது பழக்கமும் படிப்பும் இலேசில் விட்டுவிடுவதற்கு இணங்கிப் போகுமா? நான் சாப்பிடுவதைக் கண்ட பின்னும் சந்தேகப்படுகிறாய் பார். ஆங்கிலேயன் இதைத்தான் எளிமையாகச் சொல்லி வைத்தான்."

"என்னவென்று சொன்னான்?....."

"பழக்கமென்பது இரண்டாவது இயற்கையென்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸம்மில் சிரித்தான். மாஹிருக்கும் சிரிப்பு வந்துவிட்டது. உண்மைதான். மூதாதையர் தன்னுள் போட்டுவைத்த போர்வைகள் மிகக் கனமானவையேதான் என்றுபட்டது அவனுக்கு.

மூன்று நாட்களாக அவர்களுள் ஒருவனாக இருந்தான் அவன். இருந்தும் வெற்றிடமொன்று அவனுள் இருந்தபடி தூரமாக்கியே வைத்ததாக நம்பினான். அவர்களுடன் ஒன்றிக்கொள்ளக் கஷ்டமாயிருந்தது அவனுக்கு. ஆபூவின் வார்த்தைகள் நினைவில் வந்து போயின. ராத்தா விஷேட அக்கறை கொண்டு அவனுடன் நெருங்க முற்பட்டது இன்னும் வெட்கத்தையே அவனில் தோற்றுவித்தது. நாளை அவன் மீளவும் கொழும்புக்கு வந்து சேர வேண்டியிருந்தது. அன்றிரவு உம்மாவுடன் தனியாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான்.

"உனது உத்தேசம் என்ன? இந்த ஹஜ்ஜு மாதத்திலாவது திருமணம் செய்து கொள்வாயா?"

"அதற்கென்ன அவசரம் இப்போது? இன்னும் கொஞ்சநாள் போகட்டுமே(ம்)மா"
"இனியுமென்ன போவது? இப்போதே ஏகப்பட்ட வயதாகிவிட்டதல்லவா?"

ராத்தாவும் குசினி வேலை முடிந்து, அவர்களுடைய இடத்திற்குப் பிரசன்னமானார்.

"தம்பி, உன்னைத்தொட்டு மற்றவர்களுக்கும் திருமணம் செய்ய பிந்தும் அல்லவா? அவர்களுக்காகவாவது நீ அவசரமாய் ஒரு முடிவுக்கு வரவேண்டும்தானே?"

"இதையெல்லாம் காரணமாக வைத்துத் திருமணம் செய்வார்களா? என்ன சொல்கிறீர்கள்? "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி நான் உன்னை வற்புறுத்தவில்லை. ஆனால் உள்ள நிலைமையை நீ விளங்கினால் சரிதான்."

முஸம்மிலுக்குச் சிறிது ஆத்திரம் ஏற்பட்டது. இவர்களிடம் பிடிகொடுத்துவிட வேண்டாம் என்று மனசில் பட்டது. இதற்காகவெல்லாமா ஒருவன் திருமணம் செய்துகொண்டு விடமுடியும்? வேறு பிடிமானமெதுவுமின்றி வெறும் ஆண் - பெண் இணைப்புத்தானா இது? பேச்சுக்குப் பேச்சு ஆயிரம் காலத்துப் பயிரல்லவோ என்ற அலட்டல் வேறு இதற்குள். வெறும் பிள்ளையைப் பெற்று, வளர்த்து ஆளாக்குவதற்குத் தானா இந்தக் கூட்டு? பிள்ளை பெறவேண்டி இங்கு எவனும் கூடுவதாக அவனால் நம்ப முடியவில்லை. எந்த விதப் பிடிமானமுமின்றி ஒருவர், இன்னொருத்தருடன் எவ்வாறு கூட முடிகிறது? வெறும் கழிப்பிடம்தானா துணையென்பது? ம்மாவிடமும் ராத்தாவிடமும் மனதில் பட்டதைக் கூறச் சங்கடமாயிருந்தது அவனுக்கு. ம்மா, அவரினது தாய் டசின் கணக்கில் ஈன்று வளர்த்த பெருமை களை, தந்தைமார்கள் அவனது வயதில் எப்படியெல்லாம் குடும்பத்தைக் கோலோச்சியபடி வழி நடத்தினார்கள் என்பதையெல்லாம் பட்டுவைக்கத் துவங்கி விடுவாரென்று பயந்தான். அதைக் கேட்பதைவிட, சிறிது அனுசரித்ததாக காட்டிக்கொள்வதே இப்போதைக்கு நல்லதாகப் பட்டது அவனுக்கு. அடுத்தமுறை ஊர்வருவதற்கிடையில் நல்ல முடிவு சொல்வதாக முடிவு சொன்னான்.

1997 ஒக்டோபரின் ஒரு இரவுப்பொழுது. மட்டக்களப்புக்குச் செல்லவேண்டிய புகையிரதம், பொலன்னறுவையில் தரித்து நின்றது. பெட்டியெங்கும் ஏகப்பரபரப்பு. நிலையத்திலும் ஏகப்பதட்ட நிலை. இரண்டாம்வகுப்புப் பெட்டியில் இருந்த முஸம்மிலுக்கு காரணம் புரிய, அதிர்ச்சியாய் இருந்தது. அவனது நண்பன் (ஆம் பழைய நண்பன்தான்) அமீர் அங்கு நிலைய அதிகாரியாயிருந்தது ஓரளவு ஆறுதலைத் தந்தது அவனுக்கு.

முஸ்லிம் பொது நூலகம் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன அமீர் புகையிரதம் இனிச் செல்லாதா?"
"அனுராதபுரச் சூட்டின் எதிரொலி. பயப்படுகிறார்கள். கடைசி வரை விடமாட்டார்கள் என்றே நினைக்கிறேன்."
"சே... வீட்டில் கலவரப்படப்போகிறார்கள். இப்போது என்னடா செய்வது?"
"டெலிபோன் பண்ணி விஷயத்தைச்சொல். இன்றிரவு என்னுடன் தங்கிவிட்டு, அதிகாலை பஸ்ஸில் செல்."

முஸம்மில் டெலிபோன் பண்ணவென அறைக்குள் வந்தான். நம்பரை டயல் செய்தபோதுதான் அந்தக் குரல் அவனுக்குக் கேட்டது.

"ஹலோ! நீங்கள் அமீர்தானே?"

முஸம்மிலுக்குப் பழக்கப்பட்ட குரலது. திரும்பிக் கௌண்டரை நோக்கினான். அவனது சபீதா அது. மனம் ஒருமுறை அதிர்ந்தது. ஆச்சரியமாயிருந்தது அவனுக்கு. இவளெங்கே இங்கு வந்தாள்? இவளது கணவனெங்கே? அமீர் அவளுக்கு எந்தப் பதிலும் சொல்லாது தன்னைப்பார்ப்பது காண, அவன் சுயநிலைக்கு வரவேண்டிய தாயிருந்தது. அவளது அழகு எந்தச் சேதமுமின்றி இப்போதும் அப்படியேதானிருந்தது. ஆனால், முன்னரைவிடச்சற்று மெலிந்திருந்தாள் அவள். முன்னர் இருபுறக் கன்னமும் பாதி வெட்டிய அப்பிள் கணக்காக இருக்கும். அவளின் மெலிந்த இந்த உடல்வாகுகூட அழகை அதிகரித்திருப்பதாகவே அவனுக்குக் காட்டிற்று. அதே பூனைக் கண்கள். சிறுமை பூசாமலேயே கவர்ச்சியை அள்ளி வீசுபவை அவை. மற்றவரிடம் பேசும்போதெல்லாம் நாலா புறமும் ஓடி ஓடி செய்தியை வலுவூட்டி தெரிய வைக்கும் கண்கள். புடலங்காய்க் கணக்கில் புயங்கள். அதில் அவன் ஸ்பரிசித்த வெண்டிக்காயை ஒத்த விரல்கள். முஸம்மில் டெலிபோன் பண்ணாமலேயே அவளை நெருங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹலோ"

"ஓ! நீங்களா?" என்றவள் தலையைக் குனிந்து கொண்டாள். அவனைக் கண்டதில் அவளும் ஆச்சரியம் கொண்டிருக்க வேண்டுமென முஸம்மிலுக்குப் பட்டது.

"முஸம்மில், அறைக்குள் உட்கார்ந்து பேசலாமே."

அமீரின் உதவி அவனைக் காப்பாற்றிற்று. இருவரும் உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டனர்.

"என்ன சபீதா? எங்கிருந்து வருகிறாய்? எங்கே அவர்?"

அவன் தன்னை ஒருமையில் அழைக்கிறான் என்பது மனசில் படாமலில்லை அவளுக்கு. ஆயினும் அதைத் தவிர்க்க முனையாமலேயே அவள் பேசினாள்.

"ஒவ்வொன்றாகக் கேட்கலாமே! குருநாகலில் இருந்து வருகிறேன். மீண்டும் வேலையில் சேர்ந்துவிட்டேன். அவர் இப்போது என்னுடன் இல்லை. நாங்கள் பிரிந்து மாதம் நான்காயிற்று."

இதைச்சொன்னபோது அவளில் கவலை தென்படவில்லை. சட்டையில் கறைபட்டு கழுவிவிட்டேன் எனச் சொல்வதைப்போல்தான் அவள் சொன்னவிதம் இருந்தது. இதில் சோகம் கொள்ளவில்லையா அவள்? அப்படி இருக்க முடியாதென்றே முஸம்மில் நினைத்தான். பழக்கப்பட்டுவிட்டதனால், மரத்துப்போய் விட்டிருக்கலாம் என்று பட்டது. நான்கு மாதங்களெனில் மூன்று மாதங்கள் கூட ஒட்டாது போயிற்றா? எங்கு தப்பு? நானும் கூட உடந்தையாயிருப்பேனோ? முஸம்மிலுக்கு கவலை பிறந்தது. அவள் இதைப்பற்றி அவ்வளவு தூரம் கவலைப்படவில்லை என்பது ஓரளவு ஆறுதலையும் அவனுக்குத் தராமலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் நள்ளிரவு. வேறு இடம் போய்த் தங்குவதும் அவர்களால் முடியாதது. எனவே அமீரின் உதவியினால் இரு அறைகொண்ட, குடும்பத்திற்கான தங்கு விடுதியில் (அமீருக்குரிய) அவர்களிருவரும் தங்கிக்கொண்டனர். அமீர் சக உத்தியோகத்தனுடன் ஒன்றிக் கொண்டான். இதற்கிடையில் மூன்று முறையாவது திருமண முறிவின் காரணத்தைக் கேட்டிருப்பான் முஸம்மில். ஒவ்வொரு முறையும் 'அதைவிடுங்கள்' எனச்சொல்லிவிட்டுச் சிரிப்புடனேயே அவள் இருந்தாள். முஸம்மிலுக்கு அந்தச் சிரிப்பு அவளின் கவலையை மறைக்கப் போடும் வேஷமாகவே தோன்றிற்று. இதை மேலும் கிளறிக்கொண்டிருப்பது நாகரீகக் குறைவென்று பட்டதால் அவனும் பின்னர் கேட்கவில்லை.

ஆங்கிலம் காதல் செய்ய அழகான மொழியென்கிறார்கள். காதலின் உச்சம் காமம். முஸம்மிலுக்கு அந்த மொழிமட்டுமல்ல அதன் கலாச்சாரம் கூட காதல், காமத்திற்கு துணைபோவதாகவே பட்டது. இரு அறை என்பதை ஓர் அறையாக்கி- இல்லையில்லை ஒரேகட்டிலாக்கி வைத்தமைக்கு எது காரணமென்பதை அவனால் ஓரளவு மட்டிட முடிந்தது. 'ஐ நீட் யூ' என்ற அவனின் கேள்வியை எப்படித் தமிழ்படுத்தினாலும் அசூசையாகவே படுமென்று நினைத்தான். அவள்கூட அதற்கு எந்தவித மறுப்பும் சொல்லாமல் போனமை ஆச்சரியம் தராமலில்லை. தான் அவளின் நினைவில் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு நிற்கிறேன் என்பதில் கழிவிரக்கம் கொண்டாளா? அல்லது முன்னர் நேசம்கொண்டு தன்னால் ஏமாற்றப்பட்டவன் என்பதில் பச்சாதாபம் கொண்டாளா? எப்படியாயினும் முழுமைபெறாத அவர்களின் தேடுகை அன்று பூரணமாயிற்று.

அவ்விடம் அவளினூடாக அவன் தன்னை அறிந்தான். மனசும் உடலும் இலேசாயிற்று அவனுக்கு. தன்னுள் ஒளிரும் ஜோதியை, சுடரைக் காணத் துணைபோன சபீதாவை விட்டுவிட மனமின்றி அவளை மேலும் தன்னுள் இறுக்கினான். இருந்தும் அவளிடமிருந்து அதீதமான செயற்கை நறுமண சென்ற், பவுடர் வீச்சுக்களையெல்லாம் தாண்டி வெளிவந்த துர்வாடை ஒன்றை அவன் உணராமலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்பட்ட இளநீரை வெட்டியதும் வெளிக்கிடும் மணம்போல இருந்தது அது. பழைய துணிகளைக் குவித்து வைத்த இடத்தை ஞாபகப்படுத்துவதாயும் இருந்தது. ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். கட்டிலின் மேலேயே போர்வையைக் கழுத்துவரை இழுத்துவிட்டபடி இருகால்களையும் முன்னே மடக்கி, அதனிடையே முகம் புதைந்திருக்க சபீதா அழுதுகொண்டிருந்தாள். அவளைப் பார்க்கப் பரிதாபமே அவனுக்கு மேலெழுந்து நின்றது. இதுவரை தான் தேடிய, அவள் பதில் சொல்லாத கேள்விக்கு விடை கிடைத்ததில் நிம்மதி பிறந்தது அவனுக்கு. ஒரு சராசரி மனிதனுக்கு இந்த வாடை விவகாரம் விவாகரத்துக்குப் போதுமான காரணிதான். ஆனால், அவன் அதன் கொடூரத்தை அறிந்திருக்கமாட்டான். சபீதாவின் சோகம் மிகப்பெரிதென்று முஸம்மில் நினைத்தான். தன்னிடம் 'காரணம் கண்டுகொண்டாய்தானே?' என்பதாக அவளின் அழுகைக்கு அவன் அர்த்தம் கொண்டான். பரம்பரை கற்றுத் தந்த படிப்பினைகள், கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றிய மூடத்தனமான கொள்கைகள் எல்லாமாகச் சேர்ந்து சபீதாவைத் தண்டித்து விட்டன என்பதில் அவன் சோகம் கொண்டான்.

அபூ அறிமுகம் செய்த ஜே.கே., தம்பி காட்டித்தந்த பாகற்காய், கடைசியாய் இன்றைய நிகழ்வினூடு அவளைக் காணக் கிடைத்தமை எல்லாமே அவளை அவன் உள்வாங்கிக் கொள்ளவென ஏற்படுத்தப்பட்டவைகளே என நம்பினான். முஸம்மில் அவளைத் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியுமென்று நம்பினான். அவளின் சோகம் களைந்து அவளுடன் தன்னால் ஒன்ற முடியும் என்று நம்பினான். தனக்குக் கிடைக்கவிருந்த சொத்து தனது அறியாமையால் மீண்டுமொருமுறை தன்னை விட்டும் போய்விடக்கூடாதென்று கருதினான்.

முஸம்மில் சிகரட்டைத் தூர வீசினான். அவளருகாய் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டான். அவளது தலையுள் விரல் நுழைத்து, ஆதரவாய்க் கோதியபடி அவளை அருகாய் இழுத்தான். சபீதாவின் மனது உடைந்து போயிற்று. அவனுள் அவள் தன்னை நுழைத்துக் கொண்டாள்.

-தினக்குரல் வாரமஞ்சரி 1998.08.02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பின் கால்

'மகள்... நிஷா... நிஷா''

வாப்பாவின் உரத்த குரலும், செருப்புக்கள் கழற்றப்படும் ஓசையும் சேர்ந்தே வருகிறது. அவர் வீடேறும் போதெல்லாம் மகளைக் கூப்பிட்டபடியேதான் உள் நுழைவது வழக்கம். இதில் ஒரு முறை கூட தவறு நிகழ்ந்ததில்லை. நிஷாவுக்கு 'ஏனிது?' என்ற சந்தேகம் முன்னர் இருந்ததுண்டு. ஒருமுறை நிஷா,

"ஏன் வாப்பா இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் வீட்டினுள் நுழைகிறீர்கள்." எனக்கேட்டாள். வாப்பா உமர் சிரித்தார். ம்மாவும்கூடச் சிரிப்பில் கலந்து கொண்டார். அப்போதுதான் இதைப்பற்றி ம்மா ஏற்கனவே அவருடன் பேசியிருக்க வேண்டுமென்று பட்டது.

"மகள், ஒரு வீட்டினுள் ம்மா தன் பிள்ளையோடு இருந்தாலும் சரியே, வரும்போது சத்தமிட்டபடிதான் வரவேண்டும். அப்போதுதான் எப்போதாயினும் சரி ம்மாவை நிர்வாணமாகப் பார்க்க முடியாத சந்தர்ப்பம் அவனுக்குக் கிடைக்குமென நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்."

"ஓ! இவ்வளவு விஷயமுள்ளதா இதில்" என்றபடி மௌனமாய்ப்போனாள் நிஷா.

எல்லாம் சரிதான். ஆனால் அவர் நிஷாவைக் கூப்பிட்ட போதிலும் ஒருமுறை கூட நிஷா அவர் முன் பிரசன்னமானதில்லை. ம்மாதான் கதவைத் திறந்தபடி முகம் நிறைந்த சிரிப்புடன் அவரை உள்வாங்குவது வழக்கம். அதில்தான் அவருக்கு ஏகப்பட்ட சந்தோசம் இருந்தது; ம்மாவுக்கும்கூட. அப்போது ம்மாவின் முகம் மலர்ந்து கண்ணும் சிரித்தபடி நிற்பது காணக் கண்கோடி வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை அந்த நிலையில் பார்க்க நிஷாவுக்கு பெருமையாயிருப்பதுண்டு. ஆனால் சென்ற இரு கிழமையாக வாப்பாவின் அழைப்புக்கு அந்த வரவேற்பு அங்கு கிடைக்கவில்லை. அவரும் பழைய சந்தோச ஆரவாரத்துடன் குரல் கொடுப்பதுவும் குறைந்து போயிருக்கிறது. இன்றும் கதவைத் திறந்தவள் வாப்பாவின் செழிப்பற்ற முகம் கண்டு மனம் சூம்பினாள்.

நிஷாவின் ராத்தா ஆரிபா அம்பாறை வைத்தியசாலையில் ஒரு வைத்தியர். ம்மா அவளுக்கு மகவு கிடைத்த அன்று அம்பாறைக்கு ஓடிப்போய் ஒடுங்கிக்கொண்டு விட்டார். நிஷா, வாப்பா எல்லோருமாகப் போய்த்தான் சந்தோஷமாக உதவி, ஒத்தாசை தேவைப்படுமே என்று ம்மாவை நிற்க வைத்துவிட்டு வந்திருந்தார்கள்.

வாப்பா, இங்கு வந்தபின் முதலிரு நாட்களும் எந்தவிதமான மாற்றமுமில்லாதுதானிருந்தார். ஆனால் இப்போது அவரின் முகத்தில் ஒளி, சந்தோஷ ஜுவாலை அவரைவிட்டும் தூரமாகிவிட்டதாக நிஷாவுக்குப் பட்டது. ஆரிபாவுக்கடுத்து கடைசியாகக் கிடைத்த மகள் நிஷா. ஆண் பிள்ளை இல்லாத குறைக்காக வெகு சூட்டிகையுடன் அவள் அவரால் வளர்க்கப்பட்டவள். நிஷாவுக்கும் ஏகப் பிரியமிருந்தது வாப்பாவுடன். ம்மா, வாப்பாவின் நெருக்கம் வாழ்க்கையின் மிகப் பெறுமதியான குடும்பப் பெறுமானங்களை (Family value) அவளுக்கு ஊட்டியிருந்தது. அதனால் வாப்பா, பழைய வாப்பாவாக இல்லை என்பதில் அவளுக்கு சோகம் இருந்தது.

"உள்ளே வாங்கப்பா" என்றபடி கதவை விரியத் திறந்தாள் நிஷா. உமர் காய் கறிக்கூடையுடன் உள்ளானார்.

"என்ன வெயில், ஊமைவெயில்! கொஞ்சம் தண்ணீர் தாங்க மகள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஷா குசினியுள் சென்றாள். உமர் சாய்வு நாற்காலியில், அப்பாடா என்றபடி சாய்ந்தார். 'சனியுடன் சனி எட்டு, ஞாயிறு ஒன்பது, திங்கள் பத்து. ஓ! இன்றையுடன் பத்து நாளாயிற்றா? மனது வெம்பிப்போயிற்று. மனைவி சரீனாவைப் பிரிந்த நாட்களை எத்தனை தரம் கணக்குப் பார்த்தாயிற்று; அவருக்கு அலுக்கவில்லை. அவளது அருகாமை இல்லாது இவ்வளவு நாட்கள் அவர் பிரிந்திருந்ததில்லை. தன்மீது எவ்வளவு நெருக்கம், ஆதிக்கம் கொண்டவளாக அவள் இருந்திருக்கிறாள் என்பதை அவர் இப்போதுதான் பூரணமாக உணரக்கூடியவராக இருந்தார். 'சரீனாவுக்கும் இப்படி இருக்குமா? இருக்காமலா போகும். ஆனால் அவள் பெண்ணாயிற்றே, உள்ளே கவலையை அழுத்தி வைத்தபடி பேரனுடன் கொஞ்சியபடி வீட்டை வளைய வரக்கூடும்' உமர் நினைந்து நினைந்தே அவளின் நினைவில் கரைந்தார்.

"இந்தாங்க வாப்பா" என்றபடி நிஷா வந்தாள். அவளது கையில் 'ட்ரே' இருந்தது. தேனீரும் தண்ணீருடன் வந்திருந்தது. பரவாயில்லை, மகளுக்குக்கூட தனது ஒழுங்குமுறை தெரிந்திருக் கின்றதென நினைத்துக் கொண்டார். நீரை வாங்கிக் குடித்தார். பின் தேனீர் உள்ளே சென்றது. அப்பாடா! என்று ஆயிற்று அவருக்கு. ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டார். மனம் மீண்டும் பழைய நினைவில் புகையத் தொடங்கிற்று.

அன்று வெள்ளிக்கிழமை. பூரண நிலவு இரவைக் களங்கம் செய்திருந்தது. எனினும் தென்னைமர நிழல் ஊஞ்சலைச் சுற்றி இருளாக்கி விட்டிருந்தது. ஊஞ்சலின்மேல் உமர் இருந்தார். வாசலிலிருந்து மல்லிகை மணம் அள்ளுப்பட்டு வந்தது. ஊஞ்சலருகாய் பாயில் கால்களை நீட்டி, அவை ஒன்றின் மேலொன்று குறுக்காய்க் கிடக்க சரீனா உட்கார்ந்திருந்தார். அவர்கள் தூங்க முன்னரான பெரும்பகுதிப் பொழுதுகள் இவ்வாறுதான் கழிவது வழமை. இதே நிலையில் உட்காரந்தவர்களாக அன்றைய தினப்படியைப் பேசிக் கழிப்பதுண்டு. சரீனாவின் தொடையருகே வட்டா இருந்தது. அவருக்குத் தேவைப்படும் வெற்றிலை, ஏனைய மசாலாக்களின் அளவுகள் சரீனாவுக்குத் தெரியும். அன்றும் அவர் நீட்டிய வெற்றிலையை வாங்கி வாயில் பதுக்கிய உமர் இன்னமும் பேச வெளிக்கிடவில்லை. ஊஞ்சல் மட்டும் ஆடிக்கொண்டிருந்தது. சரீனா அவர் பேசட்டுமெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்தார். ஏனெனில் நல்ல குடும்பத்துப் பெண் அவர். சித்தன் போக்குச் சிவன் போக்கு என்ற கட்சி.

"மகள் ஆரிபா ரெலிபோன் செய்ததுவா? இப்போது எப்படி இருக்கிறதாம்?"

"நாளை அல்லது அதற்கடுத்த நாள் பிள்ளை கிடைக்குமாம் என்னை அங்கே வரச் சொல்கிறாள்."

"ஏன்? இங்கு வீட்டிற்கு வர முடியாதாமா?"

"நான் கேட்காமலில்லை.இவ்வளவு வசதியையும் விட்டுவிட்டு ஏன் வரவேண்டுமென்கிறாள். அவள் சொல்வதில் நியாயம் இருப்பதாகவே எனக்கும் படுகிறது."

உமர் மேலே பேசத் தயங்கினார். சரீனா ஒரு முடிவு செய்தால் மட்டுமே இந்த மாதிரிச் சொல்வாள் என்பது அவருக்குத் தெரியும். அவளது முடிவுகள் மேலானதாகவே எப்போதும் இருக்கும் என்ற நம்பிக்கையும் அவருக்குண்டு.

"ஓஹோ... அப்படியானால் மகளிடம் போவதற்கு ஏற்கனவே நீங்கள் முடிவு செய்தாயிற்றோ?"

"எதற்கு இந்தக் குத்தல் பேச்சு. நீங்கள் போகவேண்டா மென்றால் நான் போகவில்லை."

"சே... என்ன இது? மூக்கின் மேல் கோபமான பேச்சு. அவளுக்கும் நம்மைவிட்டால் துணைக்கு யாருண்டு. அதுசரி எப்போது போவதாக உத்தேசம்?"

"நாளை விடிந்ததும் போவோமா?"

"என்ன மிக அவசரமாக இருக்கிறாய். உனது விருப்பத்திற் குரிய மூத்த மகளல்லவா?

'என்ன நீங்க? பிரித்துப் பேசுகிறீர்கள்"

"நான் ஒன்றும் பிரித்துப் பார்க்கவில்லை. இந்து மதந்தான், தன்னை மலடியில்லை என்று உலகுக்கு காட்டவைத்ததால் ம்மாவுக்கெல்லாமே மூத்த பிள்ளையில்தான் பாசம் அதிகமாமென்று சொல்கிறது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரீனாவுக்குப் பேச நா எழவில்லை. இருக்கலாம் என்றே பட்டது. ஆரிபா ரெலிபோன் பண்ணியதிலிருந்து மனசு ஒரு நிலைப்படமாட்டேனென்று தவித்தது அவருக்கு. எஸ்.ரீ.எவ். இன் செக்போஸ்ட் இல்லாவிட்டால், இந்த இரவிலேயே அவர் புறப்பட்டுப் போயிட்டார். மகள் என்ன செய்கிறாளோ? என்ற கவலை நெஞ்சைக் குடைந்து கொண்டிருந்தது. 'யாமுகையத்தீனே, இந்த இரவு நீதான் இருந்து காவல் காக்க வேண்டும்.' மனசு இறைஞ்சிற்று சரீனாவுக்கு. அதைவிட 'இந்த மனிதருக்கு எந்தக் குறையும் வராதபடி இளையவள் பார்க்க வேண்டுமே' என்ற கவலையும் இருந்தது அவரில். 'பெண்ஜென்மம் வேறு எதைப்பற்றியும் கவலை கொள்ளலாமோ? உமரும் அவரின் நிலையை எண்ணங்களை அறிவார்.

பிறந்ததுமே பெண்ணுக்குக் கவலை கொள்ளல் பிறப்புரிமையாகி விடுவதாக அவர் நம்பினார். பிறந்ததுமே ம்மா, வாப்பா தன்னைத் தொட்டு 'இதைக்கரை சேர்க்க வேண்டுமே' எனக் கவலைப் படுகிறார்களோ என்ற கவலை, பிறகு இந்த மனிதன் மனம் நொந்து போகும்படி நடக்கக்கூடாதென்ற கவலை, பிள்ளைகள் வந்ததன்பின் இவர்களை உருப்பட வைக்கவேண்டுமே என்ற கவலை. எல்லாம் முடிந்து போயிற்று என ஆறுதல் கொள்ளப் போனால் பிள்ளையின் பிள்ளையும் கவலையைத் தரும்படி யாயிற்று. அல்லாஹ் இந்தப் பெண்களுக்கு எவ்வளவு பொறுமையைத்தான் கொடுத்திருக்க வேண்டும்.

சரீனா இதற்காக ஒருபோதும் சோர்ந்து நின்றதில்லை. வெறுப்புற்று ஓடியதில்லை. இதுவரை அவர் வாயிலிருந்து ஒரு சொல் கடினமாய் விழுந்ததில்லை. இப்போது கூட ஒன்றிற்காக இயங்கப்போய் இன்னொன்று பாதிக்கப்பட்டு விடுமோ என்றுதான் அவர் சோகம் கொண்டார். உமரின் மௌனம் அவரது சோகத்தை நிருபிப்பதாக அவருக்குக் காட்டியது. உமர் எல்லாவற்றிற்குமே அவரைச் சார்ந்தவராகவே இருந்து வந்தவர். சரீனாவுக்குக் கவலை கூடிற்று.

"என்ன ஒன்றுமே சொல்லாமல் இருக்கிறீர்கள்?"

"ஏன் அப்பவே சொல்லிவிட்டேனே! நீங்கள் எடுத்த முடிவு சரிதான் என்று!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த இடக்குத்தானே வேண்டாமென்று சொல்வது உங்களின் முடிவுதான் என்ன?"
"என்னயிது புதினமாயிருக்கிறது. மகளிடம், அதுவும் இந்த நிலைமையில் இருக்கும் போது எந்த வாய்பாவாவது போகாமல் தடுப்பானா?
"நீங்க உங்களது வாயால் ஆம் என்று சொல்ல வில்லையே"
"சரி... சந்தோசமாய்ப் போய் வருவோமே"
"என்னது? வருவதா? நான் நிற்க வேண்டி வரும் என்றல்லவா நினைத்துள்ளேன்."
"அப்படியென்றால் இங்கு எங்களைக் கவனிப்பது யாராம்?"
"மகள் நிஷா பார்த்துக் கொள்வாள்தானே."
"வாயைக் கிளறவேண்டாம். எத்தனை நாளைக்குப் பார்த்துக்கொள்ளும் அது"

சரீனா மௌனமானார். உமரின் சாரீரம் உயர்ந்திருந்தது. அவர் சற்றுக் கோபப்பட்டிருக்கிறார் என்பது விளங்கியது. உமருக்கும் 'இது என்ன சின்னப் பிள்ளைமாதிரிப் பிடிவாதம். ஆரியா சரியாகும் வரையாவது இவர் அங்கு நிற்பதுதானே சரியானது' எனப் புலப்பட்டது.

"சரீனா மூன்று நாட்களில் வந்துவிடுவாய்தானே?"
"ஏன் இப்படி இருக்கிறீர்கள்? நான் மௌத்தாகிப்போனால் என்ன செய்வீர்களோ தெரியவில்லையே"
"சரீனா நரம்பில்லாத நாக்கினால் அசிங்கமாகப் பேசாதே. ஒன்று இல்லையென்றால் சமாளித்துக்கொள்ளலாம்.இருந்தும் இல்லையென்பது ரொம்பக் கொடுமை தெரியுமா? எதுவாயினும் வருகின்றபோது பார்த்துக்கொள்ளலாம்".
"அப்படியானால் என்னை என்ன செய்யும்படி கூறுகின்றீர்கள்.?"
"அடியே, வதங்கிப்போயிடுவேனடி நான்"

சரீனாவுக்கு அவருடன் மேலும் பேச வார்த்தை வரவில்லை. அவரை நினைக்கப் பாவமாயிருந்தது. அவரை முழுக்கவாக சரீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திருந்தார். அவருக்கு அதீதமான அன்போ, கோபமோ எது வரினும் வார்த்தையில் 'டி' வந்துவிடும். உமரின் குரல் கரகரத்தது. அங்கு ஆண், - பெண், ஆளுமை பேதம் எதுவுமே இல்லாத ஒரு மௌன நிலை மேலெழுந்து நின்றது. சரீனாவும் உடைந்து போனார். ஊஞ்சலின் ஆட்டமும் நின்று போயிருந்தது. சரீனா ஊஞ்சலின் மறுமுனைக்கு ஏறினார். அவரது தலையை மடியில் சாய்த்துக் கொண்டார்.

"உங்க வயது இப்போது என்ன ?"
"ஏன் ஐம்பத்தாறு"
"இந்த வயதிலும் பெண் கேட்கிறதா உங்களுக்கு?"
"அடியே, மக்கு! பெண் தேவையென்றால் எனது பணத்திற்கு வரிசையில் நிற்க வைக்கமாட்டேனா நான். என்ன அசிங்கமாகப் பேசுகிறாய் நீ."

"அப்படியானால் ஏன் இந்த வயதிலும் இவ்வளவு தவிப்பு? இப்போதும் நான் தேவையென்றால் அதற்கு என்ன அர்த்தம்?"

"அடியே, பெண்ணென்பதை என்னவென நினைத்துக் கொண் டிருக்கிறாய்? எப்போதுமே அவள் தாய்தானடி.இந்த ஊஞ்சல் மாதிரித்தான் அவர்களும். உரியவர் வந்தவுடன் ஏன் எதற்கு என எதுவுமே கேட்காமல் சுகத்தையே வழங்க வில்லையா இது? 'அவருக்குச் சுகமா எனக்கும் சுகம்' என்பதுபோல இது எவ்வளவு சந்தோசமாயிருக்கிறது தெரியுமா? "

"அஹறா... நீ சுகப்படுகிறாயோ, இல்லையோ வருகிறவனைச் சுகப்படுத்துபவள்தான் பெண் என்கிறீர்களா?"

"ஏய், இந்த ஊஞ்சல் ஒரு பழுதுபட நான் விட்டுவிடுவேனா? ஒரு இடக்குமுடக்கான சத்தம் கொடுப்பதற்கு இதைவிடுவேனா? அது சுகமாய் இருந்தால்தானே நானும் சுகப்பட முடியும். என்ன கவலை வரினும் இதில் வந்து ஐந்து நிமிடம் ஆடினேனால் கவலையெல்லாம் பறந்து போகிறது எனக்கு. அதனால்தான் சொல்கிறேன், பெண்ணென்பது எப்போதும் தாயாகவே இருக்க முடியுமென்று"

"ம்மாவையே கொச்சைப்படுத்துவதுபோல்தான் எனக்குப் படுகிறது."
"எந்த அளவாவது உனக்கு இலேசில் புரிந்திருக்கிறதா? இந்த மாபெரிய விஷயம் புரிவதற்கு."

அவரின் கிண்டலான கேள்விக்கும் கூடச் சரீனா சிரித்துக் கொண்டே இருந்தாள். 'இதில் சிரிப்புக்குரியதாக என்ன இருக்கிறது." என உடமருக்குப்பட்டது. ஆனால் அடுத்த கணமே அவரது கேள்வியை யோசிக்க எல்லாமே ஆடிப்போயிற்று அவருக்கு. இவள் கேலி செய்ய முயல்கிறாளோ என்ற சந்தேகமும் அவரில் எழுந்தது. நிச்சயம் அப்படிச் செய்யக்கூடியவளல்ல அவள்.

"சே...என்ன சரீனா இது? காமத்தைப் பாவமாகப் பார்ப்பதால் இவ்வாறு பேசுகிறீர்கள். காமம் கூட நல்லதொரு அமல் (நன்மையான காரியம்) என்றே மதங்கள் பேசவில்லையா? எதனால் இது? நமது மனசில் இருக்கின்ற அசுத்தத்தை, ஊத்தைகளை அதனால்தான் கழுவிவிட முடியும். அது பாவமென்றால் நமது பிள்ளைகள், நாம் எல்லோருமே பாவத்தில் பிறந்தவர்கள் என்றல்லவா ஆகிறது."

"நீங்கள் என்ன சொன்னாலும் சரியே, எனது மனசு ஏற்றுக்கொள்ள மறுக்கிறது."
"இலேசாக கேட்குமா மனசு? எவ்வளவு ஊர்ப்பேச்சு, புத்தகங்கள், படங்களால் வளர்த்தெடுத்ததல்லவா அது. சுலபமாக எப்படி உண்மையைப்பார்க்கும்"

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?"
"பெண்தானடி இந்த உலகத்தின் ஜீவன். அதுதான் இந்த மனுக்குலத்தின் நோய் நிவாரணி. பொக்கிசம் அது. பெண் நோவுப்பட்டால் பூமியே நோவுபட்டமாதிரி. நமது பொக்கிஷத்தை பூக்கணக்காக பார்க்கவேண்டும். அதுதான் பெரியவர்கள் சொல்லி யிருக்கிறார்கள், 'ஒரு வீட்டில் பிரச்சினையாயின் அங்குள்ள ஆணுக்கு பெண்ணைப் பார்த்துக்கொள்ளத் தெரியவில்லை என்பதே அர்த்தம்'என்பதாக"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதற்கு இந்த வயதிலுமா?"
"இதற்கு வயது என்ன வயது! இன்றைக்கு வெள்ளைக்காரக் கிழவிகள் கூட ஓமோன்கள் ஏற்றிக்கொண்டு அலை பாய்கிறார்கள், தெரியுமா?"
"எதற்காகவாம்?"
"வேறெதற்கு, உங்களுக்கு சளைத்தவர்களல்ல நாங்கள் எனக் காட்டத்தான்."
"ஓஹோ அப்படியானால் நாங்கள் வறண்டுபோனால் இன்னொன்றில் வயல் செய்யப் போய்விடுவீர்களோ?"
"சே... வரட்சி என்பதில் ஆண், பெண் என்ற வேறுபாடு உண்டா? ஒருத்தர் இளமையா முதுமையா என்பது மனசு சம்பந்தப்பட்ட விஷயமல்லவா?"

உமர் திடீரெனச் சரீனாவின் தலையைச் சாய்த்து முகத்துள் வாங்கினார் தலையை மெதுவாக வருடிக் கொடுத்தார். அவருக்கு உடம்பு தகதகக்கத் துவங்கிற்று. சரீனாவைப்பற்றி நினைக்கும் போதே அவர் மனது மலர்ந்து விடுகிறது. இப்போது பதட்டப்பட வைத்துவிட்டது. சரீனாவுக்கும் அவரது தேவையைப் புரிந்துகொள்ள முடிந்தது. இருவரும் ஒன்றாகவே ஊஞ்சலைவிட்டு எழுந்து கொண்டனர். திடீரென ஏற்பட்ட உந்துதலினால் ஊஞ்சலும் சத்தம்போட்டு இசைத்தபடி ஆடத்துவங்கியது.

உமர் பின்னேரத் தூக்கம் விட்டெழும்பினார். நேரத்தைப் பார்த்தார். ஐந்து மணியாயிற்று. அவசரமானார். ஏனெனில் நண்பன் அபுல் அவருக்காகத் தைக்காவடியில் காத்திருப்பார் என்ற எண்ணம் அவரில் முளைத்தது. அபுலுடன் பால்ய காலத்திலிருந்து உமருக்குப் பழக்கமுண்டு. இலேசுப்பட்ட நட்பு அல்ல அது. வாழ்க்கைக்காலம் பூராகவும் தொடர்வதாக அமைந்துவிட்ட சிநேகம் அது. ஏனெனில் எந்தத்தேவையை முன்னிட்டும் ஏற்படுத்திக் கொள்ளப்படாத உறவு அது. இன்னும் உரித்துச் சொன்னால், தனது மனைவியிடம் பெற முடியாத ஆத்ம - பிரியந்த சுகங்களை இருவருமே தங்கள் நட்பினால் பெறுவதாக நம்பிப் பழகினர். உண்மையில் அப்படியே இருக்கக் கூடும். நட்பு இன்னும் வலுப்பட வேண்டுமே என்று அபுலின் மகனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரிபாவுக்கு மணமகனாக்கியிருந்தார். சரீனாவை விட்டுவந்து இன்னும் அடுலைப் பார்க்க கிடைக்கவில்லை அவருக்கு. காலை சந்தையில் கண்டபோது 'பின்னேரம் ஐந்து மணிக்குத் தைக்காவடி' எனச்சொல்லிவிட்டு விறுவிறுவென்று வந்துவிட்டார்.

"சொறி...லேட்டாயிட்டனா? " உமரின் குரலில் மன்னிப்புக் கேட்கும் பாவனை இருந்தது.

"நோ...நோ... இப்போதுதான் நானும் வந்தேன்."

இருவருமாக கடையின் முன்னால் உள்ள மரநிழலில் உட்கார்ந்து கொண்டனர். கடைக்காரர் நீண்ட வாங்கு ஒன்றைப் போட்டிருந்தார். வாகனங்களின் இரைச்சல் ஓரளவுக்குக் குறைந்திருந்தது. இன்னும் அரைமணியில் அதுவும் நின்று போய்விடும்.

"எப்படி ஆரிபாவும் மகளும் சுகமாமா? மருமகன் ரெலிபோன் செய்தாரா?'

"ஆமாம் இன்று பேசினார். உங்களிடம் சுகமாயுள்ளனராம் எனச் சொல்லும்படியும் சொன்னார்."

'ஏன் வீட்டுக்கு மருமகன் ரெலிபோண் பண்ணவில்லை' என்ற ஆதங்கம் அவருக்கு எழாமலில்லை. சரீனாவைப் பற்றி விசாரித்து விடுவோம் என்பதற்காகத் தவிர்த்திருப்பாரோ? அல்லது மாமி வீடு மகா சௌக்கியம் என்பதைப்போல ஆகியிருக்குமோ? சரீனா தலையிலே எல்லா வேலைகளையும் அள்ளிப்போட்டு செய்திருப்பாள்! அவள் எப்போதும் ஓய்ந்திருந்ததில்லையே....

"என்ன உமர் பலமான யோசனை?"

"ஒன்றுமில்லை. நமது சமூகம் எப்படியெல்லாம் இயந்திரத் தனமாகப் போய்விட்டதல்லவா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எதைப்பற்றிச் சொல்லுகிறீர்கள் நீங்கள்"
"இல்லை முன்னர் கூட்டுக் குடும்பமென்பது ஒருத்தருடைய பிரச்சினையை எல்லாருமாகச் சேர்ந்து சுமக்க உதவியது. இப்போது எல்லா இடங்களிலும் கருக்குடும்பம். ஆனால் பிரச்சினை அதேயளவு. இரண்டினதும் முழி பிதுங்கிப் போய், நிம்மதியும் கெட்டுவிட்டது."

"எனக்கு நீ பேசுவதைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லையே"'
"பச்சையாகச் சொல்லட்டுமா? ஆரிபா மகளாலயும், மருமகனாலயும் சுமக்க முடியாத சுமையை சரீனாமேல் சுமத்திவிட்டார்கள்."

அபுலுக்குத் திகைப்பாயிற்று. இத்தனை வருடகாலமும் உமரைத்தான் எடைபோட முடியாது போய்விட்டோமோ என்று அவரிலேயே சந்தேகம் எழுந்தது.

"ஏன் உமர் இதைச் சுமையாகக் கொள்ள வேண்டும். சந்தோசத்திற்குரிய விஷயமில்லையா சரீனாவுக்கு?'

"எது சந்தோசம் அபுல்? பேரனைக் கொஞ்சுவதா? அதைவிடவும் அவளது என்னுடனான நெருக்கம் எனக்கும் அவளுக்கும் சந்தோசகரமானது என்பதை நீ மறுக்கிறாயா?"
"தயவுசெய்து விளங்கச் சொல்."
"ஊர்கூடி மாலையிட்டு மனைவியாக்கியவன் நான். இத்தனை வருடங்களாக அவளோடு குடும்பம் நடத்தியவன். அதில் எவ்வளவு இறுக்கம் எனக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். சின்னப்பிரச்சினையாயினும் கூட ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்து எவ்வளவு நேசமாக இருந்தோம். இந்தப் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கியதை விட அவளின் நேசமல்லவா நான் தேடிய பெரும் தேட்டம். அவளோடு நானும் என்னோடு அவளும் ஆத்மார்த்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுகிப் பிணைக்கப்பட்டதுவும் பெரிய உசத்தியானவை யல்லவா? இன்றைக்கு எல்லாவற்றையுமே பொய்யாக்கிவிட்டு ஆளுக்கொரு திசையில் எங்களைப் பிரித்ததென்ன? எதற்காக நாங்கள் இருவரும் பொய்யான வேசம் போட்டபடி வாடிச்சாகவேண்டும். சந்தோசமென்பதை சூழல் தானா திணிப்பது? "

அபுலுக்கு இப்போதுதான் உமறின் கவலைக்குரிய விஷயம் மனசில் பிடிபட்டது. அபுலுக்கு கழிவிரக்கமாயிற்று.

"உமர் தயவு செய்து மனதைத் தளர விடாதே. நான் மகனிடம் இதைப்பற்றிப் பேசுகிறேனே."
"இல்லை அபுல் நான் அதற்காகப் பேசவில்லை. வயது போய்விட்டது என்பதற்காகவே பிரித்து வைப்பது தப்பில்லையா? அவளுக்கு நானும் எனக்கு அவளுமாக பழைய நினைவுகளைப் புரட்டிக்கொண்டு சந்தோசமாகயிருக்க வேண்டிய நேரமல்லவா இது? இப்படித்தூரமாக்கி வைப்பதற்கு உடன்படுவதே, என்னுடைய பழைய வாழ்க்கை எல்லா வற்றையும் கொச்சைப்படுத்துவது போல் இல்லையா? "

"உண்மை உமர். என்னால் இதுவரை இதைப்பார்க்கவே முடியாதிருந்திருக்கிறதே என வருத்தமாயிருக்கிறது".

அவ்விடத்தை விட்டு இருவரும் எழும்புவதற்கு இரவு எட்டு மணிக்கு மேலாயிற்று.

"மகள்.....நிஸா......" என்ற படி உமர் வாயிற்படியில் கால் வைத்தார். தாழ்ப்பாள் விலகும் ஓசை கேட்டது. தலையை நிமிர்த்திப் பார்த்தார். சொற்கள் நாவுக்கு வராது போயின அவருக்கு. எதிரே மனைவி சபீனா சிரித்தபடி நின்றிருந்தார். மனசு மலர்ந்தது அவருக்கு. இவர் எப்போது வந்து சேர்ந்தார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளே வாருங்கள்." சிரித்தபடி நின்ற சரீனாவைக் கண்டதும் தான் அவசரப்பட்டு உளறிவிட்டோமோ? என்ற எண்ணம் மனதில் ஓடிற்று. உடம்பெங்கும் ஜில்லென்றாயிற்று அவருக்கு. அவளைக் கண்ட சந்தோசம் தொலைந்து போய்விடக்கூடாதே என்பதைப்போல அவளைப்பார்த்தபடியே சிறிது நேரம் நின்றார். ஆனால் சரீனாவின் இன்றைய சிரிப்பில் அவர் வித்தியாசம் கண்டார். ஒரு சோகமும் அவளில் இழையோடுவதாகத் தெரிந்தது. மனது அலைபாயத் துவங்கிற்று அவருக்கு.

"என்ன சரீனா திடீரென்று"

"இவள் ஆரிபா என்மையக் கணக்குப்பார்க்கிறாள் தெரியுமா? இவ்வளவு உதவியையும் என்னிடம் வாங்கிவிட்டு இப்போது கரித்துக் கொட்டுகிறாள் அவள். சே.. இவளையெல்லாம் மகளாயப் பெற்று வளர்த்திருக்கிறோமே நாம்".

சரீனாவின் புலம்பல் இன்னமும் கூடிக்கொண்டே போயிற்று. ஆரிபாவைக் கரித்துக் கொட்டத்துவங்கினார் அவர்.

"ஏய்.... சரீனா என்ன பேச்சுப் பேசுகிறீர். ஆரிபா யார் நமக்கு? வாயை மூடுங்கள். அப்படி என்ன செய்துவிட்டாள் பெரிதா அவள்? "

"மருமகன் கணக்குப் பார்க்கிறாராம். ஆயாவும் நானும் எதற்கென்று கேட்கிறாராம் அவர். மருமகன் நிச்சயம் சொல்லியிருக்கமாட்டார். இவள்தான் அதன் மனதையும் கலைத்திருப்பாள்."

உமருக்கு ஓரளவு நிலைமை விளங்கியது. ஏதும் ஏறுக்கு மாறாக நடந்திருக்குமோ என்று பயந்து கொண்டிருந்தார் அவர். நல்ல காலம் அப்படியில்லை. நிச்சயமாக ஆரிபா இப்படிப் பேசியிருப்பாளா? மகளைச் சந்தேகப்பட அவரால் முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வேறெங்கிருந்தோ போடப்பட்ட தூண்டல் என்பதை அவர் ஓரளவு ஊகித்தார். யார்? யாராயிருக்கும் அது? நிச்சயமாக அபுலாக இருக்க முடியாது. இப்போது அவருடன் பேசியதிலிருந்து. அவர் அப்பாவி. இனிமேல்தான் ஏதாவது செய்தாலும் செய்வார்.

"இவளும் இப்படித்தான் இருப்பாளாக்கும். இவர்களை வளர்ப்பதற்கு மாடுகளை வளர்க்கலாம்."

சரீனாவின் எந்தப்பேச்சுக்கும் நிஷா பதிலிறுக்கவில்லை. இலேசில் ராத்தா ஆரிபாவை அவள் விட்டுக் கொடுப்பவளல்ல. எல்லாவற்றையும் கேட்டபடி இன்றைக்கு ஏன் மௌனமாய் இருக்கிறாள். 'எனக்கெதுவும் தெரியாதப்பா' என்றபடி இவள் உலாத்துவது கூட வேசமென்றே அவருக்குப்பட்டது. அப்படியானால்.... ஓ! இவள்தானா? உமருக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஆனால் சிரிக்கவில்லை. சரீனா கோபித்து விடக் கூடும். இவர்கள் ராத்தா தங்கை இருவருமாகச் சேர்ந்து ம்மாவை ஆட்டங் காட்டியிக்கிறார்கள். 'என் மகளல்லவா' மனது இப்போது வீறாப்புக் கொள்ள ஆரம்பித்தது அவருக்கு.

"சரி... சரி.... அங்கே என்ன பிரச்சினையோ... நமக்கு என்ன தெரியும். விட்டுவிடலாமே. இனியும் புலம்பாமல்."

சேட்டைக் களற்ற ஆரம்பித்தார். சரீனா சோப்பும் பிறசும் எடுக்க பாத்றூமுக்கு ஓடிப்போனார். இனி அவர்களின் ஊஞ்சல் ஆடத் துவங்கிவிடும்.

தினக்குரல் 03.01.1999

மருதமுனை பொது நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தோசத் தோல்வி

தாஹிருக்கு எட்டு வருடத்தின் பின் காணும் நண்பனைத் தவிர்ப்பதா? அல்லது காரியாலயம் செல்வதை ஒத்திப்போடுவதா? என்பதில் சிறிது யோசனையாயிருந்தது. ஆம் சிறிதுதான். ஏனெனில், நிதி உதவியாளன் இன்று எப்படியும் பத்துமாதக் கடனைத் தருவதாகச் சொல்லியிருக்கிறான். மூன்று மாதமாக இதற்கென அவன் அலைந்த அலைச்சல் அதிகம். அதைவிட அவன் தருவதாகச் சொன்ன வார்த்தையை நம்பிக் கிட்டத்தட்ட அதேயளவிற்குத் தேதி சொல்லிக் கடனும் பட்டாயிற்று. எனவே நண்பனை விட காரியாலயம் பெரிதாயிற்று அவனுக்கு. இப்போதைக்கு பஸ் பிடித்து வெளிக்கிட்டால்தான் 'எவ். ஏ.' ஐப்பிடிக்க முடியும். நண்பன் அஸ்லமிற்குத் தாஹிரின் அவசரம் புரிந்தது. தன்னைத் தவிர்க்க முனைகிறான் என எண்ணவும் அவனால் முடியவில்லை.

"அஸ்லம் இது என்ன திடீர் விஜயம். அமெரிக்கா கூடக் கசந்து போய்விட்டதா உனக்கு? "

"அப்படியொன்றுமில்லை. ம்மாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. திடீரெனக் கிளம்பியாயிற்று. அதை விடு இப்போது எங்கு செல்ல வெளிக்கிடுகின்றாய்? அவசியமான பயணமா? "

"ஆம் நண்பனே காரியாலயம் வரை போக வேண்டியுள்ளது. பிற்பகல் நாம் மீளச் சந்திக்கலாமா? "

"இல்லை இல்லை உன்னை இப்போதைக்கு நான் விடுவதாக இல்லை. இன்றைய பொழுதை உன்னுடன் செலவிடுவதாகவே உத்தேசம். நானும் உன்கூட வரலாம்தானே? "

"அதற்கென்ன தாராளமாய். எனக்கும் துணையாய்ப் போயிற்று".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்லம் அன்றையவனாகவே மாறாது இருந்தான். எப்போதைக்கும் திட்டமிட்டு அவன் வாழ்ந்ததில்லை. முகம் வயது சென்ற அடையாளம் கொள்ளவில்லை. எப்போதுமே முகத்தில் ஒரு செழிப்பு எதன் மீதும் - யார்மீதும் ஒரு அலட்சிய பாவம். சிலவேளை இந்தத்தன்மைகள்தான் அவனின் பலங்களாயிருக்க வேண்டுமென்று தாஹிருக்குப் பட்டது. அப்படியானால் தாஹிரின் பலம்? யோசனை வெட்கத்தையே தோற்றுவித்தது அவனில்.

இருவரும் பால்ய வயது முதல் நண்பர்கள். அதைவிட பாடசாலையில் உதைபந்தாட்டக்குழுவின் சிறப்பு வீரர்கள். அஸ்லம் நல்ல தேர்ந்த பெக்கி. தாஹிர் எப்போதும் சென்ரர் பொஸிசன். தாஹிர் தன்முனைப்புக் கூடியவன். அதைவிட சங்கோஜி. மூன்று பேரையாவது 'ரொச்' பண்ணி தனியாக கோல் சூட்பண்ணுவதில் அதிகம் ஆவல் கொண்டிருந்தான். அவனுக்கு குழு ஒருமையை வற்புறுத்தியவன் அஸ்லம். அதைவிட குழுவில் அவனை முதன்மைப்படுத்தி அவனது சங்கோஜத் தன்மையை ஓரளவு குறைக்க முயன்றவன் அவன். அஸ்லம் எதையும் எப்போதும் பெரிய இலட்சியமாய்க் கருதி வேலை செய்ததில்லை. உயர்தர வகுப்பில் எப்பாடுபட்டாவது சித்தியடைந்துவிட வேண்டுமென வகுப்பே கற்றலை-அல்ல அல்ல மனனமிடுதலை மேற்கொண்டிருக்கும். இவன் கடைசி பெஞ்சில் உட்கார்ந்து சுந்தர ராமசாமியின் புளிய மரத்தின் கதையில் மூழ்கிக் கிடப்பான். மோக முள்ளை வாசித்துவிட்டு மூன்று மாதங்கள் தாஹிரைப் போட்டறுத்தான் அவன்.

வாழ்க்கைக்கு அல்லது அதன் கட்டுக் கோப்புக்கு அஸ்லம் விடுத்த சவால்கள் - அல்லது அவற்றை அலட்சியமாக அவன் எடுத்துக்கொண்ட விதங்கள் ஆச்சரியகரமானவை. தாஹிர் தினமும் பாடசாலைக்குச் செல்ல அஸ்லமையும் கூட்டவருவது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாஹிரைக் காணும் போதுதான் அவன் படுக்கையைவிட்டு எழும்புவதாக இருந்தது காண ' இதேதடா தொல்லையாயிற்று' என தாஹிர் நாட்டம் போவதைக் குறைத்துக் கொண்டான். அதற்காக 'ஏனடா வரவில்லை' என அவன் எந்தப் பிகுவும் பண்ணிக்கொள்ளவில்லை. ஆனால் பாடசாலை வரவு அவனுக்கு இதனால் ஓரளவு குறைந்துதான் போயிற்று. அதைப்பற்றி அவனே கவலைப்படாதபோது எனக்கென்ன எனத் தாஹிரும் விட்டுவிட்டான்.

அஸ்லமிற்கென ஒரு வாகான உடுப்பு. சிகையலங்காரம் எதுவென தாஹிரால் எப்போதும் மட்டிட்டுக் கூற முடிந்ததில்லை. ஒரு முறை அடர் முடியால் நெற்றியில் பாதி, கழுத்தின் பின்புறம் காணாமல் போயிருக்கும். பின் திடீரெனப் பொலிஸ்காரத்தனமாகக் களையப்பட்டு, கட்டையாய் நின்றிருக்கும். மீசை, தாடி எதுவும் பொருட்டாய் அவனுக்கு இருந்ததில்லை. முழுக்க மழித்த பெண் பிள்ளைத் தனமாயிருக்கும். மறு முறை வாயினை எட்டும் மீசையும், தாடியும் முகத்தையே இருட்டாய்க்காட்டும். ஒருமுறை சேர்ட், மணிக் கட்டுவரை மடித்து லோங்ஸினுள் கிடக்கும். அல்லது அரைக்கைச் சேர்ட்டானது தொளதொளவென்று வெளியில் பறந்து கிடக்க ஆடிவருவான். தாஹிருக்கு என்ன இவன்? என்று படும். கேட்டால் 'இது போதும் இவர்களுக்கு'' என்பான் அஸ்லம்.

கல்முனையிலுள்ள 'கமால்ஸ் தியேட்டரி'ல் எப்போதும் ஆங்கிலப் படங்களே ஓடும். அஸ்லம் ஒருபோதும் அதைத் தவறவிட்டதில்லை. தாஹிர்கூட முதன்முதல் வயதுவந்தோருக்கான ஆங்கிலப்படம் பார்த்ததுவும் அவனுடன்தான். தாஹிருக்கு யாரும் தன்னைப் பார்த்து விடுவார்களோ என்று ஏகப்பட்ட பயமாயிருந்தது. அன்று அவன் பட்டபாடு; திரும்பித் திரும்பி பார்த்ததில் அவன் கழுத்தே சுளுக்கிக்கொண்டு போயிற்று. ஆனால் அஸ்லம் எந்த விதப்பதட்டமுமின்றி இயல்பாய் இருந்தான். இவை அத்தனையையும் தூக்கிச் சாப்பிடுவதாக இருக்கும் அவன் பெண்களுடன் பழகும் முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.எல்.படிக்கும் காலத்திலேயே அவன் நிறையப் பெண்களுடன் சினேகிதமாயிருந்தான். எந்தவித முன்னேற்பாடோ, உசார் நிலையோ இன்றி எப்படி மணிக்கணக்காய் இவர்களுடன் பேச முடிகிறது என்பது தாஹிருக்கு மிக ஆச்சரியத்துக்குரிய விடயம். 'உலகின் மிக அற்புதமான - அழகிய படைப்பே பெண்தான்' என அவன் சிலாகிக்கும்போதெல்லாம், 'பொம்புளப்பொறுக்கி' எனத்தான் மற்றவர்கள் அவனை மட்டிட்டார்கள். அவன் அதற்காகக் கவலைகொண்டதில்லை. 'உலகில் எங்குமாய்ச் சிதறிக்கிடக்கும் அழகுகள் ஒன்றாயச் சேர்ந்த ஸ்தலமே பெண் - எதற்கு மற்றவனைப் போல் வேஷமிட்டு இதை மூடிவைக்க வேண்டும்.' எனப் பதில் வரும் அவனிடமிருந்து. 'எல்லோருமே என்னைப்போல் எண்ணம் கொண்டவர்கள்தான். ஆனால் பயந்தாங் கொள்ளிகள். இங்கும் நிம்மதியின்றி ஹுர்லீன்களுக்காய் (சுவர்க்கத்துக் கன்னிகள்) ஆசைப்பட்டு உள்ளதையும் இழந்து நிற்கும் கபோதிகள்'. என ஆத்திரப்படுவான். அதைவிட காணும் பொருள்கள் எல்லாவற்றையுமே பெண்ணாய் உவமித்துப் பேசும் அவனாற்றல் ஒரு அழகான அலாதியான விஷயம்தான்.

அஸ்லமின் நடத்தையை, அவனைத் தாஹிர் ஏற்றுக் கொண்டானோ இல்லையோ தெரியவில்லை. ஆனால், அவனது வெளிப்படையான நடத்தையினால் இவன் கவரப்பட்டான் என்றே சொல்லவேண்டும். அல்லது அவனைப்போலவே வாழ ஆசைப்பட்டும் - முடியாது போனமையால் அவனை ரசித்தபடி தன்னை அவனது பிரதிமையாகக் காண்கிறானா? அப்படியும் இருக்கலாம். அஸ்லமைக் கண்டதும் தாஹிருக்கு யோசனையாய்ப்போயிற்று. தான் ஏ.எல்.பரீட்சையில் சித்தியடைந்து, பல்கலைக் கழகம், வேலையென்று எட்டு வருடங்களை வீணாக்கிவிட்டோமோ என்று சந்தேகம் கொண்டான். அவன் அப்போதே - அதாவது சீனி கிலோ இரண்டு ரூபாவென விற்கும்போதே அறுபதினாயிரம் கட்டி கிரேக்கக் கப்பலில் காணாமல் போனான். பின் அமெரிக்காவில் வைத்து கப்பல் தலைவனுக்குக் காணாமல் போனான். அதன் பின் கிறீன் கார்ட் எடுத்துப் படித்து இப்போது ஏகப்பட்ட அனுபவங்களுடன் ஐஸ்வரியங்களுடன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வயதில் அவனுக்கிருந்த தெளிவும், பற்றின்மையும் தனக்கில்லாது போயிற்றே எனக் கவலை பிறந்தது தாஹிருக்கு.

எதிலும் பற்றின்றி - யாரையுமே பெரிதாகப் பின்பற்றாது அந்தந்தக் கணக்கில் வாழப்பழகிவிட்ட இவன் தன்னுடனான சினேகித நிலையை இன்னமும் எதற்குத் தொடர்கிறான் என்ற ஆச்சரியம் தாஹிருக்கு இல்லாமல் இல்லை. ஆனால் ஒன்று, எல்லாக் காலங்களிலும் தாஹிரின் நட்பை அவன் பேணியே வந்திருக்கிறான். தாஹிரிடம் இருந்து பதில் பெற்றானோ இல்லையோ ஒரு மாதத்துள் ஒரு கடிதமாவது அஸ்லம் போடாமல் இருந்ததில்லை. அஸ்லமின் இளமைக்காலம் பூராகவும் அவனது எல்லா இயல்புகளையும் அங்கீகரித்த, இயைபுகொண்ட ஒருத்தன் என்பதற்காக நன்றி, விசுவாசம் கொண்டிருக்கிறானா? அல்லது தனது சுயத்தை அவன் தெரிந்து கொண்டமையால் கழிவிரக்கம் கொண்டிருக்கிறானா? தாஹிரால் காரணம் பெறுவது கஷ்டமானதாகவே இருந்தது. ஆயினும் அவனது நட்பில் ஒரு இதம், ஆறுதலை தாஹிர் பெறாமலுமில்லை.

"வேன் ஒன்று வருகிறது. அதை நிறுத்தவா?" தாஹிருக்குக் காரியாலயம் செல்வதில் அவசரம் இருந்தது. வேனின் மிதிபலகையில் நிறையப் பேர் தொங்கி வருவதை இங்கிருந்தே பார்க்க முடிந்தது.

"என்ன, வேனைத் தோளில் சுமந்து வருகிறார்களா?" தாஹிர் பதில் சொல்லாது சிரித்தான்.

"நிறைமாதக் கர்ப்பிணி வயிறுபோல ஒரு பக்கமாய் சரிந்தும் வருகிறது. நாம் பஸ்ஸில் போவோம்." தாஹிர் வேனைத் தவிர்க்க வேண்டியதாயப் போயிற்று. பஸ் வருவதற்கிடையில் காரியாலயம் செல்வதற்கான காரணத்தையும் கூற வேண்டியதாயிற்று. அஸ்லம் சிறிது நேரம்வரை எதுவுமே பேசாது இருந்தான்.

"ஏன் இன்னும் என்னைத் தூரமாகவே நீ பார்க்கிறாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7258

அவளின் கேள்வி காரமாயிருந்தது. அதில் சோக உணர்வையும் தாஹிர் கண்டு கொண்டான். கேள்வியினூடு அவள் சொல்லவந்ததை விளங்கியும் விளங்காதவனாகவே பதில் சொல்ல முயன்றான்.

"நீ என்ன சொல்ல வருகிறாய்....?"

"மடத்தனமாகத் பேசாதே உனது சமூகத்தை சுற்றுசூழலைத் திருத்திப்படுத்துமளவு உனது சம்பளம் போதுமானதாயிருக்கிறதா? என்னிடம் உதவி-அல்லது உனது சுயகௌரவம் பாதிக்குமென்றால் கடன் பெறுவதில் நின்று உன்னை எது தடுத்தது? ஏன் இதுவரை காலமும் பொய்யையே எழுதி வந்தாய்?"

கேள்விகள் கூடின. தாஹிருக்கு எப்படி பதில் சொல்வது என்ற திகைப்பு ஏற்பட்டது.

"நீ எதை வாழ்க்கை என்கிறாய். ஒவ்வொருத்தர் பார்வையைப் பொறுத்தது அது. எனக்கு இந்த வாழ்வே போதுமானது என்று படுகிறது. தயவுசெய்து நீயாக சில எண்ணங்களைப் போர்த்திக் கொண்டு என்னைக் குற்றம் சாட்ட வராதே."

"இது வேண்டுமானால் நீ போட்டுள்ள வேஷத்தைத் திருப்திப் படுத்தலாம். மற்றப்படி பொய்யே பேசுகிறாய் நீ"

"எதைப் பொய்யென்கிறாய். உனக்குத் தெரியுமா?, நான் கூட ஒரு சிறுகதைத் தொகுதி போட்டுள்ளேன் என்பது. இங்கு எவ்வளவு பணத்தியிர் பிடித்த வேலையது தெரியுமா?"

அஸ்லம் திடீரெனச் சிரித்தான். அவன் பதில் பேச சிறிது நேரமாயிற்று.

"ஆம்! அதையும் கேள்விப்பட்டேன். அதன் வெளியீட்டு விழாவைக்கூட ஒரு பிரபல்யம் வாய்ந்தவனைக்கொண்டு வெளியிடுமளவு போய்விட்டிருப்பதைக் கேள்விப்பட்டு வெட்கப்பட்டேன். உனது எழுத்தின் மீதான நம்பிக்கை உனக்கே தாழ்வாகத் தெரிந்ததேன் என்று எனக்குத் தெரியவில்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ என்ன பேசுகிறாய்?"

"ஒரு எழுத்தாளனின் ஆத்மாவினது திருப்தி இதனால் எவ்வாறு பெறப்படும் என்பதை என்னால் விளங்க முடிய வில்லை. லௌகீக வாழ்வைவிட்டும் அவனைத் தூரமாக்கி வைத்ததை அல்லது அவனது சுயதேடுதலை இந்த நிகழ்வு கொச்சைப் படுத்துகிறதே என்கிறேன். அந்தப் பிரபலம் முன் உன் உள்ளார்ந்த ஒளி களங்கப்பட எவ்வாறு நீ இடம் கொடுத்தாய் என்பதை என்னால் புரிய முடியவில்லை என்கிறேன்."

தாஹிர் நிறைய மனக் காயங்களுக்குள்ளானான். பொல்லைக் கொடுத்து வாங்கிக் கட்டிக்கொண்ட நிலையாயிற்று.நல்ல வேளையாக பஸ் வந்து அவனைக் காப்பாற்றிற்று. பஸ்ஸினுள் இருவரும் ஏறிக்கொண்டனர்.

"பஸ் அழகாயில்லை"

அஸ்லமின் கூற்று தாஹிருக்கும் சரியென்றே பட்டது. உள்ளாய் இளம் வயதாக எந்தப் பெண்ணுமே அங்கில்லைதான்.

"தாஹிர்! என்மீது கோபம் இல்லைதானே? உனது நல்ல நண்பன் நான்தானென இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறேன். அந்த வகையில் இதைச் சொல்ல எனக்கு உரிமை உள்ள தாகவே நான் நினைக்கிறேன்."

"நீ சொல்வதை ஏற்கிறேன். வாழ்வின் நிதர்சனம் புரிய உனக்கு இதுவரை சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. நீ உனக்கோ அல்லது உனது எண்ணத்திற்கோ இதுவரை மாசு கற்பித்து வாழும்படியாய் நிலைமை ஏற்பட்டதில்லை. உன்னால் திடமாக 'துரோக வாழ்வு வாழ வேண்டாம்' என வாழ்ந்துகொள்ள முடிந்திருக்கிறது. ஆனால் இந்த சமூகம் தந்த பாடங்களின் முன் பலமுறை நான் தோற்றுப்போனேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை நியாயப்படுத்த முனைவது கூட உனக்குக் கோபம் தரக்கூடியதே! என்னால் போராடி வெல்லக் கஷ்டமாயிருக்கிறது."

"சரி...சரி.... போதும்! தயவு செய்து என்னை மன்னித்துக் கொள் ஆனால் உன் மீதுகொண்ட விசுவாசம் காரணமாகவே...."

மேலே அஸ்லமைப் பேச தாஹிர் விடவில்லை. அவனது கையை அழுத்தமாகப் பற்றிக் கொண்டான். அங்கு நிலைமை நல்ல இறுக்கமாயிற்று.

நிதி உதவியாளன் காரியாலயத்தில் இருந்தான். இவர்கள் உள்ளே சென்றவேளை வேறு யாருடனோ பேசிக் கொண்டிருந்தான். மூடிய கண்ணாடி அறையினுள் அவனைச்சிறை வைத்திருப்பதாகவே தாஹிருக்குத் தோன்றிற்று. தன்னைக் கண்டதனாலேயே முன்னால் இருப்பவனுடன் மும்முரமாக ஏதோ கதைக்க - அலுவல் புரிய அவசரப்படுகிறானோ என்றும் பட்டது. கண்ணாடிக் கூண்டு முறையே இந்த அதிகாரிகளுக்கு மற்றவர்கள் தமக்காகக் காத்திருக்கிறார்கள் என்பதைப் புரிய வைப்பதனால் ஒரு மமதையை வளர்க்கத் துணை போகிறதோ எனவும் தாஹிர் யோசித்தான். கடைசியில் ஒரு வழியாக உள்ளிருந்தவன் கதிரையை விட்டெழும்பினான்.வெளியே வந்த வனைக் கண்டதும் தாஹிரும் அஸ்லமும் ஒன்றாய் அதிர்ந்து போயினர். அதைவிட நிதி உதவியாளன் அவனுக்குக் காட்டிய மரியாதைதான் இப்போது அதீத ஆச்சரியத்தை விளைவித்தது. சலாம் வரிசை போடாததுதான் குறை. அவன் - றபீக் இவர்களுடன் எட்டாம் வகுப்புவரை ஒன்றாகப் படித்தவன். பின்னர் அவனது வாப்பாவின் பின்னால் இரும்பு வியாபாரத்திற்காகக் கடையைப் பார்க்கப்போய் விட்டவன். இவனுக்கும் இந்தக் காரியாலயதிற்கும் என்ன தொடர்பு?

"ஏய்!... நீ அஸ்லம்தானே! என்ன இந்தப்பக்கம்? "

"ஒன்றுமில்லை றபீக், தாஹிருடன் வந்தேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ!.. இன்னமும் தொடருதோ! அது சரி தாஹிருக்கு என்னால் உதவ முடியும். வந்த வேலை ஆயிற்றா? "
"வேண்டாம் சின்ன வேலைதான். அதுசரி நீ என்ன இங்கு வந்திருக்கிறாய்? "
"நல்லது, நான் இப்ப கொன்ரக்ரர் தெரியுமா? பிறகு உங்களைச் சந்திக்கிறேன். வரட்டுமா? "

றபீக் வெளியாகிச்செல்ல தாஹிர் மட்டும் அறையினுள் சென்றான். பேசினான். ஆனால் அன்றும் அவனுக்குக் காரியம் கைகூடவில்லை. எப்.ஏ.கூறிய காரணங்கள் இட்டுக்கட்டப்பட்டவை என்பதைத் தாஹிர் அறிவான். இவன் தன்னிடம் பணம் எதிர்பார்கிறான் என்பதையும் தாஹிர் புரிந்து கொண்டான். அதே நேரம் தாஹிரிடம் இருந்து இலேசில் கசியாது என்பதையும் அவன் புரிந்து கொண்டான். தாஹிரின் நேர்மை (அவனது எண்ணப்படி கையாலாகாத்தனம்) அதற்கு ஒருபோதும் இடம் கொடாது. தாஹிருக்குக் கவலையும் ஆத்திரமும் ஒருங்கே வெளியாயிற்று.

'நான் ஏமாளியா? என்ன மயிரைப் பிடித்துக்கொண்டு - இவ்வளவு அற்பமான வாழ்வு வாழ வேண்டும். இந்த மனச்சாட்சி - ஆன்மாவையெல்லாம் கொஞ்ச நேரம் தூரமாக வைத்து விட்டு - இவனைத் தூக்கிப பிடிக்க முடியாமைக்கு என்ன காரணம்? தனது இயலாமையின் மீது வெறுப்பே வந்தது அவனுக்கு. ஒன்றுமே பேச முடியவில்லை. திடீரென அறையை விட்டும் வெளியேறினான்.

தாஹிரைக் கண்டதும் அஸ்லமிற்குச் சகலதும் விளங்கிற்று. அவனின் முகவாட்டமே படம் பிடித்துக்காட்டிற்று. சிகரட் ஒன்றைப் பற்றவைத்து தாஹிருக்குக் கொடுத்தான். பின் அவனும் ஒன்றைப்பற்ற வைத்துக் கொண்டான். சிறிது நேரம் இருவரும் எதையுமே பேசிக் கொள்ளவில்லை. அந்த அமைதியை அஸ்லமால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நண்பனே மனசைத்தளர விடாதே! எதுவும் சாத்தியம் என எடுத்துக் கொள். நான் உனக்கு உபதேசிக்க வேண்டியதில்லை. ஆனால்........" அஸ்லம் கூறி முடிக்கவில்லை; தாஹிர் ஊடறுத்துப் பேசினான்.

"தயவு செய்து கடன் பட்டாயிற்று. அதை இந்தக் கடனால் தீர்க்க நினைத்திருந்தேன். அதுதான் கவலை.

"வேறு வழியில்லாமல் போகுமா? கவலையை விடு. ஆனால் எனது நட்புக் கொச்சையாயிற்றே. என்பதற்கு இன்னமும் ஆதாரம் எழுதுகிறாய் என்பதில்தான் நான் வேதனைப்படுகிறேன். உனக்குள்தான் எவ்வளவு குறுகிய மனம்..

தாஹிருக்கு, அஸ்லமிடம் தன்னை எப்படிப் புரிய வைப்பது என்பது விளங்கவில்லை.! அவனுடனான நட்பில் கூட குறுகிய மனம்கொண்டு பார்ப்பதாக ஏன் கூறுகிறான். பணம் கடனாகக் கேட்பதில்தான் நட்பின் முக்கியத்துவம் தெரிய வரும் என்கிறானா? நட்புக்கு முன்னுரிமை வழங்குவதை அடையாளப்படுத்துவது இதுதானா? தாஹிருக்குக் குழப்பமாயிருந்தது.

இருவரும் அக்கரைப்பற்று வந்து சேர ஆறு மணியாயிற்று. அஸ்லம் தாஹிருடனேயே வீட்டுக்கு வந்தான். இரவுவரை பேசிக் கொண்டிருந்தான். தாஹிர் காயப்பட்டுள்ளான் என்பதனால் தனிமையில் விட அவனுக்குச் சிரமமாயிருந்தது. இரவுச் சாப்பாடும் முடிந்த பின்னர் அவன் விடை பெறும்போது இரவு பத்து மணிக்கும் மேலாயிற்று.

தாஹிர் தனிமையில் ஆனான். மனதில் மீளவும் கவலை சூழ்ந்தது. சிகரட் ஒன்றைக் கொழுத்தினான். ஆஷ்ரேயை மேசையில் தேடினான். அதனருகே நீண்ட கவருடன் ஒரு கடிதம் கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்துப் பார்த்ததும் உடைந்து போனான் தாஹிர். அவனது பெயருக்கு அஸ்லம் ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு ஒரு காசோலை எழுதி வைத்திருந்தான். மேசையில் கடிதத்தை அப்படியே போட்டுவிட்டு வெளியில் வந்தான். தான் மீளவும் தோற்றுப் போய் விட்டோம் என்பதை உணர்ந்தான். கூடவே தனது நட்பு சோரம் போய் விடவில்லை என்பதையும் உணர்ந்தான். அஸ்லம் சொன்னதன்படி இந்த உலகமே அவனுக்குச் சொந்தமானதெனினும் அவனது நட்பே பெரிது என்பதை வெளிக்காட்ட இது சந்தர்ப்பமாய் அமைந்ததையிட்டு நிம்மதியும் அவனுள் பிறந்தது. தாஹிர் இனித் தெளிவடைந்த மாதிரித்தான்.

தினக்குரல் 22.02.1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கட ஆட்கள்

அந்தச் செய்தி கிடைத்தபோது அவர் அம்பாறை வைத்தியசாலையில் இருந்தார். கியாஸால் அதை நம்ப முடியவில்லை. நேற்றுச் சிரித்துப்பேசி வழியனுப்பி வைத்த பிள்ளை, இன்று சூடுபட்டு இறந்து போயிற்றென்பது மலைப்புக்குரியதாயிருந்தது. மனைவிக்கு பிள்ளை கிடைக்க வேண்டும். மாமியைக் காவலுக்கிருத்திவிட்டு ஊர்வந்து சேர்ந்தார். சுரேசின் அப்பா கதிர்காமர் அவரது ஆத்ம தோழர். கதிர் (அப்படித்தான் அவர் அழைப்பது வழக்கம்) இடிந்து போய் உட்கார்ந்திருந்தார். தனது ஒரே மகனை அநியாயப் பலி கொடுத்த சோகம் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும். கதிரின் மனைவி தயா மகனின் அதன்மேல் புரண்டழுவது தெரிந்தது. கியாஸுக்கும் தேறுதல் சொல்ல வார்த்தைகள் வர மாட்டேனென்றது. கதிரின் நிலை குத்திய பார்வை கியாஸுக்கு யோசனையைத் தந்தது. நண்பன் அழுது விடுவானாகில் நல்லது என நினைத்தார். வீடும் வாசலும் என ஏகப்பட்ட சன நெரிசலாயிருந்தது அவ்விடம்.

கதிரை அக்கரைப்பற்று ஊருக்கே தெரியும். இருபது வருடங்களாக எண்ணெய்க் கடை வைத்திருப்பவர் அவர். எல்லா மக்களுக்கும் இங்கு காணிகளுண்டு; அதனால் எண்ணெய் தேவைப்பட்டது. மனைவியின் நகையை அடகு வைக்காமலேயே அவரிடம் வாங்க முடியும். அறுவடை முடிந்த பின் நியாய விலையிலேயே கணக்கை பைசல் பண்ணமுடியும். அதைவிட நெற்களை ஒன்றுசேர்த்து மில்லுகளுக்கு வழங்கும் இடைத் தரகராகவும் அவர் இருந்தார். இதில் எந்தப் பிணக்கும் இதுவரை வந்ததில்லை. வராது. ஏனெனில் கதிரின் இளகிய மனது அப்படி. அதனால் கதிரின் இன்றைய சோகம் ஊரின் சோகமாயிற்று.

சுரேஷின் உடலைப் புதைத்தபின் மெல்ல மெல்லச் சனமும் கலைந்து கொண்டிருந்தனர். ஆனால் கியாஸ் கதிரை விட்டும் ஒதுங்கப் பயந்தார் இப்போது வெளிக்கிட்டால் அம்பாறைக்குப் போய் விட முடியும். மாமி, மனைவியை விட்டவா உசத்திஎன வம்பு பேசக் கூடும். ஆயினும் கியாஸ் நண்பனைத்தனியே விட விரும்பவில்லை. கதிரை நெருங்கினார்.

"கதிர், தயவு செய்து மனதைத் தளர விட்டு விடாதே"'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர் பதிலொன்றும் பேசவில்லை. நண்பனையே வெறித்தார். கியாஸின் தோளில் அவரின் முகம் புதைந்தது. உடல் குலுங்கிற்று.

"என்ன பாவம்செய்தேன் அநியாயமாக் கொன்றுபோட்டாங் களே.." விசும்பல் கூடிற்று. கியாஸுக்கு நெஞ்சு கனத்தது. நண்பனைத் தேற்ற வழியின்றி அவரது தோளைத் தடவினார். அவராகவே அழுது ஓயட்டும் என்று பட்டது அவருக்கு. ஒளி மறைந்து இருள் சூழத் துவங்கிற்று. கியாஸ் அன்றிரவு கதிருடனேயே தங்கினார். கதிரைத் தனியே விடுவதற்குப் பயமாகவும் யோசனையாகவுமிருந்தது அவருக்கு.

அடுத்த நாள் கியாஸுக்கு ஒரு மகன் கிடைத்தான். புதிய வரவால் வீடே சந்தோசத்தில் களை கட்டியிருக்க வேண்டும். பெரிதாக எந்த ஆர்ப்பாட்டமும் அங்கு நிகழவில்லை. சல்மாவுக்கும் இது எதனால் என்பது தெரிந்திருந்தது. தயாவைக் காண அவாக் கொண்டிருந்தாள் அவள். ஆனால் பச்சை உடம்பு எனக்கூறி அவளைச் சுற்றம் தடுத் திருந்தது. பிள்ளை கிடைத்து மூன்றாம் நாளே கதிர் வீடு வந்திருந்தார் பரிசுப் பொருளுடன். தயா வரவில்லை. கதிரைக்காண சல்மாவுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. கியாஸ் கூட பேச்சு அற்றவராய் நண்பரைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். இந்த நிலை நீடித்திருப்பதைக் கதிர் விரும்பவில்லை போலும்.

"கியாஸ் நாம் சற்று வெளியே போகலாமா? "

கியாஸ் பதில் சொல்லாமலேயே எழுந்தார். தனது பால்ய காலமிருந்து பழகி வரும் நண்பன். குடும்பமான பின்னரும் தொடரும் நட்பைக் காப்பாற்றி வருபவன். கதிரின் ஒவ்வொரு நடத்தைக்கும் காரணம் தெரிந்து கொள்ளுபவர் அவர். இது வரை காலமும் இவ்வாறு இடிந்து போன கதிரை அவர் கண்டதில்லை. தனது தந்தையின் சாவிலும் தளராத கதிர் இப்போதுதான் தளர்ந்து போயிருந்தார். முகம் வெறித்துக் கிடந்தது. எந்தப் பேச்சும் இல்லாமலேயே இருவரும் தமது வழமையான தங்குமிடத்திற்கு - தைக்காவடிக்கு வந்து விட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக்காவடியில் பெரியதொரு ஆலமரம் கபுறுஸ்தானத்தையும் வீதியையும் சேர்த்ததாய் குடை பிடித்து நின்றது. அதன் வயதுக்கு எத்தனை ஆயிரம் மையத்துக்களைப் பார்த்திருக்கும்? இவ்விடம் வரும் போது ஒவ்வொருத்தனும் போடுகின்ற வேசங்களைக் கண்டு வேடிக்கையாயிருக்குமோ அதற்கு? மரணத்திற்குப் பயமும், சொர்க்கத்திற்கு ஆவலும் கொண்டலையும் பாவிகள் நாலெட்டு வைத்தவுடன் எல்லாமே மறந்து போய்......' இருவரும் மௌனமாகவே கிழவரின் கடைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டனர். கதிர் கையில் அன்றைய பத்திரிகை இருந்தது.

"கியாஸ் சிங்களமும் தமிழும் பிரச்சினைப் படுகிறதென்று, ஹிந்தியக் கொண்டு வரப் போகிறார்களாம். இவர்கள் ரெண்டு பேருமே பேசித்தீர்க்க முடியாததையா வருபவன் தீர்த்து வைப்பது."

"பிரச்சினையின் அடிவேரே வேறு கதிர்"

"என்ன சொல்கிறாய் கியாஸ்"

"சமயமும் அரசியலும் வேறு வேறு என்பதைப் புரியவைத் தோமானால் பெருமளவு பிரச்சினை தீர்ந்துபோகும்"

"அதாவது"

"ஒருவன் மார்க்கவாதியாயிருப்பதும், மனிதனாயிருப்பதும் வேறு வேறு எனப்பார்க்கும் நிலையைக் களையவேண்டும்."

"அது சரி, இதில் குழப்பம் எங்கு வந்தது"

"மார்க்கம் என்பதை மத ஸ்தலங்களுடன் மட்டும் வைத்துக் கொண்டு வாழ்க்கையை வேறாகப் பார்க்க எப்போது கற்றுக் கொண்டானோ, அப்போது துவங்கிற்று பிரச்சினை. இது அரசியல்பண்ண அரசியல்வாதிக்கும் வாகாகப்போய் விட்டமையால் நிலைமை இன்னும் சாபத்திற்குரியதாயிற்று."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிருக்கு கியாஸ் அரசியலையும் இதனுடன் ஏன் தொடர்புபடுத்துகிறார் என்பது முதலில் பிடிபடவில்லை.

"அது என்ன? மதத்துடன் அரசியலைச் சேர்ப்பது?"

"நான் சேர்க்கவில்லை கதிர். இந்த இரு சாராருமே சேர்ந்துதான் நாட்டை இரத்த ஆறாக்கி விட்டிருக்கிறார்கள் என்கிறேன். அரசியலினூடு சேவை செய்ய நல்ல மனிதன்தான் வரமுடியும். ஆனால் பௌத்தன், இந்து, முஸ்லிம் என வேறாக்கி ஆதாயம் தேட வெளிக்கிட்டி ருக்கிறார்கள் இவர்கள்.. தேர்தலில் வென்றதுமே தலதா மாளிகை, கோயில், அல்லது பள்ளிவாசலுக்கு இவர்கள் ஓடி வருகிறார்கள். ஏனெனில் நான் நல்லதொரு பௌத்தன், இந்து, அல்லது முஸ்லிம் என்பதைத் தெரிவிப்பதற்காக"

"உண்மை கியாஸ் பக்தி என்பது உனது தனிப்பட்ட விஷயம். அதையே தூண்டிலில் இரையாக்கி, மக்களை வேறாக்கி எவ்வளவு இளம் உயிர்களைப் பலிக்கடா ஆக்கி விட்டார்கள் இவர்கள்?"

இருவரும் திடீரென மௌனமாய்ப் போனார்கள். கண் எதிரே நிஜத்தில் அந்த சோகம் கண்டவர்கள். எதைத் தொடக்கூடாதென்று கியாஸ் நினைத்தாரோ, அங்கேயே கடைசியாகப் பேச்சு வந்தாயிற்று. கியாஸுக்கு பேச்சைத் திசை திருப்ப எண்ணம் வந்தது. நல்ல காலம், கடைக்காரக்கிழவர் கைகொடுத்தார்.

"சேர் ரீ ஆறுது"

"ஓ! மறந்தே போயிற்று"

"நீங்க இருவரும் சேர்ந்தால், எல்லாமே மறந்து போய்விடுமே"

கிழவர் சிரித்தார். இருவரும் தேனீரைப் பருகினர். இருவருமாக சிகரட்டைக் கொழுத்தினர் பேச்சு மீளவும் பிறந்த பிள்ளையைப் பற்றித் திரும்பிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று திங்கட்கிழமை. பகல் சாப்பாடு உண்ட களைப்பில் சாய்வு நாற்காலயில் கியாஸ் கண்ணயர்ந்திருந்தார். சைக்கிள் மணியோசை அவரை எழுப்பிற்று. கதிர்வந்து நிற்பதைக் கண்டார். அவரது கையில் ஒரு புத்தகம் இருந்தது. மூன்று மணிக்கெல்லாம் தேடி வருபவரல்ல கதிர். சம்சயம் கொண்டார் கியாஸ். எனினும் வெளிக்காட்டவில்லை.

"உள்ளே வா கதிர். என்ன புத்தகம் அது?

"ஜே..ஜே...சில குறிப்புகள். என்னடா இதற்கு இத்தனை விமர்சனமென்று தேடி வாங்கினேன். வாசித்து விளங்கி எடுக்கவே மாதமொன்றாயிற்று. நீயும் அவசியம் வாசிக்க வேண்டும்."

"ஓ! நன்றி. தயா எப்படி சுகமா?"

"அவருக்கென்ன! இறால் வாங்கி வரச் சொன்னார். முகத்துவாரம் போவோமா?"

இந்த நேரம் இறால் எவன் விற்கப்போகிறான்?. கதிர் எதையோ தனியே பேசவிரும்புகிறார் என்பதை கியாஸ் அறிந்தார். உடனேயே அவருடன் வருவதாக ஒப்புக் கொண்டார்.

"கியாஸ் இனக் கலவரம் கல்முனைக்கும் பரவிற்று. நேற்று மாளிகைக் காட்டிலும் கலவரமாம். எரிகிற வீட்டிலே பிடுங்கியது இலாபமென்று வந்த இந்தியனும் தூண்டுகிறார்கள் போலுள்ளது."

"ஓ என்ன மனிதர்கள் இவர்கள் எதையோ கோபித்து குடத்தை உடைத்தமாதிரி எவரிலோ காட்ட வேண்டிய கோபத்தை ஏன் மறுபுறமாய்க் காட்ட முனைகிறார்கள்.

"என்ன கியாஸ் இது? அவன் பாவமில்லையா? இவன் 'அம்மா' என்றால் அவன் 'அம்மே' என்பான். மற்றப்படி எதற்காக இரு புறமும் இந்த அக்கிரமம்? "

மருதமுனை பொது நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நமது நாடு சுதந்திர நாடு. ஆனால் அவனுக்கு இவன் பயந்து, இவனுக்கு அவன் பயந்து.., சுதந்திரத் தையே தொலைத்து நிற்கிறார்கள் பார்?"

"உள்ளுக்குள்ளே சந்தேகித்து, சந்தோசம் தொலைத்து.. சே.. கியாஸ், கொஞ்ச நாளைக்கு வீட்டுப் பக்கம் வராதே. நானும் வராமல் இருக்கிறேன், நிலைமை மாறுவுக்கு வரட்டும். எந்தப் புற்றில் எந்தப் பாம்பெனக் கண்டோம்."

இருவரிலும் கவலை குடி கொண்டது. முகத்துவாரத்தில் முஸ்லிம்களும் தமிழர்களும் வேறு வேறாக நின்று மீன் பிடித்தார்கள். அவர்களாகவே பயம் கொண்டு பிரிந்து போய் நின்றனர். மெல்ல மெல்லச் சாகடிக்கப் போகும் நிலைமை கண்ணெதிரே வந்தது கான மனசு பொருமிற்று. அவர்கள் திட்டமெதுவும் போடாமலேயே வகுத்துக் கொண்டாயிற்று எல்லையை என்பது இரு கூட்டமும் காண விளங்கிற்று. ஆனால் ஒரு முகத்துவாரம், ஒரே ஊர்.

நாட்கள் மிக மெதுவாக நகர்ந்தன. மனம் சந்தோசமாயில்லாத போது அப்படித்தான் தெரியும் போலும். எந்த மனிதனும் வெட்கப் படும் படியாய்ச் சம்பவங்கள் நிகழத் துவங்கின. கிடைக்கும் செய்திகள் இனத்துவேச வித்தை மரமாய்க் கிளை பரப்பத் துணை போயின. பிட்டும் தேங்காய்ப் பூவுமாய் (எல்லா அரசியல் வாதிகளும் இப்படித்தான் கூறுகிறார்கள்) கிடந்த இனமிரண்டும் வேறுபட்டு நின்றன.

'காத்தான்குடி பள்ளில சுட்டதாம்'

'சோமர்ர கடைய உடைத்ததாம்'

'காரைதீவுக்க பூந்து சுடுகிறார்களாம்.'

'வயல்ல சூடடிச்சவங்களச் சுட்டதாம்'

அமைதியான அக்கரைப்பற்றின் வாசலையும் தட்டி நின்றது இனத்துவேசம். மக்கள் பயத்திலும் அதனாலெழுந்த ஆத்திர உணர்விலும் பதறினர். காலை சென்ற கணவன் வீடு வந்து சேர வேண்டிக் கவலையில் குந்திக் கிடந்தனர் மனைவியரும் பிள்ளை களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் என்ன? கதிருக்குத் திடீரெனக் கேட்ட கூக்குரலும் அழுகைச் சத்தமும் இருந்த கொஞ்ச நம்பிக்கையையும் போக்கடிக்கப் போதுமானதாயிருந்தது. ஓடும் மக்களின் ஓலக் குரலால் மனசு கலங்கிற்று. விரட்டுவோர் எல்லோருமே தனக்குத் தெரிந்தோர் என்பதில் தைரியம் ஓரளவு கொண்டார். அவர் மனைவி தயாவுக்கு நிலைமை ஓரளவு விளங்கிற்று.

"இங்கே பாருங்கள்.... இப்ப போகவேண்டாம்... போகா தீர்கள்" தடுத்த கையை ஓரமாக விலத்தினார்.

"எனக்குத் தெரியாதவங்களா? என்னை ஒன்றும் செய்ய மாட்டார்கள். நீ உள்ளே போ"

மேலும் சுணங்க அவர் விரும்பவில்லை. வாயிலை நோக்கி விரைவாக நடந்தார். கேற்றினைத் திறந்தார். வலது எட்டை வீதியில் வைத்தபோது சரியாக நெற்றியில் விழுந்தது முதல் சூடு அவருக்கு. 'அம்மா' என நெற்றியில் கை வைக்க அடுத்த சூடு நெஞ்சில் விழுந்தது. கீழே சரிந்தார் கதிர். அவரது கடைசிச் சொல் அது.

கியாஸ் இப்போதெல்லாம் வெளியில் செல்வதைக் குறைத் திருந்தார். பாடசாலையை விட்டும் ஓய்வில் நின்று கொண்டார். 'இந்த மக்களுக்காகவே தனது வாழ்வை தொழிலை அமைத்துக் கொண்ட கதிருக்கா இக்கதி? அவரது நம்பிக்கையைப் பொய்ப் பித்து விட்ட துவக்கு பெரிதாக என்ன காரணம் கூறும்? ' கியாஸால் அமைதி கொள்ள முடியவில்லை. இங்கு எவனுமே தராத ஆத்ம பிணைப்பைத் தந்தவன் பிறப்பால் ஒரு இந்து என்பதற்காக என்னை விட்டும் தூரமாவது எந்த நியாயத்தில் சேர்த்தி? இரண்டு மாதத்துள்ளேயே பிள்ளையையும் புருசனையும் இழந்து போய் நிற்கும் தயா என்ன பாடு படும்? சல்மாவின் கடிதத்திற்கும் பதில் போடாதபடியான சோகம் ஆட்படுத்தியுள்ளதா? கியாஸ் தயாவின் செய்திகள் எதுவும் தெரியாதவராகவே இருந்தார். இதே நிலைமை தொடர்ந்திருப்பதை அவரால் தாங்க முடியவில்லை. கியாஸுக்கு தயாவை நினைக்கப் பாவமாயிற்று. கதிரை, தயாவை எண்ணி எண்ணி உருகிக்கரைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை சுமுகமாக மாற (அப்படியும் சொல்ல முடியாது. ஓரளவு என்பதே, சரியானது) ஆறு மாதமாயிற்று. உயிர்த் தோழனின் மரண வீட்டிற்கு செல்லக்கிடைத்த கால இடைவெளி வெட்கத்தை ஊட்டிற்று அவருக்கு. தயாவைக் கண்டதும் சல்மாவுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

"ஏம்மா.. நீயாவது போக வேண்டாமென்று தடுத்திருக்கலாமே"

"நான் தடுத்ததுதான். அவர் கேட்கவில்லையே... எனது சனம்..எனது பிள்ளைகள். என்னை ஒன்றும் செய்ய மாட்டார்களென்றுபோனார்.கொண்டு போய் விட்டார்களே."

மேலே பேச தயா கஷ்டப்படுவது தெரிந்தது. விம்மினாள்.

"சுட்ட பாவியாரும்மா? எந்த நாசமாய்ப் போனவனவன்?" சல்மா குரலை உயர்த்திச் சாபமிட்டவளாகக் கேட்டாள்.

"எல்லாம் உங்கட ஆட்கள்தான்."

தயாவின் பதிலினால் சல்மா திகைப்படைந்து போனாள்; கியாஸ் கூடத்தான். தயாவை இருவரும் வெறித்தபடி பார்த்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரிகாணல்

நான் எனது வாப்பாவை நினைத்து அடிக்கடி ஆச்சரியப்பட்டுக் கொள்வதுண்டு. இன்றைக்கு பல்கலைக் கழக விரிவுரையாளனாய் இருந்தும் அவர் முன் இன்னமும் மாணவனாகவே என்னை நான் உணருகிறேன். 'இப்படியான தகப்பன் யாருக்கு வாய்க்கும்' என்ற இறுமாப்பு எப்போதுமே எனக்குண்டு. 'எங்கு கற்றார். எப்படித்தெரியும். சாதாரண கடை முதலாளியாயிருந்து கொண்டே எங்கு தேடிப் பெற்றார்? ' எனக்கு இன்றைக்கும் விடை தெரியாமல் போன கேள்விகள் இவை. இவரது தேடலின் முன் எனது தேடுதலினால் நான் பெற்ற பட்டங்களை மிகப்பெறுமதியற்றதாகவே என்னால் நினைக்க முடிகிறது.

எனக்கும்-எனது வாப்பாவுக்குமான உறவு தந்தை மகன் என்பதைவிட நல்ல சிநேகித நிலையிலேயே இருந்து வந்தது. அங்கு கண்டிப்பு இருந்ததில்லை.எனக்கு இன்றைக்கும் நினைவிலிருக்கிறது. பத்தாம் வகுப்பில் அப்போது கல்வி கற்றுக் கொண்டிருந்தாக ஞாபகம்.

"வாப்பா, அல்லாஹ் தேவையற்றவன் என்கிறோம். ஆனால் தொழும்படி ஏவி எனது தொழுகை, கடமையை அவன் வேண்டி நிற்கிறானல்லவா? " எனக் கேட்டதும், அருகிலிருந்த உம்மாவுக்குக் கோபம் வந்து விட்டது. ஆனால் வாப்பா சிரிப்புடனேயே இருந்தார்.

"அவனை அதட்டாதே! கேள்வி நல்ல விஷயம். தொழும்படி குர்ஆனில் சொல்லப்பட்ட எண்ணிக்கையை விட ஐந்து மடங்கு சிந்திக்கச் சொல்லியிருக்கிறது. 'சிந்தனையின் அடிப்படையே கேள்விதான். ஆனால் எல்லா மதத்தினது பெரியவர்களும் சிந்தியாதே கேள்வி கேட்காதே அது பாவகரமானது' எனச் சொல்லிச் சொல்லியே மதத்தை சடங்காய் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்" என உம்மாவின் பக்கம் திரும்பி பதில் சொன்னவர் என்னைப்பார்த்து.



மருதமுனை பொது நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகனே. உனக்கு யாரென்றும் தெரியாத ஒருவர், உனது தேவையொன்றை நிறைவேற்ற உதவினால் உனக்குக் கோபம் வருகிறதல்லவா? அதாவது உன்னை அவமானப்படுத்தியதாக நினைக்கிறாயல்லவா? இதைப் போல நீ கேட்காமலேயே உனக்கு அல்லாஹ் எத்தனை ஆயிரம் உதவிகள் வழங்கியுள்ளான் என்பதை உன்னால் உணரமுடிகிறதா? மிகச் சிறிய உதவி,உனது கற்றலிலேயே சொல்கிறேன் கேள். காதினுள் மெழுகுத் தன்மையான பசை இருந்தே ஆக வேண்டும். இல்லாது போனால் ஊத்தேக்கியாவின் கால்வாயினூடு கிருமி புகுந்து மூளை சேதப்பட்டுப் போகும். உனக்குச் சுவாசிக்கக் காற்று, உண்பதற்கு பச்சையம் கொண்ட தாவரம், கடைசியாய் இந்த உலகத்தையே அடக்கியாளும் வல்லமை; இதற்கெல்லாம் சேர்த்து நீ நன்றி செலுத்த வேண்டாமா? நீ ஒரு நல்ல மனிதன்தானே? "

என்றார்.

எப்போதும் அவரில் இவ்வாறான ஒரு உயர்தர மனப்பான்மையையே என்னால் காண முடிந்தது. அவரது இயல்பே இதுதான் என்பதாக எனக்குப்படும். என்னையோ அல்லது யாரையோ அவர் புண்படுத்தும் படி பேசியதாக எனக்குத் தெரியவில்லை. என்னில் குடி கொண்டிருக்கும் பரபரப்பு, அலட்டல் கூட எனது பட்டங்களால் என்னில் வளர்ந்தவையாய் அல்லது தாயின் மூலம் பெற்றவையாயிருக்க வேண்டும் என நினைக்குமளவு அவர் அமைதியானவராயிருந்தார்.

வாப்பா இப்படி இருக்கிறாரென்றால் எனது ம்மா ஒரு வித்தியாசமானவராயிருந்தார். அவரது கற்றல், அதனால் விளைந்த மனப்பாங்குகள் இந்த மாதிரி அவரை வளர்த்து விட்டிருக்க வேண்டும். நான் வாப்பாவில் காணும் இந்த 'ஜீனியஸ்' தனத்திற்கு உம்மா நிச்சயம் பொருத்தமானவரல்ல என்றே எனக்குப்படுவதுண்டு. ஆயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பா ஒரு முறை கூட உம்மாவைக் கடிந்து பேசியதில்லை. உம்மா மனம் நொந்து போய்விடக்கூடாதே என்பதற்காக, அவர் படுகின்ற பாடுகளை நினைத்து நானே உருகிப் போவதுண்டு. இல்லையென்ற அன்பு பாராட்டினார். எப்படி நேசமாய் இருந்த போதிலும் அவர் களிடையே மெல்லிய நூல் வேலி ஒன்று திரைபோட்டிருப்பதாகவே என்னால் நினைக்க முடிகிறது.சிலவேளை அந்த வேலி வெளித்தெரிந்து விடும்,அல்லது வேலி இரும்புத் திரையாகிவிடும் என்பதைத் தவிர்க்க அவர்கள் முனைகிறார்களோ என்றே சில சந்தர்ப்பங்களில் நினைக்க வேண்டியிருந்தது.

இரண்டாம் தவணை விடுமுறைக்காக நான் ஊர் வந்திருந்தேன். உம்மாவின் முகம் வழமைக்கு மாறாய் சுரத்திழந்திருக்கக் கண்டேன். வாப்பா இயல்புடன் இருந்த போதிலும் அவர் அடிக்கடி வெறித்தபடி இருப்பதுகாண எனக்கும் யோசனையாய்ப் போயிற்று. வழமைபோல இரவுச் சாப்பாட்டை வாப்பாவுடன் இருந்துஉண்டபின் சிகரெட் பிடிக்கவென்று வெளியில் வந்தேன். முற்றத்தில் மறைவாய் உட்கார்ந்ததும் வாப்பா வெளியில் வருவது தெரிந்தது. நேராக என்னிடமே வந்தார். என்னருகே உட்காந்து கொண்டு சிகரட் ஒன்றை எடுத்து எனக்காக நீட்டினார். சிறிது தயக்கமாயிருந்தது எனக்கு.

"எதையும் மறைக்காதே! எனது மகன் நிச்சயம் பிழை செய்ய மாட்டான் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நீயாக சிகரெட் பிடிப்பது பிழை என்ற எண்ணத்தில் குற்ற உணர்வுக்கு ஆளாகாதே! எப்போதும் எந்நிலையிலும் நீ எதுவோ அதுவாயிரு" என்றார். நான் அப்போதும் தயங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகனே பாவம், பிழை, குற்றம் என்று எதுவுமே
இல்லை. நீயாக எந்த ஒரு அணுவையும் அசைக்க
முடியாது. பாவத்திற்கான காரணம் சூழ்நிலை -
சந்தர்ப்பத்தைப் பொறுத்தே அமைகிறது இல்லையா?
யார் உனது பியாஜே'சொன்னதுவா இது? " எனக்
கூறிச் சிரித்தார். நான் சிகரெட்டை வாங்கிப் பற்ற வைத்துக்
கொண்டேன்.

"வாப்பா உம்மா ஏதோ பிரச்சினையில் இருக்கிற மாதிரிப்படுது.
ஏதாவது நடந்ததா? "எனக்கேட்டதும் வாப்பாவின் கை எனது
தோளில் மெல்ல அழுத்துவதை உணர்ந்தேன்.கையின்அழுத்தமே
நான் அவரில் மிக மனச் சஞ்சலத்திற்குரிய கேள்வியைக்
கேட்டுவிட்டேன் என்பதைப் புரிய வைத்தது.

"மகனே நான் உம்மாவை மிஸ் பண்ணி விடுவேனோ
எனப்பயப்படுகிறேன். இங்கு நாம் ஒவ்வொருத்தருமே
ஒவ்வொரு போதையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.
உனக்கு உனது பெயரைப் புத்திஜீவி எனப்பதிக்க
சிலரில் மேல் நாட்டு மோகம், சிலருக்கு சொகுசு
வாழ்வில், அதே போல் எனக்கு என்னைக் கண்டு
கொள்ள வேண்டும் என்ற ஆசை - போதை
இருப்பதாகப் படுகிறது. உம்மா எதிர்பார்க்கும் சராசரிக்
கணவனாக என்னால் இருக்க முடிந்ததில்லை.
உம்மாவுக்கும் எனக்குமான வயது வித்தியாசம்
பன்னிரெண்டு வருஷங்கள். இதுவும் அவளில் பாரிய
தாக்கங்களைக் கொண்டு வந்திருக்க வேண்டும்
எனப்படுகிறது" எனக் கூறிவிட்டு நெடு நேரமாக
மௌனமாகவே இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு விளங்கவேயில்லை வாப்பா. இந்த இருபத்தெட்டு வருட தாம்பத்தியத்தின் பின்புதானா இவை பிரச்சினை யாய்ப் போயிற்று?"

"அவளது தேடல் இந்த அரைவேக்காட்டுத்தனமான சினிமாவும், சொப்பிங்கும், சாறி, நகைகளுமாயிருக்க எவ்வளவு காலம் என்னால் இவற்றைச் சகித்துக் கொண்டிருக்க முடியும். எவ்வளவு எடுத்தோதியும் விளங்குவதாயில்லை. சிலவேளை அவளது அழகு இளமையில் நான் மயங்கியவனாய் ஆரம்பத்தில் சில பிழைகள் செய்ததனால், விட்டுக் கொடுப்புகளை மேலதிகமாக வழங்கியதனால் இன்றைக்கு இப்படியாயிற்றோ தெரியவில்லை"

வாப்பா நான் என்றுமே காணதபடி சிறிது உணர்ச்சி வசப்பட்டிருப்பதாக எனக்குத் தெரிந்தது. எனது உம்மா ஒரு ஆசிரியை. உம்மாவால் வாப்பாவை விளங்காத அளவு போயிருக்க முடியுமா? அல்லது அடிப்படையில் வேறேதும் பிரச்சினை இருக்குமா? ரசனை வேறுபாடே இந்த அளவு தூரத்தை வளர்த்து வாப்பாவை இப்படி உணர்ச்சி வசப்படும்படி கொண்டு வந்திருக்கும் என நம்புவது எனக்குக் கஷ்டமாயிருந்தது. இவர்களிடையே தொடர்ந்தும் இதே நிலை பேணப்படுமாயின் நான் இதில் ஏதாவது பங்கு ஆற்றவேண்டியிருக்குமா? என்பதுவும் எனக்குத் தெரியவில்லை. வாப்பாவால் இமாம் கஸ்ஸாலி, பரஹூம்ஸர், விவேகானந்தர், இப்னு அரபி இவர்களைத்தான் வாசிக்க முடிகிறது. உம்மாவால் மாத நாவல்களுடனும் துப்பறியும் காதல் கதைகளுடனும் நின்று கொள்ள முடிகிறது. வாப்பா ஏன் சொல்லிக் கொடுக்காது போனார்.

எனக்கு யோசிக்க மேலும் குழப்பமாகவே இருந்தது. வாப்பா மேலும் பேசவே எனது சிந்தனை தடைப்பட்டது.

"மகனே நீ நினைப்பது சரியானதே! இந்த ரசனை வேறுபாடு மட்டுமே எங்களுக்குள் வேலிபோட முடியாதுதான். நான் உம்மாவைக் கைப்பிடிக்கும் போது எனக்கு வயது முப்பத் தைந்து. கிட்டத்தட்ட முப்பது வருஷ தாம்பத்ய வாழ்வில் உம்மா என்னுடன் சரியான தாம்பத்ய உறவு கொண்டதே யில்லை என்றால் உனக்கு ஆச்சரியமாயிருக்குமா? அவளுக் குப் போதிக்கப்பட்ட போதனைகள் பிழையானவையாயிருக்க வேண்டும். என்றைக்கும் அவள் ஈடுபாட்டுடன் இருந்ததில்லை. பிச்சை போடுவது போல, 'எனக்கு விருப்பமேயில்லை. உனக் காகத்தான் இந்தா எடுத்துக்கொள்' என்ற நிலைதான் இருந்தது. சிலவேளை ஈடுபாடு கொண்டதை வெளிக் காட்டினால் அவளை நான் பிழையாக நினைக்க வழி வகுத்து விடும் என அவள் பெற்ற போதனைகள் சொல்லியிருக்கலாம். ஒரு வகையில் அவளின் இந்த நிலைதான் எனக்கு இந்தப் பற்றற்ற தன்மையை ஊட்டிற்றோ தெரியவில்லை. நான் அவ்வாறுதான் அவளைப்பற்றி நினைக்கிறேன். அதாவது ஒரு வகையில் அவளும் எனக்கு உதவி செய்ததாகவேபடுகிறது."

"காமத்தை ஏன் பாவநோக்கில் பார்க்கிறார்கள். அது பாவமா வாப்பா? "

"யார் சொன்னது மகனே. வீதிக்கு வரும்போது பிற பெண்ணைக் கண்டு ஆசை வருமெனில் உடன் வீடு கூடும்படி சொல்லியிருக்கிறபோது.... எந்த மதமும் பாவமென்று அதனைச் சொன்னதில்லையே"

"அப்படியானால், ஏன் பெண், ஆண்களில் இந்த மனோபாவம் வளர்கிறது வாப்பா? "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சில நாலாந்தர புத்தகங்கள், ஏனைய அறிவு புகட்டிகள் எல்லாமே படைப்பின் தத்துவத்தை ஆராய, சிந்திக்க மறக்க வைத்தமை"

"குழப்பமாயிருக்கிறதே? "

"சரி உனது உளவியலாளன் பிராய்டையே எடுகோளாய் எடு. ஒரு மகன் தாயைச் சார்ந்து வளர்வதும், மகள் தந்தையைச் சார்ந்து வளர்வதும் எதனால்? நீ கூட நகம் கடிப்பது, சிகரட் பற்றுவது கூட தாயின் முலை உன்னில் குறித்த பிள்ளைப்பருவத்தின் முன்னரே பிடுங்கப்பட்டமையால் தான் என்கிறான். நீ மனைவியில் தேடும் முலையும் பிறப்புறுப்பும்கூட முன்னரே உன்னால் குறைவுபட்டதை நிரப்புவதற்காக என்கிறான். நமது சமூகங்களிடையே பெண்ணுறுப்பைப் பால் பழம் வைத்து பூஜிக்கும் வழக்கம் கூட முன்னர் இருந்தது. அதாவது பெண் பூஜிக்கப்பட்டு மரியாதை செய்யப்பட வேண்டியவள். ஏன் தெரியுமா, காமம் வழங்கி ஆணைத் தன்னிலை காணத் தூண்டுவதால்."

"இன்னமும் குழப்புகிறீர்களே வாப்பா"

"மகனே பெண் தனது படைப்பின் தத்துவத்தைப் புரியாத நிலைதான் பிரச்சினை யாவற்றுக்குமே அஸ்திவாரம். தற்போது அஸ்திவாரத்தை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதத்துக்காக ஹவ்வாவே தவிர ஹவ்வாவுக்காக ஆதமல்ல"

"இது எப்படி தன்னிலை காண உதவும்"

"மனைவியுடன் தன்னிலை மறக்கலாம். தொழுகையில் தன்னிலை மறக்கலாம். காமம் வேறொரு தன்னிலை மறத்தலுக்கு அஸ்திவாரம். தன்னிலை மறத்தலுக்கு உதவுவதால் மனைவியை நேசிப்பாய். அன்பு காட்டுவாய். புரிகிறதா மகனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் வாப்பாவும் நீண்ட நேரம் பேசாமல் இருந்தோம். பேசுவதை விட பேசாதிருப்பது அனேக அர்த்தங்களை விளக்கு வதாயிருந்தது. வாப்பாவின் பதிலால் நான் அடிபட்டுப் போனதாக உணர்ந்தேன். எங்குதொட்டு எங்கு வந்து நிற்கிறார். இவ்வளவு தெளி வாய்ப் பேச முடிந்த இவரால் ஏன் உம்மாவிடம் விளங்க வைக்க முடியாது போயிற்று.

"ஏன் வாப்பா உம்மாவுக்கு புரிய இயலாமல் போயிற்று?" எனக் கேட்டேன்.

"யார் யாரைப் புரிவது மகனே. என்னால் உம்மாவைப் புரிந்து கொள்ள முடிந்திருக்கிறது என நினைக்கிறாயா? உன்னைப் புரிந்து கொண்டுள்ளேன் என்று நம்புகிறாயா? முழுப்பொய் அது. வெறும் நம்பிக்கையில் வாழ்கிறோம். ஆனால் நீ உன்னைப் புரியப்பார் வெற்றி பெறு. யார் மீதும் கோபம் வராது. அன்பு பெருகும் எல்லோருக்கும் உதவும் மனநிலை வரும். இவ்வளவின் பின்னர் கூட என்னால் அவளை நேசிக்க முடிகிறது. சின்னப் பிள்ளையாகவே எனக்குப்படுகிறது. அவள் மீது இல்லையென்ற பரிதாப உணர்வே எனக்குண்டு."

நான் எதுவும் பேசாது வாப்பாவை வெறித்தபடி பார்த்திருந்தேன். அவரே தொடர்ந்து பேசினார்.

"புத்தருக்குக் கூட ஞானம் பெற வேண்டி வீட்டை விட்டுப் போகும் போது யசோதரையிடம் சொல்லிக் கொள்ளாமல் நடு இரவில் கள்வனைப் போலத்தான் வெளியேற முடிந்தது. ஏனெனில், அவள் எழுந்தால் அவளினது அன்பின் முன்னே தான் போக முடியாதுபோய் விடுமோ என்ற பயம். இதில் நான் எம்மாத்திரம் மகனே? சரி தூங்கலாமா? " என்றவர் என்னையும் அவருடன் சேர்த்தணைத்தபடி வீட்டினுள் நுழைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வளாகம் வந்து விட்டேன். சரியாக இரண்டு மாதம் சென்றிருக்கும். ஏப்ரல் மாதம் ஏழாம் திகதி அவரின் அந்த முக்கிய கடிதம் எனக்குக் கிடைத்தது. ஒருபோதும் என்னை அவர் திகதியிட்டு வீட்டுக்கு வரும்படி இதுவரை காலமும் அழைத்ததில்லை. இதில் மே மாத முதல் கிழமையில் முடிந்தால் வீட்டுக்கு வரும்படி அழைத்திருந்தார். நிச்சயம் போவதாக முடிவு செய்து புறப்படவும் ஆயத்தமானேன்.

வீட்டினுள் நுழைந்ததுமே எனது ஊகம் சரியானதை நான் காணக் கூடியதாயிருந்தது. அவர் இருதய நோயில் அவதிப்பட்டவராக மெலிந்து போய்க்காணப்பட்டார். என்னைக் கண்டதும் மெல்லிய புன்முறுவல் படரக் கண்டேன். கொஞ்சம் பேசும் நிலையிலிருந்தார். நான் வந்து சரியாக இரண்டாம் நாளில் எனது வாப்பா மௌத்தாகிப்போனார். நான் எதிர்பார்த்ததுதான். என்பதால் அவ்வளவு தூரம் அதில் அதிர்ச்சியடையவில்லை. ஒரு மலைப்பு இருந்தது. 'இவருக்கு தனது மௌத்து இத்தனையாம் திகதி என்பது கூடத் தெரியும்.' என்பது இன்னும் என்னில் உள்ளது. இவை எல்லா வற்றையும்விட அதிர்ச்சிக்குள்ளாக்கிய விடயம், எனது உம்மாவின் நடத்தையேயாகும். அதிர்ச்சியுடன் வெகு ஆறுதலாகவும் உம்மாவில் ஏற்பட்ட மாற்றம் இருந்தது. 'தான் குற்றமிழைத்துவிட்டோமோ?' என்ற பாவத்தில் உம்மா வீட்டினுள் உலாவருவது, அவரது புகைப்படத்தின் முன் வெறித்தபடி நிற்பதுவும் காண எனக்கு மிகக் கவலையாயிருந்தது. பாவமாயிருந்தது. வாப்பா எனக்கு கற்றுத் தந்தவைகள் உம்மாவைச் சரி செய்ய உதவும் என்ற நம்பிக்கை ஓரளவு எனக்குண்டு. ஆனால் அது தேவைப்படாது என்றும் மனதில் பட்டது. சிலருக்குச் சரி காணல் என்பது சிந்தனை மூலம் அல்லது சிறு இழப்புக்களின் மூலம் கிடைக்கலாம். ஆனால் எனது உம்மாவை வாப்பாவின் மௌத்து சரிகாண வைத்துவிட்டிருக்கிறது. எனது வாப்பா வாப்பாதான்.

(வீரகேசரி வார வெளியீடு 10.09.1995)

மருதமுனை பொது நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சும்மா இருந்தலே சுகம்

ஆஷிக்கிற்கு மனைவி சல்மாவின் போக்குச் சிறிதளவு ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்திற்று.பெண்கள் எந்த வயதிலும் அலங்காரம், பகட்டுக்குரியவர்கள் என்பதை மெய்ப்பிப்பதாகவே அவளது செய்கைகள் இப்போதைக்கு-இந்த ஐம்பத்தைந்து வயதிலும் இருப்பதைக்காண ஆச்சரியமாயிருந்தது. சகபெண்களிடம் பெருமையடிப்பதற்கென்றே உடுப்பு, நகை, அலங்காரம்,வீடு ஏன் கணவனிடம்கூட இவர்கள் அதீதமான ஆசை கொள்கிறார்கள் என்றே இவரால் நினைக்கமுடிந்தது. இருபத்தைந்து வருடங்கள் தாம்பத்தியம் புரிந்த இவ்வீடு, இவ்வூரை விட அந்த ஜேர்மனி ஆசைக்குரியதாகவா போய் விட்டது? தோழியரைக் காணு மிடமெல்லாம் 'நான் மகனுடன் ஜேர்மனிக்குப் போகிறேன்.' எனப்பீற்றுவது, அவளது சுயத்தை அந்தஸ்தை உயர்த்துவதாக அவள் நம்பிக்கொண்டிருக்கிறாளா? ஆஷிக் நம்பக் கஷ்டப்பட்டார். இவள் அங்கும்கூட ஏமாற்றத்துக்குள்ளாகப் போகிறாளே என்பதை நினைத்து பரிதாபமே வந்தது. இந்த வயதில் சந்தோசம் -சுகம்தருவது எது? என்பதில் அவருக்கு ஒரு தெளிவு இருந்தது. அத்துடன் ஆத்ம நண்பன் மஜீத், தன்னில் விதைத்து வைத்த வித்துக்கள் இதற்கெல்லாம் இடம்கொடாது என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

சாய்ந்தமருதிலிருந்து அரைமைல் தூரத்திலுள்ள மையத்துக்களை அடக்கம் செய்யும் தைக்காவடியில் பெரும்பாலான பின்னேரப் பொழுதுகளை மஜீதுடன் செலவிடுவதை ஆஷிக் தனது வழமையான நிகழ்வில் ஒன்றாகக் கொண்டிருந்தார். நாளை பிற்பகல் அவர் பயணப்பட வேண்டியிருந்தது எனவே இன்றும் அங்கு அவர்கள் பிரசன்னமானார்கள். ஆனால் அதிகம் பேசிக்கொள்ள முடியவில்லை. அத்துடன் அன்றைக்கு ஒரு மையத்து அங்கு அடக்கம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. சூழ நின்ற எல்லோர் முகத்திலும் ஒரு பயம் தெரிந்தது. வாகனங்கள் கூட மெதுவாக சப்தமின்றிக் கடந்து சென்று கொண்டிருந்தன. இவற்றை விட மஜீதை விட்டும் பிரிகிறோமோ என்பதில் ஆஷிக் நிறைய கவலையை அடைந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆஷிக் எல்லோருமே சுவர்க்கத்தை விரும்புகிறார்கள் ஆனால் மரணத்திற்குப் பயப்படுகிறார்கள். பார்த்தாயா? "

ஆஷிக்குக்கு மெல்லியதாகச் சிரிப்பு வந்தது. பதிலொன்றும் சொல்லாமல் மஜீதையே பார்த்தார்.

"ஆஷிக் நேற்றுப் பணம், புகழ், பட்டத்திற்காக சமர் புரிந்த எல்லோரும் இன்று ஒன்றாகத் தூங்குகிறார்கள். எல்லாமே வீணாகிப்போனதை இப்போது உணர்ந்து அமைதியடைந்திருப்பார்களா? "

"மஜீத் என்ன சொல்ல வருகிறாய்?"

"மரணம் என்பது என்ன? ஒவ்வொருத்தனிலுமே எந்த அழுக்குமின்றி உள்ளே எரியும் ஆத்மாவைக் கண்டு கொள்வதுதானே? அதைக்காண விடாது தடுத்த இச்சை, ஆசை என்ற திரையால் அல்லது மண்குடத்தினால் ஒளியைக் காணாமலேயே இவர்கள் செத்துப்போய் விட்டார்கள் அல்லவா?"

"அப்படியானால் வாழ்வின்போதே அமைதியடைய முடியாதென்றா கூறுகின்றாய்? "

"அப்படி இல்லை ஆஷிக். குடத்தை உடைத்துவிடு, அல்லது பளிங்காக்கிவிடு என்கிறேன். அப்போது ஒளியைக்காண முடியும் என்கிறேன்."

"கொஞ்சம் தெளிவாகப் பேசு மஜீத்"

"ஆஷிக் எல்லாமே பொய் என்று கூறு. அல்லது நடப்பது எதுவுமே நம்பிக்கையில் இல்லையென்று சகலவற்றையுமே அவன்மேல் பாரத்தைப்போட்டுவிடு என்கிறேன். அதாவது நிகழும் எதையுமே விரோதியாது நடப்பது நிகழ நம்மை முழுச்சம்மதத்துடன் அனுமதித்து விடு என்கிறேன்."

"அதாவது எவ்வித முயற்சியுமின்றி இரு என்கிறாய்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை, நீ பிழையாகக் கூறுகிறாய். விளைவு உன் கையில் இல்லை என்கிறேன். பிறர் பராக்கின்றி செயற்பட்டு வருவதை ஏற்றுக்கொள் என்கின்றேன். அப்போதுதான் எங்கும் பரந்துள்ள ஒளியே உன்னிலும் உள்ளதைக் காணமுடியும். உயிருள்ள போதே மரணத்தை அடைய முடியும் என்கிறேன்."

ஆஷிக், மஜீத் ஆழமான தொடர்பு இந்த ஆத்மீகப் பிணைப்பினால் இன்னும் ஆழமாகவே இறுகிக்கிடந்தது. மகன் முபாரக்கிற்கு ஒரு நல்ல தந்தையாக, சல்மாவுக்கு நல்ல கணவனாக சமூகத்தில் நல்ல மனிதராயிற்றே என்று பெயரெடுக்க இப்படி எல்லாவற்றிலுமே நிறைவுகொள்ள மஜீதே காரணமென ஆஷிக் நம்பினார். தனது செயற்பாடுகளிலும் எண்ணங்களிலும் அவர் செல்வாக்குச் செலுத்துவதில் ஆஷிக் நிறைவே கொண்டார். பேச்சு மீளவும் தொடர்ந்தது. நாளையப் பிரிவின் கனத்தால் அவ்விடத்தை விட்டு இருவரும் வெளிக்கிட இரவு பத்து மணிக்கும் மேலாயிற்று.

மகன் முபாறக், மருமகள் ஜுனைதா, பேத்தியுடன் விமான நிலையத்திற்கு முன்னராகவே வந்திருந்தது ஆஷிக்கிற்குச் சந்தோசத்தைத் தந்தது. சல்மா பேத்தியை வாங்கக் கை நீட்டினாள். அவள் சல்மாவிடம் வரவில்லை. ஜுனைதாவை இறுக்கிக்கொண்டாள். சல்மாவின் போர்த்தி மூடிய மாமியார்த்தனமும் தனது நீண்ட முகத்தை மூடிய மயிர்களும் (தாடி, மீசை) பயத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என ஆஷிக் நினைத்தார். வருகிற மேயில் நாலாவது வயது தொடங்குகிறது. பேத்திக்கு.

"நாம் போகலாமா?" என்றபடி மகன் காரினுள் ஏறினான். அவனுக்கருகே ஜுனைதா பிள்ளையுடன் அமர்ந்து கொண்டாள். ஜுனைதா முன்னே இருப்பதை சல்மாவால் ஜீரணிக்கக் கஷ்டமாக இருந்திருக்க வேண்டும். முகம் சட்டென வாடிப்போயிற்று. ஆனால், ஆஷிக்கிற்கு இது எவ்வித பிரச்சினையையும் ஏற்படுத்தவில்லை. பெற்றவர்களைவிட அவள் என்ன உசத்தி என சல்மா பார்க்கிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலிருக்கிறது என நினைத்துக் கொண்டார். ஆனால் மகனது கலாச்சாரப்படி தான் முன்னால் உட்காருவோமானால், மகன் சாரதியாகவே உணரப்படுவான் என்பதை ஆஷிக் உணர்ந்திருந்தார். நிலைமை மேலும் சூடு பிடித்து விடக் கூடாதென்பதால் ஆஷிக் பேச்சைத் துவங்கினார்.

"எப்படி ஐரோப்பிய வாசம்"

"நோ ப்ராப்ளம்" என்றபடி முபாறக் தோளைக் குலுக்கிக்கொண்டான். முபாறக்கின் இந்தத் தோள் குலுக்கல், அபிநயம் கூட ஆஷிக் அவனில் காணும் புதிய மாற்றங்கள்தான். சூழலுக்கேற்ப தன்னால் இவ்வாறு மாற்றம் பெற்றிருக்க முடியுமா? என்பதில் ஆவர் ஐயம் கொண்டார். மனைவி சல்மா இவர்களின் ஐரோப்பிய கலாசாரம் போர்த்தியுள்ள அவசர அலட்சியப் போக்குகளால் நிறைய மனக் காயங்கள் படப்போகிறாளே என்ற எண்ணமும் அதனால் ஏற்பட்ட பயமும் அவரையும்கூட மௌனமாக்கிற்று.

ஆஷிக் ஜேர்மனி - பெர்லின் வந்து இரு மாதங்களாயிற்று. பேத்தி, சல்மாவுடன் வெகுவாக ஒட்டிக்கொண்டாள். தொலைக் காட்சியும் கொம்பியூட்டரும் அவளுக்கு அலுத்துப் போயிருந்தன. அவை வெறுமனே வெரிகுட் எனச் சொல்லிப் பாராட்டுவதில் பேத்திக்கு சலிப்பேற்பட்டிருக்க வேண்டும். சல்மாவின், ராஜா ராணிக் கதைகள், பாராட்டுதலுக்கான முத்தங்கள் இருவரிடையே ஒரு ஆத்மார்த்தமான பிணைப்பை ஏற்படுத்தி இருந்தன. இதற்கிடையில பிள்ளை பார்க்கவும் சமையலுக்குமென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆயா, 'நான் சும்மாதானே இருக்கிறேன். நானே சமைக்கிறேன்.' என சல்மா வரிந்து கட்டி நின்றதனால் மொத்த வேலையையும் இழக்கும் படியாயிற்று. இதில் ஜுனைதாவின் பங்கு எங்கே போயிற்றென்ற வினாவரும்? அவளும் வேலை செய்பவளாயிருந்ததால் ஒரு வகையில் இன்னமும் நிம்மதியானாள் என்பதே சரியானதாகும். சல்மா சமைக்கின்ற வேளைகளில் பேத்தியைப்பார்க்கும் வேலையை ஆஷிக் ஏற்றுக் கொண்டார். இதனால் பேத்தியின் நெருக்கம் அவர்களுக்கிடையே இறுக்கமானதாயிற்று. பேத்தியைப பயப்பட வைத்த ஆஷிக்கின் மீசையும், தாடியும் அவள் இழுத்து விளையாடும் வேடிக்கைப் பொருளாயின.

மருமகள் ஜுனைதாவுடன், சல்மாவுக்கு எந்தப் பிணக்குகளும் இதுவரை ஏற்படாத போதிலும் அவளின் சில செய்கைகளினால் மன முரண்பாடு கொண்டிருக்கின்றாள் என்பதை ஆஷிக் அறிந்தே இருந்தார்.

அவளின் நாகரீக உடுப்பு, பூச்சுச் சாயங்கள், எத்தனைபேர் எதிரிலிருப்பினும் மகனுடன் வழிந்து கிடப்பது போன்றவை சல்மாவிற்கு பிடிமானமில்லாதவையாகவே இருந்தன. ஆயினும், உதவி அரசாங்க அதிபரின் மனைவியாயிருந்து முப்பது வருடங்கள் குப்பை கொட்டியவள் அல்லது எமது மண்ணுக்குப் பழக்கமாகிப் போய்விட்ட அவளின் சுதந்திரமது என்ற போக்கின்படி விட்டுக் கொடுத்ததனாலோ என்னவோ இதுவரை பெரிதாகப் பிரச்சினைகள் அவர்களிடையே வெடிக்கவில்லை. மற்றப்படி குறித்த தின ஒழுங்கில் மிக மெதுவாக நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

அதிகாலை ஐந்துக்கெல்லாம் எழுந்து மகனும், ஜுனைதாவும் அவசர அவசரமாக உடுத்தோம், உண்டோம், வெளிக்கிட்டோம் என அவரவர் அலுவலகங்களுக்கு வெளிக்கிடுவார்கள். ஆஷிக் புத்தகம், ரெலிவிசன், பேத்தி, சல்மா எனப் பொழுதைக் கழிப்பார். சல்மாவுக்குப் பேத்தியும், சமையலும் இருக்கவே இருக்கின்றன. ஆனாலும் ஆஷிக் தனது மனதில் ஒரு வெறுமை படர்வதை இப்போதெல்லாம் உணர்ந்தே வந்தார். இங்கு வந்தது முதல் நண்பன் மஜீதின் ஞாபகம் அடிக்கடி வந்தது. மையவாடி நினைவுக்கு வந்தது. எல்லாவற்றையும் விட முறைப்படி இயங்கும் இந்த இயந்திரத் தனத்தின் மீது அவருக்குக் கூடிய சீக்கிரமே சலிப்பேற்பட்டுவிட்டது. சனி ஞாயிறு தினங்களில் நடக்கும் பிக்னிக் கேளிக்கைகள் கூட அவருக்கு எந்தவித ஆர்வத்தையும் தோற்றுவிக்கவில்லை.

வெறும் கட்டிடங்களும், கலர் கலரான மின் விளக்குகளும் ஜோடனை செய்ததாக வேடிக்கை நிறைந்ததாக எவ்வாறு மாற முடியும்?

எத்தனை சிறிய மனங்கள் இவர்களுக்கு? அதை விட, நமது ஊரின் மனிதர்கள் என்ற ரீதியிலான சில நிகழ்வுகளில் பங்கேற்ற போதுதான், ஆஷிக் நிறைய மனம் சோர்ந்து போனார். நாகரீகம் என்ற போர்வையில் இவ்வளவு தூரம் இவர்கள் கீழாகிப் போய் விட்டார்களா? இவ்வித பெருமையடிப்பும் பணம் தேடுதலும் என்ன நிறைவைத் தந்துவிடும்.?

தன் வயதொத்த கிழங்கள் கூட, 'ஹலோ நான் இப்ப மைக்கல் கொம்பனியில் கிளாக் தெரியுமா?' எனக்கிப்ப அறுபதினாயிரமாவது வருது தெரியுமா? எனப் பீற்றித் திரிந்து தங்களின் சுகங்களை இழந்து, அன்ன நடை பழகும் இக்காகங்களைக் கண்டு ஆஷிக் மனம் வெறுத்தே போனார். யாரைக் காணினும், நீர் இப்போது என்ன செய்கிறீர்? என்ற கேள்விக்கு அஞ்சி வீட்டிலேயே அடைந்து கிடந்தார். சல்மாவிற்கும் ஆஷிக்கின் நிலை யோசனையைத் தந்திருக்க வேண்டும்.

அவரின் சின்னப்பார்வை வேறுபாட்டிற்கும் காரணம் கண்டு பிடித்துவிடும் அவளுக்கு இவரின் மாற்றம் தெரியாமலில்லை. தான் ஏறக்குறைய ஆயாவின் நிலைக்கு மாற்றப்படுகின்றோம் என்பதில் சோகம் கொண்டாரா? அல்லது அவருடனான நெருக்கம் தனக்குக் கூட பேத்தி, மருமகளால் குறைந்து போய்விட்டதில் சோகம் கொண்டாரா? சல்மாவுக்கும் யோசனை வர ஒரு மௌனச் சூழல் தானாகவே அவ்வீட்டில் வந்து சூழ்ந்திற்று. ஆஷிக் 'எப்போதடா சந்தர்ப்பம் வாய்க்கும்' என்றிருந்தார். ஒரு முறை மகனுடன் ரெஸ்ரோரண்டில் ரீ சாப்பிடும் போது அதற்கான சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. முபாரக் கூட, இந்த நிலை உருவாகி வருவதைக் கண்டே இச்சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினானா? அவருக்குத் தெரியவில்லை.

"வாப்பா நீங்கள் சந்தோஷமாயிருக்கின்றீர்களா? "

"மகனே என்னை விடு. நீ சந்தோசமாக இருக்கின்றாயா?" பந்து மீளவும் எறிந்த இடத்திற்கே திரும்பிற்று. முபாரக் இதை எதிர்பார்க்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் வாப்பா சந்தேகம்? நிறையச் சந்தோசமாயிருக்கிறேன்."

ஆஷிக்கிற்குச் சிரிப்பு வந்த போதிலும் அவனை அது அவமதிப்பதாகிவிடும் என்பதால், அடக்கிய படியே கேட்டார்.

"மகனே சுகமென்பது இந்த டாம்பீகமான வாழ்க்கையுடன் தொடர்புடைய ஒன்றென்றா நீ நினைக்கிறாய்?"

"என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை"

"சரி இப்படிப்பார். இவைகள்தான் சந்தோசம் - சுகத்தை தருவதாயிருந்தால் இன்றைக்கு ஜப்பானிய இளைஞர்கள்தான் அதிகம் சுகம் பெற்றவர்களாயிருக்க வேண்டும். ஆனால், உலகிலேயே அதிக இளைஞர் தற்கொலை வீதம் அவர்களாகத்தானிருக்கிறது. அதாவது......சுகம் என்பது வேறொன்றாயிருக்க வேண்டும். மகனே! இங்கு எதுவுமே சரியில்லை என்று எனக்குப்படுகிறது."

"ஏன் வாப்பா"

"முகம்மது நபி (ஸல்) அவர்கள் ஹிறாக் குகையுள், புத்தர் அரச மரத்தின் கீழ், பதின்மூன்று வருடங்கள் மகாவீரர் காட்டினுள் சும்மாவே இருந்தார்கள். அதனால் அவர்களுக்குச் சுகம் கிடைத்தது. சுகம் பெற்றவர்கள் என்பதனாலேயே ராஜாங்கமெல்லாம் அவர்களுக்குத் தாழ்பணிந்து நின்றன. எனவேதான் யாரைக் காணினும் 'நீங்கள் சுகமா' என்கிறோம் நாம். அவர்களைப் பெற்ற ஆசியா இன்று லௌகீகம் சைத்தானைத் தேடி மேற்கே ஓடுகிறது. ஆனால் உண்மை தெரிந்த நானாவது அந்த ஆத்ம சுகமே பெரிதென நினைப்பது பிழையா மகனே! இங்கு எவனைப்பார்த்தாலும், 'நீ என்ன செய்கிறாய்' எனக்கேட்டு பணத்தின் பின்னே ஓடுவதில் சுகம் வருமா? பணத்தை விட சுகம் முக்கியமல்லவா மகனே!"

"ஒப்புக் கொள்கிறேன் வாப்பா, ஆனால் இது எந்த அளவு சாத்தியம்?" முபாறக்கின் சந்தேகம் ஆஷிக்கில் ஆத்திரம் ஏற்படுத்தவில்லை அவனது வயதுக்கு அந்தக் கேள்வி நியாயமே எனக் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகனே இல்லறத்திறூடே சுகம் என்பது மிகப் பெரிய விஷயம். குடும்பத்தைக் கோயிலாக்கி தாம்பத்தியத்தை தெய்வீக மாக்கியவர்கள் நாம். அங்கீகரிக்கப்பட்ட விபச்சாரம் என்கிறான் இவன். அழகினை மறைத்து வைத்து ஆராதித்தவர்கள் நாம். ஆனால் இவர்கள் மறைத்தலுக்காகப் போர்த்திய உடுப்பே காமத்தை சைத்தானைத் தூண்டிநிற்பதாகி விட்டிருக்கிறது. பெண்ணைப் போகப் பொருளாக்கி எல்லாவற்றையுமே திறந்து வைத்திருக்கிறார்கள். எவ்வளவோ உணர்வுபூர்வமாக இனிமையுடன் பரிமாறப்படவேண்டிய முத்தத்தைக் கூட நாளாந்தக் கடமைகளில் ஒன்றாக்கி விட்டிருக்கிறார்கள் பார்?"

முபாறக்கின் தலை தாழ்ந்தது. கூடவே மெதுவான குரலில் வாப்பாவை நோக்கி,

"வாப்பா நீங்கள் சொல்வது சரியே எனினும் நம்மவர் முழுக்கவே ஆசைப்பட்டு இங்கு ஓடிவரும்போது நாம் மட்டும் எப்படிப்பா பின்வாங்க முடியும். நான் நிறைய அடி வாங்கி விடுவேனோ என்று பயப்படுகிறேன்." என்றான்.

"மகனே உனது நிலையை என்னாலும் ஒப்புக் கொள்ள முடிகிறது. இந்த ஏசிக்காரும் செலூலர் போனும் வசதிகளும் இப்போது பொய் என்று சொன்னால் கிடைக்காதவனுக்கு அது கேலியாகவே படும். இந்த லோகத்தின் பொருள் பொய்யடா என்பதை பொருள் கிடைத்தவனால்தான் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். எனவே ஆத்ம சுகம் என்பதில் தெளிவு இனிமேல் இவர்களுக்குத்தான் இலகுவானதாய் இருக்கும். பொய்மையை இவர்களாலேயே விரைவாய்ப் புரிந்துகொள்ளமுடியும். எனவே கிழக்கில் இனி சூரியன் உதிக்காது. மேற்கிலிருந்துதான் உதயம் இலகுவாய் வெளிப்படும். அது கஷ்டமாயிராது."

பொது நூலகம் நகர சபை கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரிவாப்பா இதில் உங்களது சுகக் குறைவு என்ன?"
"மகனே! தயவு செய்து எங்களை விட்டுவிடு. என்னாலோ அல்லது எனது பாகமாகிவிட்ட உனது தாயாலோ இந்த இயந்திரத்துடன் ஒன்ற முடியாது. ஜுனைதாவின் இயந்திர வாழ்க்கை முறை சல்மாவில் சலிப்பை ஏற்படுத்தி வருவதாகத் தெரிகிறது. நான் சுகமின்றி இருப்பதாலும்கூட அவள் கவலைப்படுகிறாள் என்று நினைக்கிறேன். எனவே பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்பதைப் போலாகிவிட்டது. எங்களது நிலைமை. மகனே தந்தைக்கு ஆற்றும் கைம்மாறு என்ற ரீதியில் மன முரண்பாடுகளுக்கு உட்படாதே. எனது மகனை நான் எந்த அளவு அறிவேனோ அதே அளவு என்னை நீ அறிந்துள்ளதாக நம்புகிறேன். நீ வழங்கும் இந்தச் சௌகரியங்களை விட ஆத்ம சுகம் என்பதைப் பெரிதாக நான் நினைக்கிறேன். அது இங்கு சாத்திய மில்லை."

ஆஷிக் சிகரட்டை அணைத்து ஆஷ் ரேயில் போட்டபின் மகனை தீர்க்கமாக நோக்கினார். முபாறக்கின் முகம் சிவந்தது. மனம் கனத்த "நல்லது மகனே எனக்கும் கூட அது பெருமையே"

"வாப்பா ஒரு வருடமாவது எங்களுடன் இருப்பீர்கள் என்று எதிர்பார்த்தேன்."

"நிச்சயம். நீ ஊருடன் வந்து சேர். ஒன்றாகவே நாம் சுகம் தேடலாம்."

ஆஷிக் மகனைப் பார்த்துச் சிரித்தார். மகனும் சிரிப்பில் பங்கு கொண்டான். வாப்பாவின் வழி காட்டுதலின்படி தன்னாலும் கூட இனிமேல் மனதில் எதிர்ப்பின்றி, வெறுமனே அங்கீகரிப்பதன் மூலம், தன்னை உடன்பட வைப்பதன் மூலம் சுகம் பெற முடியும் என்ற நினைப்பு வந்தது. மனதில் பலம் வந்தது. அடுத்த தினம் அவர்களுக்கான பயண ரிக்கட்டுக்களை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் வந்தது. மனசு இலேசாயிற்று அவனுக்கு. மனதில் பாரம் குறைந்ததாக அவன் உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் வழியது

வீட்டில் இருந்து வெளிக்கிடும்போதே மனதில் பட்சி சொல்லிற்று. பாடசாலையில் ஏறும்போது அதிபர் பிந்தி வந்த மாணவர்களைத் தண்டித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. இடையிடையே ஏச்சுவேறு. அதில் ஏழெட்டு முறை 'நாயே அல்லது நாயிர மகனே' என்ற வார்த்தைகள் விழுந்திருக்கும். எனக்கு இன்று முழிப்பு சரியில்லை. வரவுப்புத்தகத்தைக் காணவில்லை. என்னைப் போலவே இன்னும் மூன்று ஆசிரியர்கள் பிந்தி வந்தார்கள். அதனால் ஓரளவு மனதில் நிம்மதி பிறந்தது. இதென்ன அடாவடித்தனம் என்று பட்டது எனக்கு. மனம் விசாரமாயிற்று.

அதிபர்-சாதிக் மீது இயல்பாகவே ஒரு பிடிமானம் எனக்கு இல்லாமல் போய்விட்டிருந்தது. அந்த மனிதரின் தோற்றம், நடவடிக்கை, கட்டுப்பாடு என்ற பெயரில் நிகழ்த்தும் அடாவடித்தர்பார் அல்லது இவையெல்லாமே சேர்ந்து என்னை விருப்பம் கொள்ள விடாமல் செய்து விட்டிருக்க வேண்டும். 'ஒரு மனிதருக்கு வீடும் காரியாலயமும் நிம்மதி பயப்பதாக இருக்க வேண்டும். ஒன்றில் ஏற்படும் பாதிப்பு மற்றையதையும் அலங்கோலப்படுத்தி விடும்' என்கிறார்கள். ஒன்று குழம்பியாயிற்று. அடுத்ததுவும் குழம்புமா என்பது தெரியவில்லை. அதிபர் தண்டனை வழங்குவது இன்னும் முடிவுக்கு வரவில்லை.

அவர் விசாரிக்கும் முறையே அலாதியானது. அதைவிட அவர் முகம் இன்னும் விஷேசமான ஒன்று. முகம் என்பதே முடிவளர்ப்பதற்காகத்தான் என்றமாதிரி முகம் முழுக்க மயிரால் மூடிக்கிடக்கும் அவருக்கு. நல்ல காலம் நெற்றியிலும் மூக்கிலும் வளர முடியாது போயிற்றே என்றுபடும். பிரம்பின் ஒரு முனை கையிலும் மறு முனை நாடியிலும் புதைந்திருக்க நிலைகுத்திய பார்வையுடன் மாணவர்களை அவர் விசாரிக்கும்போது பயத்தில் நடுங்கியபடி அவர்கள் நிற்பர். பேசவே அவர்களுக்கு நா எழாது. இந்தச் சின்ன வயதில் பயந்த மனநிலையைத் தோற்றுவிப்பது எந்தத் தெய்வத்திற்கு அடுக்குமோ தெரியவில்லை. எனக்குக் கவலையாயிற்று. அதிபரினை இந்த நிலையில் காணும்போதெல்லாம் நரியொன்று எனது மனசில் வந்து போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான செவலை நரி அது. இந்தக் கலரில் நரியெதனையும் நேரடியாக நான் பார்த்ததில்லை. ஆனால் தொலைக்காட்சியில் 'றொபின் ஹூட்'டுடன் வரும் நரி இதைப்போலத்தான் என்றுபடும். சாதிக்கை நரியாக நினைக்குமளவு எதனால் வெறுப்புக் கொண்டிருக்கிறேன் நான்? எல்லா மனிதர்களையும் எல்லோருக்குமே பிடித்துப்போக வேண்டுமென்பது என்ன சட்டமா? அல்லது இயல்பா? பார்த்தவுடனேயே எந்தவித பழக்கமுமின்றியே நாம் ஒருத்தரையும் வெறுத்ததில்லையா? அது போலத்தான் இது என நினைத்தேன் ஆனால் அதையும் முழுக்கவாய் நம்ப முடியாதிருந்தேன் நான்.

முன்னைய அதிபர் மீது அடாண்டமாய்ப் பழி சுமத்தி-கதைபுனைந்து இது அதிபரான முறை எனக்குப் பிடிக்கவில்லை; நேர்ப் பார்வையின்றி எப்போதும் குனிந்த தலையுடன் கோழைத்தனத்தை மறைத்தபடி அது உலாவருவது பிடிக்கவில்லை; தன்னை அதிபராக்கத் துணைபோனார்கள் என்பதற்காகவே சிலருக்கு அதீத சலுகை வழங்குவதை சகிக்க முடியவில்லை. அதிலும் புகழ்ச்சிக்காய் மார்க்க லேபலை தலையிலும் நாடியிலும் சூட்டியபடி நெஞ்சில் வஞ்சகமே குடிகொண்ட இஸ்லத்துடனான அதன் தோழமை ஏற்க முடியாததாயிற்று எனக்கு. சரி, எனக்குச் சார்பாக சாதிக் நின்றால் ஏற்பேன் என்கிறீர்களா? நான் அதையும் நம்பமாட்டேன். உள்ளதை உள்ளபடியே ஏற்றுக் கொள்வதுதான் சத்தியமானது என நம்பினேன். அப்படியானால் எனது வெறுப்பும் வேஷமாய்ப் போகக் கூடும். இந்தக் கால கட்டத்தில் சாதிக்கினால் நிறைய மனச்சிக்கலுக்குள்ளாகி போயிருந்தேன்.

அது சரி, இப்போது என்ன செய்வது? இன்றைக்கு மாணவர் மன்றமும் இருக்கிறது. கோபித்துக் கொண்டு கையொப்பம் இடாமல் வீட்டுக்குப் போய் விடலாம்தான்; ஆனால் ஆஷிக்கின் அபிநயப் பாடலைத் தவறவிட எனக்கு மனம் விரும்பவில்லை. கையொப்பமிடாமலேயே வகுப்பறைக்குச் சென்றேன். நிகழ்ந்தவை எதுவும் மாணவர்களில் பாதிக்கும்படி என்னை வழிநடாத்தக் கூடாதென இறைவனை வேண்டியவனாக பாடத்தை துவங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வகுப்பில் எந்த ஆசிரியருக்கும் பிடித்தமான மாணவர்கள் சிலர் இருப்பர். அவர்களுக்காகவேதான் இன்னமும் கற்றல்-கற்பித்தல் செய்முறை ஒரு உயிரோட்டத்துடன் இருப்பதாக நான் நினைக்கிறேன். இல்லாவிட்டால் Y=MX இன் வரைபு உற்பத்திக் கூடாகச் செல்லும் என்பதை இருபது வருடமாக ஒப்புவித்துக் கொண்டே வருவது எவ்வளவு அலுப்பான விஷயமாய் இருக்க வேண்டும். ஆசிரியர்கள் எந்த விருப்பு வெறுப்புமற்று எல்லா மாணவர்களையும் ஒரே பார்வையில் வைத்திருக்க வேண்டும் என்கிறீர்களா? சுத்தமான பொய்யது. மனிதன் படைப்பிலேயே விருப்பு வெறுப்புகளுக்கு உட்படுத்தப் பட்டவனாகவே படைக்கப்பட்டவன்.

இங்கு எல்லா ஆசிரியர்களும் மகான்களல்ல; தேவர்களுமல்ல. அன்று ஆஷிக் வகுப்பில் கவலை முகத்துடன் இருந்தமை எனது கவனத்தில் வந்தமைக்கு இதுதான் காரணம் என நினைத்தேன். படு சுட்டி அவன். பிஞ்சு முகம். அவனது துடினத்தை நான் ரசிப்பதுண்டு. அவை எப்போதும் புத்திசாலித் தனமானவையாகவே இருக்கும்; எடிசன் கோழி முட்டையை அடைகாத்தது மாதிரி. அவனது அறியும் வேட்கை என்னை உற்சாகமூட்டும். அவனது பெற்றோரின் ஏழ்மையிலும் உயர்வான பண்புகளினால் நான் ஆகர்ஷிக்கப் பட்டிருந்தேன். மேலே பாடத்தைக் கொண்டு செல்ல எனக்குக் கஷ்டமாக இருந்தது. ஆஷிக் சுகமில்லை என்பதனால் நான் பாடத்தில் விருப்பம் குன்றியவனானேன். எனினும் கடமையை முன்னிட்டு உப்புச் சப்பின்றி இயங்கினேன்.

இடைவேளைக்கு மணியடித்தாயிற்று. பனிரெண்டு மணிக்கு மாணவர் மன்றம் துவங்கிவிடும். அதற்கிடையில் ஆஷிக்குடன் பேச நினைத்திருந்தேன். இப்போதைக்கு சந்திக்காது போனால் இரவு எனக்கு தூங்கக் கஷ்டமாக இருக்குமெனப்பட்டது. ஒரு மாணவனை அனுப்பி அவனை வரவழைத்தேன் திடீரென என்ன பிரச்சினை எனக்கேட்டு வைக்க முடியாது. அந்த வயதுக்கு அவனாகவே சொல்ல வைப்பதாக பேச்சை அமைக்க வேண்டும். அனேக முன் ஜாக்கிரதை உணர்வுடன் பேச்சைத் துவங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆஷிக் பாடமெல்லாம் எப்படி?"
"நல்லம் சேர்"
"ஏதும் பாடத்துல விளங்கல்லைண்டா வந்து கேக்கனும், சரியா?"
"ஓம் சேர்"
"ஆஷிக்கிட நல்ல பிரண்ட் ஆரு?"
"முர்ஷித் சேர்"
"ஓ! நல்லம் இன்றைக்கு மாணவர் மன்றத்துல நிகழ்ச்சி ஏதும் செய்றதா?"

ஆஷிக் எந்தவிதப்பதிலும் சொல்லவில்லை அவனது தலை தானாகவே தாழ்ந்து கொண்டது. பிரச்சினையின் பொறி ஓரளவு படிபட்டது எனக்கு.

"ஏன் ஆஷிக் பதில் சொல்லன்"
"அபிநயப்பாடல் இருந்தது சேர். இப்ப இல்ல"
"ஏன் ஆயத்தமாகல்லியா?"
"அதில்ல சேர் ஷரீன் செய்யப்போகிறதால என்ன விலக்கிட்டாங்க"
"எந்த ஷரீன்?"
"இஸ்ஸத் சேர்ர மகன்"
"எப்ப விலத்தீங்க?"
"முந்த நாள் சேர்"

எனது மனம் விண்டு போயிற்று நரியின் சூது இதிலும் விளையாடுகிறதே என்பது காண மனசு கவலையில் கிடந்துழுதது. ஆஷிக்கின் குரலை நான் - நானென்ன இந்த மாவட்டமே அறிந்ததுதான். சொற்களுக்குப்பாவம் பிடித்து அவன் அபிநயிப்பது கானின் மனசு காற்றில் மிதக்கும். கவலைகள் மறந்துபோகும். என்ன கொடுப்பினைக்குரிய குரலது. அதையா தண்டிக்கிறார்கள்?. என்ன கல்வி முறையிது? எதற்கு இந்த கயவாளிகளைக் கல்விமான்களாகக் கொண்டாடுகிறது இந்த சமூகம்? எங்கு தவறினோம் நாம்? கற்றவர்களிடம் ஒழுக்கத்தையும், நேர்மையையும் காண முடியவில்லை என்னால்? இந்தக் கல்வித்திட்டமே பச்சை சுயநலத்தையும் போட்டியையும்தான் வளர்க்கத்துணை போகின்றனவா? தயிர்முட்டிகளைத் தூக்கிக் காரியம் சாதிக்கும் கேடுகெட்ட நக்குவாரத்தனம் கொண்ட படித்த சமூகம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வையிலுள்ள இவர்களால் எப்படி ஒரு ஆரோக்கியமுள்ள சமூகத்தை வளர்த்தெடுக்க முடியும்? பழைய எமது குருக்களை எல்லாம் தலையில் வைத்துக் கொண்டாட வேண்டாமா நாம்? தங்களை தெய்வத்திற்கு ஒப்பானவர்களாகக் கருதிக் கடமை செய்தவர்கள் அவர்கள், யாரிடம் திறமை இருந்த போதும் இனம், மதம், இரத்தம் என்பதெல்லாம் கடந்து சேவையை உயிர் மூச்சாகக் கொண்டிருந்தவர்கள் உருவாக்கிய பிள்ளைகளா இவர்கள்? ஆஷிக்கை வகுப்பிற்கு அனுப்பிவிட்டு, ஓய்வு அறைக்கு வந்தேன். மனசும், உடலும் பரபரப்புக்குள்ளானது. ஒரே இரைச்சலாயிருந்தது ஆசிரியர்களின் ஓய்வு அறை. அவர்களிடம் கதைப்பதற்கு நிறைய விஷயங்களிருந்தன. வளரும் வயலுக்கு நீர்ப்பாய்ச்சல், புல்லுக்கு எண்ணெய், கட்சி மாறிய கொந்துராத்துக்காரர்கள், நெல்விலையின் ஏற்ற இறக்கம், சக ஆசிரியரின் நடத்தையில் குறைகாணும் காழ்ப்புணர்வுக் கதைகள், நாலாந்தர சினிமாவின் இரட்டை வசன ஊத்தைப் பகிடிகள், அழகிய லைலா ரம்பாவின் தொடையழகு, கிரிக்கெற்றின் சாதனைப் பட்டியல், நடிகை எந்த நடிகனுடன் தொடுப்பு என்ற பத்திரிகைச் செய்தி...... அறை முழுதும் சந்தோச ஆர்ப்பரிப்பில் மூழ்கிக் கிடந்தது.

ஆஹ்.......ஹா...........ஆஹ்...........ஹா
ஆஹ்.......ஹா...........ஆஹ்...........ஹா

எனக்கு வெறுப்பாயிற்று. மேலும் இருந்தால் பைத்தியம் பிடிக்கும்போல் இருந்தது. அத்துடன் எனது மனக்கவலையை ஓரளவாவது குறைக்குமிடமாகவும் அது இருக்கவில்லை. ஆஷிக்கிற்கு ஏதாவது நிவாரணம் தேடிக்கொடுப்பது நல்லதென நினைத்தேன். இன்னும் பத்து நிமிடத்தில் மாணவர் மன்றம் துவங்கிவிடும். அதற்கிடையில் அதிபரிடம் பேசிச் சரிக்கட்ட முடியும் என்ற நம்பிக்கையும் அற்றுப்போய் விட்டிருந்தேன்.

நரியிடம் மட்டுமானால் பேசிச் சரிக்கட்ட முடியும்; இந்த சூது அதனையே விழுங்கும் என்பதை விளங்கப்படுத்தி விட முடியும் ஆனால் நரியை மட்டுமன்றி நான்கு நண்பர்களையும் சரிக்கட்டுவதென்பது சரிப்படாதவொன்று. ஒன்றும் செய்ய இயலாதவனாய்ப் போனேன் நான். அடிமைப்பட்ட மனசுதான் அடக்கி ஆழ நினைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு சாதிக் எதற்கு அடிமை?. இவரின் ரொபின் ஹூட் யார்? ஆணவ வீம்புக்கான போக்கிற்கு காரணம் என்ன? பணம், மனைவி, அல்லது அதனது நெறிபிறழ்ந்த போக்கிற்கு வடிகால்தேடி வேஷம் போடுகிறாரா? அப்படியானால் இரக்கப்பட வேண்டியவராகிறார் சாதிக். தன்னை அறியாமலேயே 'எல்லாக் கோட்பாடு கொள்கைகளுக்கும் அப்பாற்பட்டவன் நான்' என ஆசிரியர் கூட்டத்தில் பேசிய பேச்சின் உண்மை அதுவாயிருக்குமா? பணத்திற்காக ஆலாய்பறந்தபடி, நிம்மதி இழந்து இச்சையில் உழலும் மிருகங்களுக்கு கோட்பாடும் கொள்கைகளும் தேவையில்லைதான். இதன் மூலம் அது தன்னையே தாழ்த்திப் பறைசாற்றுவதை அறியாது போயிற்றே என வேதனை கொண்டேன்.

குட்டித்தூக்கம் கலைந்து எழும்ப ஐந்து மணியாயிற்று எனக்கு ஒரு நல்ல- அப்படியும் சொல்ல முடியாது ஜனரஞ்சகமான ஒரு நண்பனிருந்தான். அவனை இன்று சந்திக்க அவாக்கொண்டிருந்தேன். எழுவட்டுவான் மைதானத்தில் அல்லது சின்னப்பள்ளிவாயலின் அருகே உள்ள வாகை மரத்தின் கீழ் ஆசிரியர்கள் கூட்டம்கூட்டமாக அந்திப்பொழுதுகளை கழிப்பது வழக்கம். அதுவும் தப்பினால் அவர்களிடம் உள்ள சரக்குகளுக்கு மேலும் தகவல் வேண்டி (ஹீரோத்தனம் எதிர்பார்த்து) நூலகத்தில் நாலாந்தர சஞ்சிகைகளைப் புரட்டிக்கொண்டிருப்பார்கள். நல்ல காலம் நண்பன் என்னைத் தேடும்படி வைக்கவில்லை. மைதானத்தில் வளைய அமைப்பில் இருந்த ஆட்களிடையே அவன் காணப்பட்டான் என்னைக் கண்டதும் எழுந்து வந்தான்.

அவனும் நானுமாக மைதானத்தின் ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டோம் வழமையைப்போல் ஆறு தெரியும்படியாக நான் உட்கார்ந்தேன். அதன் மறுபுறம் தாஜ்மஹாலின் முகப்பை அடியொற்றியதாக ஒரு பள்ளிவாயல் இருந்தது. மேற்கின் மங்கிய

சூரிய ஒளியால் நீர்ச்சுனையில் ஏற்படுத்திய பள்ளிவாயலின் விம்பம் அழகாய் இருக்கும். ஆனால் அன்றைக்கு நான் அமைதியற்றவனாய் இருந்தேன். எனவே எந்த இயற்கை அழகும் என்னைக் கவரும் படியாய் இல்லை. வானத்தின் செந்நிறக் கீற்று அழகைத் தரவில்லை; எனக்கு ஆஸ்பத்திரிக்கு செல்லும், வரும் பெண்கள் அழகாய்ப் படவில்லை. எனக்கு நண்பன் யூசுப்பிடம் பாடசாலையில் நிகழ்ந்த அனைத்து சம்பவங்களையும் ஒப்புவித்தேன். எனது பேச்சில் அவன் நியாயம் கண்டான். ஆனால் எல்லா ஆசிரியர்களின் மீதான ஒட்டுமொத்த விமர்சனத்தை ஏற்றுக்கொண்டானில்லை.

"தயவு செய். உனது ஆத்திர உணர்வுகளால் ஒரு பக்கமே பார்க்க முனைகிறாய்"

அவன் என்னை ஆறுதல் படுத்த முயன்றான் 7268

"இல்லை யூசுப். ஏன்டா இந்தத் தொழிலுக்கு வந்தோமென்று இருக்கிறது"

"நீ அதிலேயே மூழ்க முயல்கிறாய். எரிந்து போவாய். முதலில் உனது விருப்பத்தைத் தெரிவு செய், அதன் பின் ஈடுபாடு கொள்ளப்பார்."

"என்ன மடத்தனமாகப் பேசுகிறாய் நீ. கடமையில் ஒன்று வேண்டாம் என்கிறாயா?"

"அப்படிச்சொல்லவில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாக்கு ஒன்று உள்ளது. சின்னப் பிள்ளைகளிடமும், பெண்களிடமும் அதிகநேரம் செலவிடுபவனின் புத்தி மங்கிப் போய்விடுகிறதென்று."

"இதைக் கேள்விப்பட்டால் துடைப்பத்தைத் தூக்கிக் கொண்டு வரப்போகிறார்கள் அவர்கள்"

சிரித்தபடியே யூசுப் கூறினான். "தயவு செய்து விஷயத்தை திசைதிருப்பி விடாதே. மாணவர்களுக்கு கற்பிக்கும் எல்லையுடன் மட்டும் நின்றுவிடாதே. உனது இந்தக்குற்றச் சாட்டுக்கூட எதனால் எழுந்தது என்றுபார்? ஒரு வகுப்பறையில் அதி புத்திசாலி யார்? ஆசிரியர். அங்கு அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கு மாற்றுக்கருத்து என்பதே இல்லாத சூழல். அவரது வாழ்நாளில் பெரும் பகுதிப்பொழுதுகள்- 'நான் பெரிய புத்திசாலியாக்கும்' என்ற நினைப்பிலேயே கழிந்து விடுகிறது. இதனால் வெளிச்சூழலுடனும் பெரிய அறிவாளி என்பதாகப்பழகுகிறார். மற்றவர்களும் சிறந்த கருத்து, அறிவுகளுடன் இருக்கிறார்கள் என்பதை ஏற்க முடியாதவர்களாய் போய்விடுகிறார்கள். அதனால் உனது எல்லையை விரிவு படுத்து. தேடலை நிறுத்திவிடாதே. உலகின் பேர் பெற்ற - தாக்கமேற்படுத்திய நூறுபேரின் பட்டியலைப்பார். அவர்களில் பெரும் பகுதியினர் ஆசிரியர்களாகவே இருக்கக் காண்பாய்"

"எனக்கு உனது உபதேசம் வேண்டாம். நான் காயப்பட்டிருக்கிறேன் என்பதை உணரவில்லையா நீ?"

"இதைச் சொல்லி அரட்டிக் கொண்டிருப்பது எப்படி அதற்குத் தீர்வைத்தரும். எல்லாப் பேதங்களையும் களைந்து நல்ல மனிதர்களை உருவாக்க வேண்டியவர் களே இந்தமாதிரி வாதங்களில் சிக்குண்டு கிடப்பது வேதனைக்குரியது. அதற்கு நீ தவிக்கின்ற தவிப்பெல்லாம் நிவாரணம் வழங்கிவிடும் என்கிறாயா?"

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"நீ ஒரு அரிஸ்டோட்டில், பேர்னாட்ஷா, உமர் முக்தார் ஆகவேண்டாம். ஆகக் குறைந்தது காயப்பட்ட மாண வனுக்கு ஒத்தடம் வழங்கக்கூடிய நிவாரணியாகவாவது இருக்கலாமே"

"இன்னமும் எனக்கு தீர்வே தரவில்லை நீ"

யூசுப், நான் இன்னது செய்வது நல்லதென சொன்னான். அது நல்ல யோசனையாகவே எனக்குத் தோன்றியது. ஆஷிக் இதன் மூலம் ஓரளவு மன விகாரமின்றி இயல்பு நிலைக்கு திரும்பக்கூடும் என்ற நம்பிக்கை வந்தது. கடைசியில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பார்த்தாயா எனக்குக்கூட ஒரு ரொபின் ஹூட் தேவைப்படுவதை" என்றேன் நான். அவன் சிரிக்கத் துவங்கினான். நானும் சிரித்தேன். எங்கள் இருவரிடையே நிலைமை சுமுகமாயிற்று.

அன்று சனிக்கிழமை ஐந்தாம் ஆண்டு மாணவர்களை மட்டும் பாடசாலைக்கு வரவழைத்திருந்தேன். எனது சிறியதொரு உரையின் பின்னால் நிகழ்ச்சிகளை மேடையேற்றினேன். இறுதி நிகழ்வாக ஆஷிக்கின் அபிநயப்பாடலை அரங்கேற்றினேன். மொத்த சபையே அதில் கட்டுப்பட்டு நின்றது. நானும் மயங்கி நின்றேன். சபை கைதட்டி ஆரவாரம் செய்த போதுதான் நிகழ்ச்சி முடிந்தமை தெரிந்தது எனக்கு. ஆஷிக்குக்கென்று வாங்கி வைத்திருந்த பரிசுப்பொருளை அவனிடம் ஒப்படைத்தேன். 'இது போதும் எனக்கு' என்று மனசு சொல்லிற்று. மனசில் நிறைவு கிடைத்ததான உணர்வைப் பெற்றேன்.

திங்கட்கிழமை அதிபரை சந்திக்குமாறு கேட்கப்பட்டேன். அவரது அறைக்கு வந்தபோது அவரது சகபாடிகள் அருகிலிருக்க அவரின் விசாரணைக்குள்ளானேன். அவரது நிருவாகத்திற்கு இடைஞ்சல் செய்வதாக என்மீது குற்றம் சுமத்தப்பட்டது. நான் எதுவும் பேசவில்லை. நான் ஏற்கனவே மௌனமாய் இருந்து என்வழியே இவர்களை வெல்வதுவே சிறந்ததென முடிவு செய்திருந்தேன். அதிபர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். எனது பதில் கிடைக்காமையால் திடீரென சபை மௌனமாயிற்று.

"நான் இப்போது போகலாமா?" எனது கேள்வி இன்னும் ஆத்திரத்தை ஊட்டியிருக்க வேண்டும்.

"உ ஹூ°ம் ......" அதிபரின் உறுமலுடன் விடுவிக்கப்பட்டேன். அப்போதும் அதிபரை நிமிர்ந்து என்னால் பார்க்க முடியவில்லை. ஏனெனில் எனது மனதில் அவரின் உடம்பு பூராகவுமே மயிர் வளர்ந்துவிட்டதான உணர்வு என்னில் இருந்ததாலாகும்.

தினமணி 15.05.99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

01. அல்-ஹாஜ் S.H.M. ஜெமீல்.
BA (Sp). Dip. in. Edu, MA.

02. சகோதரர்- Dr. S. நஜிமுதீன்.

03. 'வித்யா ஜோதி' அக்கரைப்பற்று முஸ்லிம் தேசிய பாடசாலை முன்னாள் அதிபர்
MA. உதுமாலெப்பை BA. Dipin Edu.

04. நண்பர் J. ஹாஸிம். - TECHNO VS

05. AS. ஹபீல் அஹ்மட்.

06. MA. நசீர்

07. மறுமலர்ச்சி சமூக மேம்பாட்டமைப்பு.

08. தினக்குரல்.

09. வீரகேசரி.

10. தினமணி.

11. ஈஸ்ரன் டைம்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் படைப்புக்கள்

01. நல்லதோர் வீணை செய்தே.....(சிறுகதைத் தொகுதி)
02. பெண்ணே போற்றி.....(சிறுகதைத் தொகுதி)
03. நச்சு வளையம் .....(நாவல்) ~ அச்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ. இராஜசயா பார்வையில்:

சும்மா இருத்தலே சுகம் சிறுகதை பற்றி
இது ஒரு வித்தியாசமான சிறுகதை. ஒரு தத்துவ நோக்கு.
இந்தக் கதையினது உரு சாதாரணமானதாகத் தோன்றினாலும் இதன் கரு வளம்மிக்கதாக இருக்கிறது. தந்தைக்கும் மகனுக்குமிடையே நடக்கும் உரையாடலில் சுகம் என்பதன் தேடுதல் சீராக விரிகிறதைக் காண்கிறோம். பணத்தின்பின் ஓடுவதில் சுகம் வந்து விடாது என்பதை ஆஷிக் நயம்பட உணர்த்துகிறார். தாம்பத்தியம் பற்றி அவர் கூறுவது நமது சிந்தனைக்கு நல்ல விருந்து.

ஆஷிக்கினுடைய சிந்தனைத் தெளிவு, நிதானம் என்பன கதைக் கருவுக்குச் செழுமையூட்டுகின்றன. ஆஷிக் பாத்திரப்படைப்பு நன்று.

சும்மா இருத்தலேசுகம் என்பது ஞானிகள் துறவுநிலையில் நின்று கண்ட தத்துவம். அதன் பொருள் வியாபகத்தைச் சுருக்கி, "செயற்படு வரும் பயனை ஏற்றுக்கொள்" என இன்றைய உலகியல் வாழ்வுக்குப் பொருந்தும்படியாக அதனைக் கதை மகுடமாக்கியிருக்கிறார் கதாசிரியர். இதமான மொழிநடை; சீரான கதையோட்டம்.

தினக்குரல். வாரமஞ்சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை பொது நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெல்லிசைப்பாங்கான நளின நடையில் யதார்த்தம் மிளிரும் உணர்ச்சிக் கதை வல்லுனர் ஜனாப் எஸ்.நஸீறுதீன். இவர் ஒரு பட்டமேற்கல்வி டிப்ளோமாவுடனான உயிரியல் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர். ஆழ்ந்த விஞ்ஞான அறிவும் இவர்தம் ஆசிரியரனுபவமும் நேர்த்திமிக்க கதைகளை சிணைப்படுத்தித் தந்துள்ளன.

இவர் 'நல்லதோர் வீணை செய்தே...' என்ற மகுடத்தில் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டு இலக்கிய வானில் முத்திரை பதித்தவர். இலக்கியம், அவ்வக்கால நிகழ்வுகளின் மூலம் சமூக விழுமியங்களையும் ~ வளைவு நெளிவுகளையும் நிழல்படுத்திக் காட்சிப்படுத்துகின்றதென்பதற்கு 'பெண்ணே போற்றி .....' எனும் இத்தொகுதி ஒரு நேர் சான்று. பெண்ணியல் வாதம் பேசப்படும் பின்னணியில் இச்சிறுகதைத் தொகுதி ஒரு மகத்தான பங்களிப்பு.

'பேசிக்கொண்டே கதைகளைப் பிரசவிக்க இயலும்' என்ற நவவார்ப்பு இவருக்கேயுரிய ப்ரிய கதைப்பின்னல். மனதை உருக்கும் சம்பவங்களின் கதைமாந்தர்கள் பற்றிய கூர்மையான பார்வையில் ஆன்மீகம் பளிச்சிடுகிறது; மனிதநேயம் விரவிக்கிடக்கிறது.

இவரது படைப்புகள் எனக்கு மகிழ்ச்சியையும் மன நிறை தருவன. தேர்ந்தெடுத்துத் தீட்டப்பட்ட சித்திரங்களே இக் கதைகள். வாசகர் தத்தம் புலக்கண் முன் நிறுத்திப் பார்க்கக்கூடியதாக கதை படைத்திருக்கும் இவரைப் பாராட்டுகிறேன். எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**எம்.ஏ.யூ.லெப்பை**
**(வித்தியாஜோதி)**
அக்கரைப்பற்று தேசிய பாடசாலை முன்னாள் அதிபர்
தொ.பே.067-77614

29-08-1999

Union Place, Akkaraipattu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org